கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI 6.1.2002
ரூ. 6.00



இரண்டு பேர், இரண்டு பொக்கே, ஒரு குறும்பு!

கல்கி

அடுத்த இதழ்

குடும்பச் சிறப்பிதழ்



ஒரு பெண்ணே, ஒரு பெண்ணைப் பற்றி...

சங்கரியின் நாட்குறிப்பு

இதை
எழுதுபவரும்
பிரபல
பெண்மணிதான்!

- மினி தொடர்

புதிய பகுதி

பிரபல பத்திரிகையாளரின்
அனுபவக் கடலில்
நினைவலை நீச்சல்!

சுவடுகள்

வாரந்தோறும்
ஒரு மூலிகை.
அழகாய் நலம்
விசாரிக்க என்ன
செய்யணும்..?
சொல்லித் தருகிறது...

மூலிகை கேலரி



இந்த வாரம்

அட்டைப்பட
குறும்பு....
பக்கம் 88





சஸ்பென்ஸ் அம்மா!

"விடுதலை, விடுதலை" என்று தனி நீதிமன்றத்தை விட்டு குஷியாக வெளியே வந்த ஜெ.வை 'ஆண்டிப்பட்டியில்தானே போட்டியிடப்போகிறீர்கள்?' என்று நிருபர்கள் கேட்டபோது, "பிறகு சொல்கிறேன்"என்று 'பொடி' வைத்துவிட்டு மீண்டும் ஹைதராபாத் பறந்துவிட்டார்.

"ஆமாம்... ஆண்டிப்பட்டியில்தான்" என்று சொல்லிவிட்டால், எதிர்க்கட்சிகள், தங்கள் யுக்தியை வகுப்பதற்கு அதிக காலம் கொடுத்தாற்போல ஆகிவிடும். எனவே மனு தாக்கலின் கடைசி நாள் வரை சஸ்பென்ஸாகவே வைத்திருக்க அம்மா விரும்பலாம்" என்று சொல்கிறார்கள் ஆளுங்கட்சிப் பிரமுகர்கள்.

"இல்லையில்லை... ஆள் பலமும் அதிகார வட்டமும் ஆளும் கட்சிப் பிடிக்குள் இருக்கும்போது எந்தத் தொகுதியிலும் வெற்றியைக் "கைப்பற்றும்" வல்லமை அ.தி.மு.க.வுக்கு உண்டு. எனவே மற்ற இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவதைப் பற்றி கூட அவர் யோசிக்கலாம்" என்கிறார்கள் சில எதிர்க்கட்சிப் பிரமுகர்கள்.

தி.மு.க. தன் பங்குக்கு ராதிகாவை களமிறக்கி, ஜெ.வை கதிகலங்க வைக்கலாம் என்கிறார்கள். தங்கபாலுவும் – யசோதாவும் ஜெ.வுக்கு ஆதரவாக தனி ஆவர்த்தனம் வாசிக்கத் துவங்கிவிட்ட நிலையில், தமிழ்நாட்டில் காங்கிரஸை கரை சேர்க்க நினைக்கும் இளங்கோவன், "வேட்பாளர் போட மேலிடம் அனுமதி கொடுக்குமா?" என்று விழித்துக் கொண்டிருக்கிறார்.

வாணியம்பாடியைப் பொறுத்தமட்டில் அ.தி.மு.க.வே அந்தத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு இருக்கிறது. அ.தி.மு.க.வை ஆதரிக்கும் தமிழ் மாநில முஸ்லிம் லீக் தலைவர் ஷேக்டாவுட் என்பவர் ஜெ.விடம் அந்த ஸீட்டை வாங்க முயன்று கொண்டிருக்கிறார். ஜே.எம். ஆருண் காங்கிரஸில் இணைந்து விட்டார். இந்த முறை அவர் காங்கிரஸ் சார்பாக வாணியம்பாடியில் போட்டியிடும் வாய்ப்பு இருக்கிறது. ஆண்டிப்பட்டியில் தி.மு.க. வேட்பாளரை காங்கிரஸும், வாணியம்பாடியில் ஆருணை தி.மு.க.வும் ஆதரிக்கக் கூடும்.

சைதை துரைசாமி அதிமுக.வில் இணையும்போதே 'இவர்தான் தொகுதியில் நமது வேட்பாளர்' என்று ஆளும் கட்சிப் பிரமுகர்கள் பேசத் துவங்கி விட்டார்கள். சைதை கிட்டு தான் திமுக. வேட்பாளர்' என்று உறுதியாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. திமுக. சார்பில் டி.ராஜேந்தர்கூட நிறுத்தப்படலாம்.

— ப்ரியன்

படம் : சௌரா

கோடம்பாக்கம் முழுக்க, 'அழகி' பற்றித்தான் இப்போது பேச்சு. பொங்கலுக்கு வெளி வர இருக்கும் இந்தப் படத்தை, இதுவரை நூற்றி ஐம்பது பிரிவியூ ஷோ போட்டுக் காட்டியதில்தான் ஒரே பரபரப்பு.

"இந்த ஆண்டின் அதிகம் வசூல் செய்யப் போகும் படம் மட்டுமல்ல. அதிக விருதுகளையும் குவிக்கப் போகும் படமிது. குரூப் டான்ஸ் இல்லாமல், சண்டை இல்லாமல் வெற்றிப் படங்களைத் தர முடியும் என்பதற்கு அழகி உதாரணமாகப் போவது மட்டுமல்ல; தமிழ் சினிமாவின் தலையெழுத்தை அடியோடு மாற்றப் போகிற டிரெண்ட் செட்டிங் படம்" என்கிறார் படத்தைப் பார்த்திருக்கும் சேரன்.

'அப்படி என்னதான்யா படத்துல இருக்கு?' என்றால், "ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் பூட்டுக்களைத் திறக்கப் போகிற படம். வந்த வேகத்திலேயே எல்லா மொழிகளிலும் ரீமேக் ஆகப் போகிற படம்" என்கிறார் சாயாஜி ஷிண்டே.

இளையராஜாவே இசையமைத்து பாடல்களை எழுதியிருக்கும் அழகியில் ஐம்பது புதுமுகங்கள்! ஒளிப்பதிவாளர், இயக்குனர்,



* 'அழகி'யுடன் தங்கர்பச்சான்

தமிழ் சினிமா தலையெழுத்து மாறுது?

பார்த்திபனோ "அழகி படம் வந்த பிறகு எனது பெயர் சண்முகம் என்று மாறி விடும். ரசிகர்கள் என்னை அப்படித்தான் இனி அழைக்கப் போகிறார்கள்" என்கிறார்.

"வடக்கிலிருந்து கவர்ச்சிக்காக அழைத்து வரப்படும் பூனை நடை அழகிகளுக்கு மத்தியில், தங்கர்பச்சான் நான்காண்டு காத்திருந்து, 'தனலட்சுமி' பாத்திரத்திற்காக நந்திதாதாஸை அழைத்து வந்து நடிக்க வைத்தார். அது வீண் போகவில்லை" என்கிறார் விவேக்.

இலக்கியவாதி என பல்வேறு முகங்களைக் கொண்ட தங்கர்பச்சான் "எனது 'வெள்ளைமாடு' சிறுகதைத் தொகுப்பிலுள்ள ஒரு சிறுகதையைத்தான் அழகியாக உருவாக்கியிருக்கிறேன்" என்கிறார் அது எந்தச் சிறுகதை என்றால் வாயைத் திறக்க மாட்டேன் என்கிறார்!

ஜெ

அஸிஸ்டண்ட் கமிஷனர் கையிலிருந்த ஒயர்லெஸ் பரபரத்தது.

"தேஷ்பாண்டே; செக்யூரிட்டி ஆபீசர், கேட் நம்பர் செவன் ஹியர் சார்!"

"யெஸ் கோ ஆன்..."

"இங்க ஒரு தீவிரவாதி நுழைஞ்சிட்டான் சார்."

"மை காட்! எப்படிக் கண்டுபிடிச்சிங்க?"

"தீவிரவாதின்னே அடையாள அட்டை காட்டறான் சார்! எல்.கே.ஜி. பசங்க மாதிரி முதுகில ஒரு பை மாட்டிருக்கான். 'ஷூட்' ஆர்டர் குடுங்க சார்."

"நீ என்ன ஆயுதம் வைச்சிருக்கே?"

"பிஸ்டல், ரைஃபில், ஏ.கே. 47, 56. ஸ்டென் கன்."

"ஓ.கே. ஓ.கே! அது எல்லாத்தையும் கைக்கு எட்டாத தூரம் ஓரமா தள்ளி வை."

"சார்? இது எமர்ஜென்ஸி."

"அப்படி ஆகிடக் கூடாதுன்னுதான் சொல்றேன். எல்லாத்தையும் கீழே போடு.. நம்ம சுடலாமா. இல்ல ராணுவம், BSF, CRPF வரணுமான்னு கமிஷனர்கிட்ட கேட்டுச் சொல்றேன்."

"சார் அதுவரைக்கும்?"

"அஹிம்சை முறைல அவனைச் சமாளி."

தீவிரவாதி நின்ற இடத்திலிருந்து அசையாமல் தேஷ்பாண்டேயை முறைத்துப் பார்த்தான். இவர் ஒவ்வொரு ஆயுதமாக கீழே போடுவதைக் கண்டு குழம்பிப் போனான்.

"ஏ டெரரிஸ்ட்! நீயும் வீரன்; நானும் வீரன்."

"ம்..."

"உனக்கு எங்க நாட்டை பத்தித் தெரியாது. மனசு வைச்சா உன்னைத் தொலைச்சுக் கட்டிடுவாங்க."

"மனசு வைச்சா..?"

செக்யூரிட்டி ஆபீசர் பேசிக் கொண்டே இவன் அருகில் போக,

"நான் மனித வெடிகுண்டு. நீ கிட்ட வந்தே பட்டனை அழுக்கிடுவேன்."

"நீ ஓடப்பார்த்தே நான் கிட்ட வந்திடுவேன். அப்படியே நில்லு. பேசுவோம்."

பாராளுமன்ற வளாகத்தில் ஒரு தீவிரவாதி நுழைந்த செய்தி நொடியில் உலகெங்கும் பரவியது. ஆர்மி, BSF வருவதற்கு முன் சாட்டிலைட் சானல்கள் வந்திறங்கின. அவசர அவசரமாக காபினெட் கட்சி ஆபீசில் கூடியது.

உள்துறை அமைச்சர், இந்தத் தீவிரவாதிகளை நாய் சுடுவதுபோல் சுட்டுத் தள்ள வேண்டுமென்று ஆவேசமாகப் பேசினார். பெரும்பான்மை இருப்பதால் எங்களுடன் ஆலோசனை நடத்தாமல் கரகாட்டம் ஆடுகிறது ஆளுங்கட்சி என்று எதிர்க் கட்சிகள் சிலிர்த்தன.

"காபினெட்டைக் கூட்டிக் காப்பிக் குடிக்கத் தெரிஞ்சவங்களுக்கு எங்கள கூப்பிடணும்னு ஒரு மனிதாபிமானம் இல்லையே!"

எதிர்க்கட்சிகள் சம்பந்திச் சண்டை பிடிக்க, நாயைக் கேவலமாகப் பேசியதற்காக உள்துறை அமைச்சர் மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்குப் பதிவானது.

இருபது இருபத்தைந்து வீடியோ காமிராக்கள் துப்பாக்கியை விட 'ஷார்ப்'பாக தன்னைக் குறி வைத்ததில் தடுமாறினான் தீவிரவாதி. சட்டென ஒரு கறுப்பு முகமூடி அணிந்து கொண்டான்.

ஒருவாறு சகல கட்சிகளும் பின் கேட் வழியாக நாடாளுமன்றத்தில் கூடின. சரமாரியான வாக்குவாதம் தொடங்கியது.

"சுடறதுக்கு முன்னாடி அவனெ எந்த அமைப்பைச் சேர்ந்தவன்னு தெளிவா தெரியணும்."

'ஸ்டாம்ப் பேப்பரில் அவன்



ஐயோ தீவிரவாதி!

கிட்ட ஒரு அஃபி டாவிட் வாங்கினா ரொம்ப நல்லது."

"அமெரிக்காவிடம் அனுமதி பெறாமல் அசையக் கூடாது."

"அமெரிக்கா என்ன பெரிய அமெரிக்கா? அவனுக்கு ஒரு நியாயம், நமக்கு ஒரு நியாயமா?"

"UNகிட்ட போனாப் போதும்..."

"நம்ம இவனைச் சுட்டுத் தொலைச்சா உலக வங்கி நமக்குக் கடன் கொடுக்கிறதை ரத்து செய்யலாம். ஜாக்கிரதை!"

"முழு மூச்சா ஒரு போர்ல இறங்கி எல்லா தீவிரவாத அமைப்புகளையும் பொசுக்கிடணும்."

"நம்ம எதிரிகிட்ட அணு ஆயுதம் இருக்கிறதை மறந்து கண்டபடி பேசறோம்."

"பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இங்க சர்வாதிகார பாணியிலே எந்த முடிவும் எடுக்கக் கூடாது..."

தொடர்ந்து இரவிலும் விவாதம்.

இது இப்படியிருக்க, அண்டை நாட்டுப் பிரதமர் டீவியில் தோன்றி, "எந்தத் தீவிரவாதி வந்தாலும் நாங்கள் அனுப்பியதாகப் பொய் சொல்வதே இந்தியாவின் பொழுது போக்காய்ப் போச்சு. அவனுக்கும் எங்களுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. ஆனால் அவனை இந்தியா சுட்டால் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம்!"

இந்தக் கூத்தில் டீவி தொகுப்பாளர்கள் காட்டில் மழை. மெகா சீரியல் பார்த்து மரத்துப் போன மக்கள் மத்தியில் ஆரவாரம்.

"தீவிரவாதி லெவிஸ் ஜீன்ஸ் போட்டிருக்கிறார். நெடுநாள் தங்கும் திட்டத்தில் பாக்கெட்டில் முந்திரி, திராட்சை என உணவு கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது."

"காமிரா கூச்சம் அதிகம் இருப்பதால் அடிக்கடி முதுகை காட்டுகிறான்... முகமூடி இருந்தாலும் பார்க்க சாதுவாய்த் தெரிகிறான். இதோ... யெல்லோ கிராஸ் தயவில் அவனுக்கு உணவு போகிறது... உஷாராக செக்யூரிட்டி ஆபீசர்



மாதுரி

தேஷ் பாண்டேயைச் சாப்பிடச் சொல்லி பின் சாப்பிடுகிறான். பேஷ்!"

"அட, தீவிரவாதி ஏதோ ஒரு சீட்டு கொடுக்கிறான்..!"

"இதோ அந்த சீட்டு... ஆ.... என்னதான் பண்ணப் போறீங்கன்னு கேட்டிருக்கிறான் தீவிரவாதி!'

"இன்னும் சற்று நேரத்தில் பிரதமர், உள்நாட்டு மந்திரி, வெளியுறவு மந்திரி, பாதுகாப்பு மந்திரி அனைவரும் நம் ஸ்டுடியோவுக்கு வரவிருக்கிறார்கள்..!"

பிரதமர் : 53 மணி நேரம் நல்லா அலசி ஆராய்ந்தோம். இவனைச் சுடறதால ஜாதிமத பிரச்னை கிளம்பக் கூடாது. போலீஸ், ஆர்மினு உட்பூசல் வந்துடக் கூடாது, உள்நாட்டு வெளிநாட்டுக் களேபரம் ஏற்படக் கூடாது, எதிரி நாடு நண்பனாகவும் நண்பர் நாடு எதிரியாகவும் ஆகிவிடக் கூடாது. அமெரிக்கா.... பாலஸ்தீனம்... இஸ்ரேல்... ஆக, மக்களைக் கேக்காம ஒரு முடிவுக்கு வர்றது ஜனநாயக முறைக்குப் புறம்பானது.... அதனால...

தீவிரவாதி வெறுத்துப் போனான்.

"அர்ரே தேஷ்பாண்டே, என்னய்யா முடிவு பண்ணீங்க? மூணு நாளா தொங்க விட்டுட்டீங்க."

அடுத்த நாள் அரசாங்க விடுமுறை அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்னைக்கு மக்களே நேரடியாக ஒரு முடிவெடுப்பார்கள். நாடு குழம்பிப் போயிருக்கும் கேள்விக்கான பத்துவித பதிலை எல்லா சாட்டிலைட் சானல்களும் அறிவிக்கும். அமிதாப்பச்சன், சரத்குமார், சிரஞ்சீவி, முகேஷ், குஷ்பூ, கோவிந்தா போன்ற கோடாதிபதி ஜாம்பவான்கள் நிகழ்ச்சியை நடத்துவார்கள். வீட்டிலிருந்தபடி மக்கள் டெலிஃபோன் மூலம் தங்கள் வாக்குகளைப் பிடித்தமான பதிலுக்குப் பதிவு செய்யலாம். இதற்கென ஒரு கோடி கூடுதல் டெலிபோன் இணைப்புகள் அதிரடியாகத் தயாராகின்றன.

"நல்ல ஜனநாயகத்திற்கு மீண்டும் இந்தியா வழிகாட்டுகிறது" என்று உலகம் முழுவதும் புகழ்ச்சி...

நடப்பவை கேட்டுத் தீவிரவாதி கடுப்பானார்.

"அர்ரே, பாண்டே! டீவி காமிராமேன் மாதிரி என்னால அஞ்சாறு நாள் ஒரு இடத்திலேயே இருக்க முடியாது!"


"ஏய் அசையாதே...!"

"அடச்சே... உன்னாலயும் சுட முடியாது, உங்கப்பனாலயும் சுட முடியாது. நான் போயிட்டு ஒரு வாரம் கழிச்சு திரும்பி இதே நேரம், இதே இடம் வருவேன். அதுக்குள்ள நல்ல ஒரு முடிவெடுத்து வைங்கப்பா!"

ரூ. 510/- விலை மதிப்புள்ள இங்கிலீஷ் கோர்ஸ் ரூ. 150/- மட்டுமே

(3 டிவிஷன்களின் பேக்கேஜ்)

லேட்டஸ்ட் டெக்னாலஜி உதவியுடன் தயாரிக்கப்பட்ட கோர்ஸ்



டிவிஷன் -1	பேஸிக் இங்கிலீஷ் கோர்ஸ்	ரூ.130/-
டிவிஷன் -2	சொல் இலக்கணம்	ரூ.170/-
டிவிஷன் -3	ஸ்போக்கன் இங்கிலீஷ்	ரூ.210/-

மொத்தம் 3 டிவிஷன்கள் ரூ.510/-


Free

12 நாட்களில் 12 மொழிகள்
(12 இன் 1 பாக்கெட் சைஸில்)

1. ஹிந்தி ஸ்பீக்கிங் கோர்ஸ்
2. தெலுங்கு ஸ்பீக்கிங் கோர்ஸ்
3. கன்னடம் ஸ்பீக்கிங் கோர்ஸ்
4. மலையாளம் ஸ்பீக்கிங் கோர்ஸ்
5. பெங்காலி ஸ்பீக்கிங் கோர்ஸ்
6. மராத்தி ஸ்பீக்கிங் கோர்ஸ்
7. பஞ்சாபி ஸ்பீக்கிங் கோர்ஸ்
8. குஜராத்தி ஸ்பீக்கிங் கோர்ஸ்
9. அரபிக் ஸ்பீக்கிங் கோர்ஸ்
10. உருது ஸ்பீக்கிங் கோர்ஸ்
11. ஒரியா ஸ்பீக்கிங் கோர்ஸ்
12. சான்ஸ்கிரிட் ஸ்பீக்கிங் கோர்ஸ்



புதிய வருடத்தின் காணிக்கை



STUDENTS' ENGLISH INSTITUTE

1980

P.B.No.8569, 15/1, Parthasarathipuram Extn., T.Nagar, Chennai - 600 017.

எனக்கு டிவிஷன் 1, டிவிஷன் 2, டிவிஷன் 3 (மொத்தம் 3 டிவிஷன்கள்) தற்பொழுதைய ரூ.510/- விலை மதிப்புள்ள இங்கிலீஷ் கோர்ஸ், 12 மொழிகள் அடங்கிய இலவச பாக்கெட் சைஸ் புத்தகங்கள் மற்றும் புது வருட டைரியையும் சேர்த்து ரூ.150/- க்கான வி.பி.பி அனுப்பவும். போஸ்ட்மேனிடம் பணம் தந்து எனது பேக்கேஜை பெற்றுக்கொள்கிறேன்.

Name: ....

Address: ....

.... PINCODE | | | | | | |

கிளி சொல்லாத ஜோஸ்யம்!

சாலை ஓரத்தில், மரத்தடியில் அமர்ந்திருக்க வேண்டிய கிளி ஜோஸ்யர் கண்ணுசாமி, நட்சத்திர ஓட்டலான சவேராவின், மால்குடி ரெஸ்டாரெண்டின் வாசலில், வித்தியாசமானச் சூழலில் அமர்ந்திருக்கிறார். "இந்த ரெஸ்டாரெண்டைத் துவக்கியபோது 'ஒரு மாதம் இலவசமாக ஜோஸியம் பார்க்க' என்று சொல்லி அழைத்தார்கள். விளையாட்டுப் போல மூன்று வருடம் ஓடி விட்டது" என்று சொல்லும் கண்ணுசாமியிடம் இன்றைக்குப் பிரபலமாக உள்ள அநேக வி.ஐ.பி.க்கள் ஜோஸியம் பார்த்துள்ளனர். நம் பங்குக்கு 'நாளையத் தலைவர்கள்' என்று சொல்லப்படும் நான்கு பிரமுகர்களின் பெயர்களைச் சொல்லி கிளி ஜோஸ்யம் பார்த்தோம்.

டாக்டர் அன்புமணி!

"ஏண்டா கணேசா (கிளியின் பெயர்தான்) அன்புமணி என்ற பெயருக்கு நல்ல சீட்டா எடுத்துப் போடுடா" என்றபடி கூண்டைத் திறந்து விட்டார் கண்ணுசாமி. நான்கைந்து சீட்டுக்களைத் தள்ளிவிட்டு ஒரு சீட்டை எடுத்து வந்தான் கணேசன். "பிரிச்சுப் பார்க்கலாமா?" என்று கண்ணுசாமி கேட்டதும் 'கீ' என்று குரல் கொடுத்தது 'கிளி'. சீட்டைப் பிரித்தால் சமயபுரம் மாரி அம்மன் படம். "அன்புமணி என்ற இவருக்கு தெய்வத் துணை உண்டு. செல்வாக்காக, யார் தயவில்லாமல் வாழ்ந்தாலும், நமக்கு மேலே சக்தி உண்டு என்ற நம்பிக்கை இவருக்குண்டு. சொந்த பந்தங்களைவிட வெளியாட்களின் உதவிதான் இவருக்கு அதிகமாக கிடைக்கும். எந்தக் காரியத்திலும் துணிந்து இறங்கலாம். பயப்பட வேண்டாம். இப்போது இவர்மீது குரு பார்வை விழுந்துள்ளது. தொழில் சம்பந்தமாக நல்ல ஒரு முன்னேற்றமான வாய்ப்பு காத்திருக்கிறது. பெரிய இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். குடும்பத்தில் நல்ல செல்வாக்கு ஏற்படும். உள் மனத்தில் உள்ள எண்ணங்கள் ஐந்து நாளில் ஈடேறும். இன்னமும் ஐந்து நாட்கள் பொறுத்துக் கொண்டாள். எந்த தடையுமின்றி எல்லாம் நடக்கும்.

கிளி சொல்லாத ஜோஸ்யம் : பதவிக்கு வரமாட்டேன் என்ற உறுதியை இவரிடம் எதிர்பார்க்க முடியாதாம்.





* அன்புமணி



கார்த்திக் சிதம்பரம்

கூண்டைத் திறந்ததும் வெளியே வந்தான் கணேசன். "கணேசா... கார்த்திக் சிதம்பரம் என்ற பெயருக்கு ராசியா ஒரு சீட்டு எடுத்துப் போடு" என்று கண்ணுசாமி சொன்னதும், ஆடி, ஆடி வந்த கணேசன் சீட்டு, சீட்டாகத் தள்ளி பதினோறாவது சீட்டை எடுத்து வந்து கண்ணுசாமியிடம் கொடுத்தான். பிரித்தால் லட்சுமி படம்! "இந்த ராசிக்காரருக்கு வாழ்க்கையில் எந்தப் பிரச்னை வந்தாலும் இரண்டு பிரச்னை மட்டும் வராது. ஒன்று பணப் பிரச்னை. இன்னொன்று குழந்தை பாக்கியம். இவருக்குத் தாத்தா, அப்பா வழியில் நிறைய சொத்துண்டு. ஆனால் இவர் தம் உழைப்பில்தான் பொருள் ஈட்டுவார். தொழி

வில் அளவற்ற லாபமுண்டு. அரசனைப் போல அம்சங்கள் பொருந்திய வாழ்வு உண்டாகும் இவருக்கு. இப்போது சில மனப் பிரச்னைகள். வாரா வாரம், சனி, நவகிரக பூஜைகள் செய்து வர, வம்பு, வழக்குகள் ஒழியும். மனத்தில் உள்ள எண்ணங்கள் பலவிதமாகும். குடும்பத்தினர் ஒத்துழைப்பு உண்டு.

இனி சொல்லாத ஜோஸ்யம் : அரசியல் பக்கம் இல்லை. பரதத்தின் பக்கம் இருக்கிறதாம் பார்வை.

ஜி.கே.வாசன் :

இவரது பெயரைச் சொன்னதும் "மூப்பனார் ஐயாவோட மகனாச்சே" என்ற கண்ணுசாமி, கணேசனை மீண்டும் கூப்பிட்டார். "கணேசா! ஜி.கே. வாசன் என்ற பெயருக்கு அற்புதமான சீட்டா



* மு.க.ஸ்டாலின்

* ஜி.கே.வாசன்

* கார்த்திக்

ஒன்று எடுத்துப் போடுடா'' என்று அன்புக் கட்டளையிட்டார். பொறுமையைச் சோதிக்கும் விதமாக, பல சீட்டுக்களைத் தள்ளிய கணேசன், கடைசியாக ஒரு சீட்டை எடுத்து கூண்டிற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த கருமாரி அம்மன் படத்திற்கு முன் காட்டிவிட்டு கண்ணுசாமியிடம் கொடுத்தான். அதற்கு ஒரு நெல்மணியை கொடுத்துவிட்டு பிரித்துப் பார்த்தால் பசுவுடன் புல்லாங்குழல் கிருஷ்ணர்!

"உலகத்தையே அழிக்கும் சக்தி படைத்த கிருஷ்ணன் படம் உங்களுக்கு வந்திருக்கிறது. உங்களை யார் கெடுக்க நினைத்தாலும் கெடுப்பார் எண்ணங்கள் கெடும். அவர்களது சதிச் செயல்கள் உங்களை ஒரு போதும் பாதிக்காது. பதினெட்டு நாட்களுக்குப் பிறகு உங்கள் மேல் குருவின் கிரகப் பார்வை பட இருக்கிறது. குடும்ப வாழ்க்கை, செய்யும் தொழில் மேன்மையடையும். சில நாட்களுக்குப் பிறகு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் வரும். யார் உங்களை நம்பி வந்தாலும் ஆதரிக்கும் பெருந்தன்மை உண்டு. உங்கள் ராசிப்படி எந்தவிதமான காரியமாக இருந்தாலும் இன்னமும் பதினெட்டு நாட்களுக்குப் பிறகே ஜெயமாகும்."

இனி சொல்லாத ஜோஸ்யம் : மார்ச் வரை அம்மாவிடம் அடக்கி வாசிப்பது நல்லதாம்.

மு.க.ஸ்டாலின் :

மூன்று பேருக்குச் சீட்டு எடுத்துப் போட்டு களைத்துப் போய் விட்ட கணேசனுக்கு ரெஸ்ட் கொடுத்துவிட்டு அடுத்த கூண்டிலிருந்த மணியைத் திறந்து விட்டார் கண்ணுசாமி. முதல் இரண்டு சீட்டுகளை உதறி விட்டு மூன்றாவது சீட்டை எடுத்து வந்தான் மணி. திறந்து பார்த்தால் படு ஆச்சர்யம்! ஏசுநாதர் படம்! நாங்கள் ஜோஸ்யம் பார்த்தது கிறிஸ்துமஸ் அன்று. கண்ணுசாமியே புல்லரித்துப் போய் விட்டார். "பிறருக்காக தன் உயிரை மாய்த்துக் கொண்ட புனித ஜீவன் ஏசு. இவரது படம் வந்துள்ள இந்த ராசிக்காரருக்கு எந்தக் காரியமும் தங்கு தடையுமில்லாமல் நடக்கும். மனத்தில் குழப்பம் இருக்காது. குடும்பம், தொழில் தற்போதைய நிலை திருப்தி அளிக்காது. எதிர்ப்புகள், கஷ்டங்கள் வந்தாலும் மன தைரியத்தை கைவிடக் கூடாது. சில நாட்களுக்கு முன் உயிருக்கு ஆபத்தான கண்டம் வந்து விலகியுள்ளது. இனி ஆயுசு கெட்டி. சுமார் இரண்டு வருட காலமாக கேது என்ற கிரகப் பார்வை இவர்மீது பட்டுக் கொண்டிருக்கிறது. பல பிரச்னைகள் வந்து விலகி இருக்கலாம். கேது, இன்னமும் 21 நாட்களில் இவரை விட்டு விலகப் போகிறார். அதன் பிறகு எந்தச் சிக்கலும் வராது. இப்போதைக்குப் பொறுமையாக இருப்பது மிகவும் நல்லது."

இனி சொல்லாத ஜோஸ்யம்: கோர்ட் விவகாரங்களை எப்படிச் சமாளிப்பது என்று அம்மாவிடம் பாடம் கற்க வேண்டுமாம்.

- கௌசி

படங்கள் : **ராஜன்**



ராணி வார இதழின் ஆசிரியர் அ.மா.சாமியின் புனை பெயர்களில் பிரபலமானது 'குரும்பூர் குப்புசாமி!' அதென்ன குரும்பூர்!



“ராணி பத்திரிகை ஆரம்பித்த சமயத்தில், 'அழிவற்ற காதல்' என்று ஒரு தொடர்கதை எழுதுவதற்கான அறிவிப்பைச் செய்தபோது நான் வைத்துக் கொண்ட புனைபெயர் குப்புசாமி. இதைப் பார்த்த பெரியவர் ஆதித்தனார், குப்புசாமியை குரும்பூர் குப்புசாமி என்று மாற்றினார். அதுமுதல் குரும்பூர் குப்புசாமி என்பது என் புனை பெயர் ஆனது.

“எனக்குச் சொந்த ஊர் திருச்செந்தூர். அதற்குப் பக்கத்தில் குரும்பூர் என்று ஒரு ஊர் இருக்கிறது. காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் கூட குரும்பூர் என்று ஒரு கிராமம் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

குறும்பூரா? குரும்பூரா?



“பல வருடங்களுக்கு முன், 'டேய்! அருணா' என்ற தலைப்பில் குறும்புக்காரப் பெண்ணைப் பற்றி ஒரு சிறுகதை எழுதினேன். அந்தக் கதையைப் படித்துவிட்டு, திருச்செந்தூரைச் சேர்ந்த அருணா என்ற பெண்மணி, கதை சம்பவங்கள், தம் வாழ்க்கையில் நடந்தவை என்று சொல்லி, பக்கத்து ஊரான குரும்பூருக்குப் போய் கதை எழுதிய குப்புசாமி யார் என்று விசாரித்திருக்கிறார். ஊர்க்காரர் யாரும் கதை எழுதவில்லை என்று தெரிந்திருக்கிறது. பின்னர் அது நான் எழுதிய கற்பனைக் கதை என்பதைத் தெரிந்து கொண்டார்கள். இதில் விசேஷம் என்னவெனில், அன்று கதையைப் படித்துவிட்டு, குரும்பூருக்குச் சென்று குப்புசாமியைத் தேடிய அருணாதான் இன்று எங்கள் வீட்டு சம்பந்தி!


“என்னுடைய 'கிழக்கேபோன கிணற்றுத் தவளை' என்ற பயணக் கட்டுரைக்கு முன்னுரை வழங்கிய கலைஞர் கருணாநிதி கட்டுரையின் நகைச்சுவையான போக்கைப் பாராட்டி, இவர் குரும்பூர் குப்புசாமி இல்லை குறும்பூர் குப்புசாமி” என்று குறிப்பிட்டிருந்தார். அதை என்னால் மறக்க முடியாது” என்கிறார் இந்த குறும்பு சாமி...ஸாரி குப்புசாமி!

— கௌதம்

ஓம்

சரவணபவ

05-01-2002
பொங்கல்
சிறப்பிதழில்....



தீபாவளி சிறப்பிதழில் 20 ரூபாய் மதிப்புள்ள அணையாவிளக்கு அன்பளிப்பாக வழங்கினோம். பித்தளையில் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான அந்த விளக்கின் வடிவம் மற்றும் அதன் தெய்வீக பலன் காரணமாக மீண்டும் அந்த அணையா விளக்கை 'ஓம்' இதழோடு வழங்க வேண்டும் என்று ஏராளமான வாசக அன்பர்கள் கேட்டுக்கொண்டதால், ஒளிதேவனாம் சூரியனைக் கொண்டாடும் பொங்கல் திருநாள் சிறப்பிதழோடு மீண்டும்

அணையா விளக்கு

(20 ரூபாய் மதிப்புள்ளது)

வெற்றி தரும்

ட்ராகன் ஸ்டிக்கர்

செல்வம் தரும்

சீன லட்சுமி


வண்ணப் படம்

ஏராளமான ஆலய–ஆன்மிகச் சிறப்புக் கட்டுரைகள்

அதிக பக்கங்கள்!

பிரதிகளுக்கு உங்கள் கடைக்காரர்களிடம் முன்பதிவு செய்துகொள்ளவும்.

விவரங்களுக்கு: சாருப்பிரபா பப்ளிகேஷன்ஸ் , 105, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–600 014.





2002 ஜனவரி 6
விஷு மார்கழி 22
மலர் : 60
இதழ் : 23

கல்கி




தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

ஆண்டிப்பட்டி அநியாயங்கள்!

டான்ஸி வழக்கில் தீர்ப்பு வெளியான கையோடு ஆண்டிப்பட்டியிலிருந்து போட்டியிடப் போவதாக அறிவித்து விட்டார் ஜெயலலிதா. சமூக நலத்துறை அமைச்சர் வளர்மதியோ ஆண்டிப்பட்டியை அரசிப்பட்டியாக்குவேன் என்று சூளுரைத்தார்! வரலாறு காணாத வளர்ச்சிப் பணிகள் அத் தொகுதியில் தொடங்கி விட்டன!

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சமுதாய நலப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஐம்பது லட்ச ரூபாய் பெறுமானத்துக்கு பல்வேறு உதவித் தொகைகள் விநியோகமாகியிருக்கின்றன. சிறப்பு மருத்துவ முகாம்கள், 25 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார மையம் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. அ.தி.மு.க. எம்.பிக்கள் நால்வர் தங்கள் தொகுதி அபிவிருத்தி நிதியிலிருந்து தலா ஐம்பது லட்சம் ரூபாயை ஆண்டிப்பட்டி சட்டசபை தொகுதிக்கென்று ஒதுக்கித் தந்துள்ளனர்! மொத்தத்தில் வேறெந்த தொகுதியிலும் காணாத வேகத்தில் நிதி ஒதுக்கீடாகி, இங்கே வேலைகளும் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் நிதிப் பற்றாக்குறை என்று பக்கம் பக்கமாகப் புலம்பிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. அரசு, தழும்பு விழுந்து போன சென்னை நகர சாலைகளைச் சரிசெய்யக்கூட



வகையில்லாத தமிழக அரசு, ஆண்டிப்பட்டிக்கு மட்டும் கோடிகளை ஒதுக்கித் தருவதில் அசாதாரண கறுகறுப்பு காட்டியிருக்கிறது.


அத் தொகுதி எம்.எல்.ஏ. தங்கதமிழ்ச் செல்வனின் காரணமற்ற ராஜினாமாவைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட பணிகள் டான்ஸி வழக்கு தீர்ப்பு வெளியானதும் உச்சகட்டத்தை அடைந்தன.

டான்ஸி வழக்கில் வெற்றி கிடைக்கும் என்று கணக்கிட்டு, அதன் பின் ஆண்டிப்பட்டியில் போட்டியிடலாம் என்று திட்டமிட்டு, அ.தி.மு.க. தலைவி செயல்பட்டிருப்பது மிகத் தெளிவாகவே தெரிகிறது.

இடைத் தேர்தல் அறிவிக்கப்படும் முன் ஆண்டிப்பட்டியில் தொடங்கப்பட்ட பணிகளை, சட்டப்படி தொடர்வதில் தடை ஏதும் இல்லை. ஆனால், இப்படியொரு தேர்தல் வரும் என்பது, தங்க தமிழ்ச் செல்வன் ராஜினாமா செய்த மறுகணமே உறுதியாகி விட்டது. ஆகவே தார்மிக ரீதியில் ஜெயலலிதாவும் தமிழக அரசும் மீண்டும் தவறு செய்கின்றனர் என்பதை மறுக்க முடியாது.

ஆண்டிப்பட்டிக்கு இவ்வளவு பகிரங்கமாகச் சலுகை காண்பித்திருக்கும் ஆளுங்கட்சி, அத்தொகுதியில் வெற்றி பெறுவதற்கு அரசியல் ரீதியாகவும் அனைத்து முயற்சிகளையும் செய்யும் என்று எதிர்பார்க்கலாம். எதிரணியில் உள்ள கட்சிகளிடையே பிளவு ஏற்படுத்தி, தனது பலத்தைப் பெருக்கிக் கொள்ளத் தயங்காது. காங்கிரஸிலும் பா.ம.க.விலும் ஏற்கெனவே அதற்கான சில அறிகுறிகள் தெரிகின்றன. பணபலத்தை ஆயுதமாக்கிப் போராடுவதும் அ.தி.மு.க.வுக்கு சகஜம்தான்.

டான்ஸி வழக்கில் வெற்றி பெற்றிருப்பதால் ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றி வாய்ப்புகள் பெருகியிருக்கின்றன; வாக்காளர்களிடையே அவரது செல்வாக்கு உயர்ந்துள்ளது. அதோடு ஆண்டிப்பட்டிக்கு விசேஷ கவனிப்பும் இருந்து வருகிறது... இந்த நேரத்தில், தமிழகத்தின்



எதிர்காலம் ஆண்டிப்பட்டி வாக்காளர்களின் கையில் இருக்கிறது என்று விட்டு விடாமல், எதிர்க்கட்சிகள் இணைந்து அரசியல் வியூகம் அமைப்பது அத்தியாவசியமாகிறது. தங்கள் கட்சியில் அ.தி.மு.க. பிளவுகளை ஏற்படுத்தினாலும் மனம் தளர்ந்து விடக் கூடாது. அ.தி.மு.க.வுக்கு எதிரான அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து ஒரு பொது வேட்பாளரைத் தேர்வு செய்தாக வேண்டும். அந்த வேட்பாளருக்காக, கட்சி நோக்கு கடந்து, வெற்றி - தோல்வி பற்றிய விசாரமின்றி உழைத்தாக வேண்டும்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் ஜெயலலிதாவுக்குத்தான் வெற்றி வாய்ப்புகள் அதிகம். ஆனால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்காக உயிரைக் கொடுத்து உழைப்பதன் மூலம் எதிர்க்கட்சிகள் ஒரு புதிய வரலாறு படைக்க முடியும்.

தார்மிக நெறிகளை மதியாத, தார்மிக ரீதியில் தகுதியிழந்த ஒரு நபரை மக்கள் ஏற்றாலும், மற்ற அரசியல் கட்சிகள் நெஞ்சுரத்துடன் நிராகரிக்க முடியும் என்பதை நாட்டுக்கே உணர்த்தலாம். அதன் மூலம், அரசியல் தூய்மைக்கும் பொதுவாழ்வில் நேர்மைக்கும் இன்னமும் மதிப்பு இருக்கிறது என்பது உறுதிப்படும்.

வாக்காளர்களே கூட, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைகண்டு சிந்திக்க ஆரம்பிப்பார்கள். ஜெயலலிதாவின் தகுதியைக் குறித்து மறுபரிசீலனை செய்ய ஆரம்பிப்பார்கள்.

எதிரணியின் கட்சித் தலைவர்களும் காலம் கடத்தாமல் சந்தித்துப் பேசி, பொது வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்.

அ.தி.மு.க.வுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் அராஜகத்துக்கு நேரடியாக ஆதரவு அளிக்கும் கட்சிகளாகும். பொது வேட்பாளரை ஆதரிக்காமல், தனித்துப் போட்டியிடும் கட்சிகளோ அதே அராஜகத்துக்கு மறைமுகமாகத் துணைபோகும் கட்சிகளாகி விடும்! ○

மிகப் பெரிய நிறுவனங்களில் கன்ஸல்டன்டுகள் அடிக்கும் கொட்டம் கணக்கில் அடங்காது. அவர்கள் அந்த நிறுவனங்களில் கை நீட்டி சம்பளம் வாங்காதவர்கள் என்பதால் அவர்களைக் கட்டுக்குள் கொண்டு வருவது மிக கடினம். மற்றவர்களுக்கோ



சுண்டைக்காயான முகம்!

எரிச்சலோ எரிச்சல். "கன்ஸல்டன்டுகள் வெறும் புத்தகப் புழுக்கள், அவர்களுக்கு எழுதவும் பேசவுமே தெரியும்" என்ற தொனியில் குறும்புக் கதைகள் எக்கச்சக்கம். சாம்பிள் பார்ப்போமா?

ஒரு கன்ஸல்டன்ட் தமது ஜீப்பில் போய்க் கொண்டிருந்தபோது பெரிய ஆட்டுப் பண்ணை ஒன்றை பார்த்துவிட்டார். சும்மா விடுவாரா? உள்ளே போனதும் அதன் எளிமையான கிராமத்து முதலாளி எதிர்படவே தம் ஜம்பத்தைத் தொடங்கினார். "உன் பண்ணையில் எவ்வளவு ஆடுகள் என்ற விவரம் என்னால் சில நிமிடங்களில் சொல்ல முடியும்" என்றார். "அப்படிச் சரியாகச் சொன்னால் நீ எனக்கு ஒரு ஆடு தர வேண்டும்" என்றார். முதலில் கொஞ்சம் யோசித்த கிராமத்து ஆசாமி, பிறகு வருவது வரட்டும் பார்ப்போம் என்றவாறே சரியென்று சொல்லிவிட்டார்.

அப்புறமென்ன? நம் மிஸ்டர் ஜம்பம் தமது லாப்டாப் கம்ப்யூட்டரை எடுத்தார். ஏதேதோ கணக்குகள் போட்டுக் கழித்தார். கூட்டினார். முடிவில் நெற்றியைச் சுருக்கி 916 என்று சொல்ல, கிராமத்தானுக்கு ஆச்சர்யம். மிகச் சரியான விவரம். வேறு வழியில்லாமல் ஆடு ஒன்றைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஆடு பெற்ற குஷியில் வெளியே கிளம்பிய மிஸ்டர் ஜம்பத்தை இடை மறித்தார் கிராமத்து மனிதர். "ஸார். நீங்க சரியாச் சொன்னீங்க. ஒப்புக்கறேன். அதே மாதிரி நான் உங்களோட தொழில் என்னன்னு சரியாச் சொல்லிட்டா அந்த ஆட்டைத் திருப்பிக் கொடுத்துடுவீங்களா" என்றார். கிராமத்தான் என்ன சொல்லிவிடப் போகிறான் என்ற எகத்தாளத்தில் நம்ம ஆளும் ஒப்புக் கொண்டு விட்டார்.

"நீங்க ஒரு கன்ஸல்டன்டுதானுங்களே?" என்றானே பார்க்கலாம் அந்த கிராமத்தான். மிஸ்டர் ஜம்பத்தின் முகம் சுண்டைக்காயாகப் போனது.

'எப்படி எப்படி' என்று கதறிவிட்டார் நம் கன்ஸல்டன்ட்.

"அது ஒண்ணுமில்லீங்க. மூன்று காரணங்கள் இருக்குங்க. முதல்ல நான் கூப்பிடாமலே நீங்க வந்தீங்க. ரெண்டாவது, எனக்குத் தெரிஞ்ச விஷயத்தையே எங்கிட்ட சொல்லிட்டு பீஸ் கேட்டீங்க. மூணாவது, நீங்க ஜீப்புல ஏத்தியிருக்கீங்களே அது ஆடு இல்லீங்க. என்னோட நாய். மொதல்ல அதை இறக்கிவிடுங்க."

- மெலட்டூர்
இரா. நடராஜன்

● அஜார், தேனாம்பேட்டை.

? பாகிஸ்தான் நம்மிடம் வாலாட்டும் துணிச்சலுக்கு என்ன காரணம்...?

! பல சமயங்களில் நாம் காட்டும் சகிப்புத் தன்மையை 'பலவீனம்' என்று அவர்கள் தப்பர்த்தம் செய்து கொள்வதுதான்.


● கண்ணம்மா இராமசாமி, திருச்சி - 9.

? எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று, கணிசமான அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டு சட்டப் பேரவையில் மெஜாரிட்டியை நிரூபித்து, பன்னீர்செல்வமே நிரந்தர முதலமைச்சராகி தமிழகத்தில் புது சரித்திரம் படைத்தால்...?

! அப்படிப்பட்ட ஆற்றல் உள்ளவரை, அவ்வாறு தமக்குத் துரோகம் செய்யக்கூடியவரை, ஜெயலலிதா முதல்வராக நியமித்திருப்பாரா என்ன!

● க. தியாகராசன், குடந்தை - 1.

? கண்ணகி சிலை கடற்கரை சாலையிலிருந்து அகற்றப்பட்டது பற்றி...?




• வியர்வை சிந்தி...



• படைக்காத சரித்திரம்!

தீர்க்கதரிசனம் என்பது என்ன?



• ஆருடச் செல்வர்!

! பூனாவில் ஆர்.கே. லக்ஷ்மணின் 'ஸ்ரீமான் பொது ஜன'த்துக்குச் சிலை செய்து கௌரவித்திருக்கிறார்கள். அதுவும் இந்தியா. இதுவும் இந்தியா... ஹூம்!

● ப. இராம் முருகன், சென்னை - 68.

? ரீட்டாவுக்கு ஐந்து லட்சம் நஷ்டஈடு தர அரசு உத்தரவு போட்டுள்ளது பற்றி...?

! பெண் உரிமை அமைப்புகளின் தலையீடும் போராட்டமும் பெற்றுத் தந்த தொகை. ரீட்டாவின் இழப்பை ஈடுசெய்யாது என்றாலும் அவர் தன்னிலைப்படுத்திக் கொள்ள உதவும். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுதான் பிறருக்கு எச்சரிக்கையாக அமையும்.

● பி. சிவக்குமார் பிரபு, திருப்பூர். *

? தீர்க்கதரிசனம் என்பது என்ன...?

! ஜெ. தேர்தலில் நிற்க வசதியாக ஆண்டிப்பட்டியில் இடைத்தேர்தல் உருவாக்க ராஜினாமா செய்த எம்.எல்.ஏ.வுடையது தீர்க்கதரிசனம்; அந்தத் தொகுதியில் இப்போது தமிழக அரசு சமுதாயப் பணிகளை மிதமிஞ்சி நிறைவேற்றி வருவது அதிதீர்க்க தரிசனம்!



• மௌனமே பேச

● ரேவதி சங்கர், சென்னை - 13.

? 'காசி'யில் விக்ரம் நடிப்பு எப்படி....?

! பாத்திரத்திற்காக உடலை வருத்தி உருவத்தை மாற்றிக் கொள்ளும் ராபர்ட்-டி-நீரோ போன்ற ஹாலிவுட் நடிகர்களுக்கு இணையாக நடிப்புக்கு மரியாதை செய்கிறார் விக்ரம்! அவரை மாதிரி வியர்வை சிந்துகிற நடிகர்கள் நடிகைகள் அதிகரித்

தால், நல்ல கதை நல்ல ரசனை என எல்லாமே தானாக உயரும்.

● அவ்வை கே. சஞ்சீவிபாரதி, கோபி.

? 2006ல் பா.ம.க. ஆட்சி அமைக்கும் என்கிறாரே டாக்டர்...?

! இப்போதெல்லாம் பகுத்தறிவாளர்களிடையே கூட ஜோதிடர்களுக்குத்தான் யோகம்!





* உறவு பார்முலா!





• அரசியலுக்கு - அப்பாற்பட்டு!

□ ரூ. 100 பரிசு பெறுபவர் : எம். சிவகுருநாதன், 7147, ரயில் நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 004.

● பிரசன்னா, குடந்தை - 1.

? ஹாக்கியில் ஜூனியர் உலக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு அரசிடமிருந்தோ மக்களிடமிருந்தோ பரிசோ பாராட்டோ கிடைக்கவில்லையே...?

! எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மாணவனுக்கு வீட்டிலே பாராட்டு கிடைக்கலாம். ஆனால் பட்டதாரிக்குத்தான் பட்டமளிப்பு விழா நடக்கும்!

● பா. ராஜா முஹமது, திருத்துறைப்பூண்டி.

? அரசியலுக்கு அப்பாற்பட்டு வாஜ்பாயும் சோனியாவும் நட்பு பாராட்டும் அரசியல் நாகரிகம் தமிழகத்தில் இல்லையே...?

! 30.12.2001 கல்கியில் அப்துல் லத்தீஃப் பற்றி இல. கணேசன் கூறியிருப்பதைப் படியுங்கள்.

● சின்னை.எஸ். ராஜமழை, சின்னமனூர்.

? ஒசாமாவின் மரணம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்...?

! நுரையீரல் கோளாறினால் அன்னார் ஏற்கெனவே காலமாகி விட்டதாக ஒரு தகவல்! ஆனாலும் அமெரிக்கா தேடலைக் கைவிடவில்லை! அவர் இறந்து போயிருந்தால் அதிர்ஷ்டசாலி!

● எம். சிவகுருநாதன், தஞ்சை. □

? அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படுவதற்காக தமிழகம் முழுவதும் அறுநூறுக்கும் மேற்பட்ட ஸ்ரீராமநாம ஜப வேள்விகள் நடந்துள்ளது பற்றி...?

! அந்த தாரக மந்திரத்தின் பலனாகவேனும் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல புத்தி பிறந்து சரித்திரத்தை 'ரிவர்ஸ்' செய்யும் மூடப் பிடிவாதத்தைக் கைவிட்டால் சரிதான்!

● எம். பிச்சைக்கனி, அரக்கோணம்.

? 'பா.ஜ.க. - அ.தி.மு.க. இடையிலான சுமுக உறவு என்பது தனிப்பட்ட கட்சிகள் அல்லது கூட்டணி ரீதியிலான உறவு அல்ல. மத்திய அரசு - மாநில அரசு என்ற அடிப்படையில் அமைந்த ஆட்சி ரீதியிலான உறவு' என்று வெங்கய்யா நாயுடு விளக்கியிருப்பது பற்றி...?

! ஆட்சி ரீதியான உறவு என்பது, ஆட்சியில் நிலைத்து நீடிப்பதற்கான உறவாக மாறி விடாதவரை சரி. அப்படி மாறினால் கேவலத்திலும் கேவலமான சுயநலன், சந்தர்ப்பவாதம்.

★ ரூ. 50 பரிசு பெறுபவர் : பி. சிவக்குமார் பிரபு, பொன்னாபுரம் (சிட்கோ) அஞ்சல், திருப்பூர் - 641 008.

● உமரி பொ. கணேசன், மும்பை - 37.

? தீவிரவாதிகள் பெரும்பாலும் வாடகை வீடுகளில்தான் தங்குகிறார்கள். இனி வெளியிலிருந்து வந்து வாடகை வீடு கேட்போர், பக்கத்து காவல் நிலையத்தில் சான்றிதழ் பெற்று வந்தால்தான் வீடு தரப்படும் என்று சட்டம் கொண்டு வரலாமே...?

! நல்ல யோசனைதான்; ஏராளமாக வாடகை தரத் தயாராயிருக்கும் தீவிரவாதிகள் கணிசமாக லஞ்சம் தருவதற்கும் தயாராயிருப்பார்கள் என்பது மட்டும் தான் சிக்கல்!

● இ. துரைசாமி, மங்களப்பட்டி.

? திருமணம் என்பது ஒப்பந்தமா? பந்தமா?

! அன்பு கலந்திருந்தால் பந்தம்; இல்லையேல் நிர்ப்பந்தம்! ○

பி.ஜே.பியில்



பிரதமர் வாஜ்பாய் முன்னிலையில், அத்வானி தலைமையில், தமது 126 கட்சித் தொண்டர்களுடன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, பக்திப் பாடகர் வீரமணி பாடிய ஐயப்பன் பாடல்கள் முழங்க, பாரதிய ஜனதாக் கட்சியில் சேர்ந்தார். வெள்ளை நிறச் சட்டை. நெற்றியில் குன்னக்குடி ரேஞ்சுக்கு விபூதி குங்குமப் பட்டை. (அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி காஞ்சி மடத்திலிருந்து விசேஷமாகக் கொண்டு வந்த விபூதியாம்!)

திருப்பதி கோயிலிலிருந்து வந்திருந்த பட்டாச்சார்யார்கள் சமஸ்கிருதத்தில் வாசித்துக் கொடுத்த வாழ்த்துப் பத்திரத்தை, பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு வாஜ்பாயைப் பார்த்துப் புன்னகை செய்கிறார் வீரமணி. பிறகு பேச ஆரம்பிக்கிறார் :

"சமஸ்கிருதம் உலகிலேயே இனிமையான மொழி. எளிதான மொழி? முதல் வகுப்பிலிருந்தே இதைக் கட்டாய பாடமாக்கத் தமிழ்நாடு முழுதும் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். பாரதத் திருநாட்டின் தலைமகன் வாஜ்பாய் அவர்களே, உங்கள் இந்தி உரைக்கு நான் அடிமை. சிறுபான்மையினரின் சீற்றத்துக்கு ஆளாகி, சீரியல் வெடிகுண்டு விபத்திலிருந்து கடவுள் அருளால் தப்பிய அத்வானி அவர்களே, நீங்கள் தான் உண்மையில் வல்லபபாய் படேலின் வாரிசு. இதுவரை பாடப் புத்தகங்களில் இருந்து வந்த அண்டப் புளுகுகளை எல்லாம் மாற்றிப் புதிய சரித்திரம் படைத்த முரளி மனோகர் ஜோஷி அவர்களே, நீங்கள் அடுத்த முறை காஞ்சிபுரம் செல்லும் போது என்னையும் உடன் அழைத்துச் சென்று சங்கராச்சாரியார் சுவாமிகளை அறிமுகப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை நடத்த என்றே திரு அவதாரம் செய்த அருமைச் சகோதரர் இராமகோபாலன் அவர்களே, அடுத்த விநாயகர் ஊர்வலத்துக்கு நான்தான் தலைமை ஏற்கப் போகிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழினத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி அவர்களே, உங்களால் தமிழ்நாடே பூரித்துப் போய் இருக்கிறது.

"இன்று காலை, பெரியவர் அசோக் சிங்கலைச் சந்தித்துப் பேசிய போது, ராமஜன்ம பூமியில் ராமர் கோயில் கட்ட என் ஆதரவைக் கோரினார். 'கரசேவை செய்ய எப்போது வரவேண்டும், ஆணையிடுங்கள்' என்றேன் நான். மார்ச் 12க்குள் பிரதமர் வாஜ்பாய் வழி கண்டுபிடித்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் அவர் இதுவரை சந்தித்துப் பேசவே இல்லையே என்று எதிர்க்கட்சிகள் ஒப்பாரி வைக்கிறார்கள். மார்ச் 12 ஆம் தேதிக்கு இன்னும் எத்தனையோ நாட்கள் இருக்கின்றன. 11 ஆம் தேதி சந்தித்தால் கூட, 12 ஆம் தேதி முடிவை அறிவித்து விட





முடியாதா?

"அடுத்த தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றி விடும். நான் வணங்கும் விநாயகப் பெருமான் இதற்குத் துணை செய்வார். அதற்குப் பிறகு பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை ஆகிய எல்லா விசேஷ நாட்களும் அரசாங்க

வீரமணி!

விடுமுறை நாட்களாக அறிவிக்கப்படும்."

கடைசிச் செய்தி :

கி. வீரமணி பா.ஜ.க.வில் சேருவதை எதிர்த்து சுப்பிரமணியம் சுவாமி சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இதன் பின்னணியில் பயங்கர சதி இருப்பதாகவும், தம்மைக் கேட்காமல் இனி யாரும், எந்தக் கட்சியிலும் வீரமணியைச் சேர்க்கக் கூடாது என்றும் செய்தியாளர்களிடம் சுப்பிரமணிய சுவாமி கூறினார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெயலலிதாவை, தில்லியில் சி.பி.எம். அலுவலகத்தில் வரவேற்கிறார் ஹர்கிஷன் சிங் சுர்ஜித்.

சுர்ஜித் : வாங்க, வாங்க. உங்க உடன் பிறவா சகோதரி வரலியா?

ஜெயா : அவ கிடக்கறா: அதிமுகவுக்கு இனிமே தமிழ்நாட்டுல எதிர்காலம் இல்லேன்னு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். கேக்கலியே! அவதான் முதலமைச்சரா வரப் போறதா நினைப்பு!

சுர்ஜித் : ஜோதிபாசு கூடத்தான் பிரதமரா ஆகிடணும்னு ஆசைப்பட்டார். விட்டேனா? நீங்க சிபிஎம்-ல சேர்ந்தது ரொம்ப டைம்லி.

ஜெயா : எப்படி?

சுர்ஜித் : ஈஎம்எஸ் போனப்புறம் பிரச்னை பண்றதுக்கு எனக்கு வேறே தலைவர்களே இல்லாம போச்சு. நல்ல வேளையா நீங்க வந்து சேர்ந்துட்டீங்க. எதிர் அபிப்ராயம் சொல்லிக் கொஞ்சமாவது குழப்பம் பண்ணலேன்னா, நம்ம கட்சி இருக்கா, இல்லையான்னு சீதாராம் யெச்சூரிக்கு அடிக்கடிச் சந்தேகம் வந்துரும். இனிமே அந்தப் பிரச்னை



இல்லே!

ஜெயா : கரெக்ட். அடுத்த டீ பார்ட்டி எப்போ? சோம்நாத் சாட்டர்ஜிகிட்டே உடனே கேட்டுச் சொல்லுங்க. எனக்குச் சீக்கிரமே பிரதம மந்திரி ஆகணும். நீங்கதான் அதுக்கு உண்டான வழி பண்ணணும்.

சுர்ஜித் : (மிரண்டு போய்) பிரதமரா? அதுக்குள்ளயுமா? இப்பத்தானே கட்சியில சேர்ந்திருக்கீங்க. பிஜேபியைக் கண்டிச்சு நிறைய அறிக்கை விடணும். செக்யுலரிசம் பத்தி தினம் ஒரு தடவையாவது பேசணும்.

ஜெயா : அறிக்கைதானே? தினசரி ரெண்டு விட்டுடலாம். செக்யுலரிசம் பத்தி எனக்கே சொல்லித் தரீங்களா? நான் காலைலே குருவாயூர்ல யானை கொடுத்துட்டு, மத்தியானம் திருவல்லிக்கேணில பார்த்தசாரதி பெருமாளுக்கு மாடு - கன்னுக்குட்டிக் கொடுத்துட்டு, மாலைலே மவுண்ட்ரோடு தர்க்காவுக்குப் போறவள். தெரியுமா?

சுர்ஜித் : தொழிலாளர் சம்பளத்தைக் கூட்டச் சொல்லணும். போனஸ் 30 பர் சென்ட் கொடுக்கச் சொல்லணும். அவங்க ஸ்ட்ரைக் பண்ணினா சப்போர்ட் பண்ணணும்...

ஜெயா : அய்யோ, இதொண்ணும் பிரமாதமே இல்லே. ஏழை பாழைகள் எல்லாம் விலைவாசி ஏற்றத்துல எவ்வளவு கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்காங்கன்னு போயஸ் கார்டன் வீட்டுல நான் இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எண்ணி எண்ணி வேதனைப் பெருமூச்சு விட்டுட்டிருக்கேன். அவங்களுக்கு வறுமையைத் தவிர என்ன இருக்கு? 5000 பட்டுப் புடைவை இருக்கா, 360 ஜோடி செருப்பு இருக்கா?...

சுர்ஜித் : டீ சாப்பிடுங்க. எங்க கான்டீன் நாயர் போட்டது. ஸ்பெஷல் டீ.

ஜெயா : வெறும் டீயா? டீ பார்ட்டி எப்போ? நீங்க எப்போ டீ பார்ட்டி வச்சு, எப்போ ஆட்சி கவிழ்ந்து, நான் எப்போ பிரதமர் ஆகிறது? கூப்புடுங்க சோம்நாத் சாட்டர்ஜியை. என்ன வெட்டிப் பொழுது போக்கிட்டிருக்கார் அவர், ஹ்ம்?

சுர்ஜித் : இப்போதைக்கு மேடம் சோனியா காந்தியை முதல்ல சந்திச்சுடுங்க. அப்பத்தான் ஃப்ரன்ட் பேஜ்ல நியூஸ் வரும். பேச வேணாம். பாத்து ரெண்டு பேரும் சிரிச்சுக்கிட்டாக் கூடப் போதும்.

ஜெயா : ஹ்ம், சோனியா! அவர் கணவர் ராஜீவ் காந்தியையே நான்தான் தமிழ்

நாட்டுக்கு அறிமுகப்படுத்தினேன். இப்ப நான் போய் அவரைச் சந்திக்கனுமா? அவங்கதான் இங்க வந்து என்னைச் சந்திக்கனும். நீங்க ஓடி ஓடிப் போய் அவங்களைப் பார்த்து, ரொம்ப இடம் கொடுத்துட்டுக் கெடுத்துட்டீங்க. இனிமே பாருங்க!

(ஹர்கிஷன் சிங் சுர்ஜித் தலையைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடுகிறார்.)

பெரியார் திடலில், இல. கணேசன் கறுப்புச் சட்டை அணிந்து, கலிபூங்குன்றனாருடன் கம்பீரமாக நிற்கிறார்.

நிருபர் : வீரமணி எப்போ இடத்தைக் காலி செய்வார்னு காத்திருந்த மாதிரி, நீங்க திடீர்னு திராவிடர் கழகப் பொதுச் செயலாளரா பொறுப்பு ஏற்பீங்கன்னு எதிர்பார்க்கலே!

கணேசன் : நான் தஞ்சாவூரில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே பெரியார் மீது பெரிய பக்தியே கொண்டிருந்தேன். அவருடைய வெண் தாடிதான் என்னை முதலில் ஈர்த்தது. பிறகுதான் அவருடைய கொள்கைகள்.

நிருபர் : பிள்ளையார் சிலைகளை அவர் உடைத்த போது...?

கணேசன் : இந்தத் தகவல் இதுவரை யாருக்கும் தெரியாது. இப்போதுதான் சொல்லுகிறேன்: விநாயக சதுர்த்தி முடிந்து இரண்டு நாள் கழித்து கிணற்றில் போடப் போவதற்கு முன்னால், நானே பலகையிலிருந்து கீழே போட்டு உடைத்திருக்கிறேன். பெரியாரின் கொள்கைகள் என்னை அப்போதே பாதித்திருந்தன.

நிருபர் : *(அசந்து போய்)* அப்படி எத்தனை பொம்மைகள் உடைச்சிருக்கீங்க?

கணேசன் : அது இருக்கும் 50 - 60.

நிருபர் : கண்ணகி சிலை விவகாரம்...

கணேசன் : மூடநம்பிக்கை காரணமாகத்தான் அது அகற்றப்பட்டது. பெரியார் வாழ்நாள் முழுக்க எதற்குப் பாடுபட்டாரோ அதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ளாமல் புறக்கணித்து வருகிறார்கள். மூடநம்பிக்கை மக்களை மட்டுமல்ல, மஞ்சள் துண்டு அணிந்த சில கட்சித் தலைவர்களைக் கூட விட்டு வைக்கவில்லை என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.

நிருபர் : கண்ணகி சிலை அகற்றப்பட்டதால்தான் மழை பெய்ததாமே?

கணேசன் : இதற்கு முன்பும் கண்ணகி சிலை 30 வருடங்களாக அங்கேதானே இருந்தது. மழை பெய்யவில்லையா?



''தமிழ் வாத்தியாரை ஜோக் எழுதச் சொன்னது தப்பா போச்சு.''

''என்ன ஆச்சு?''

''நாலு வரியில் ஜோக் எழுதிவிட்டு நாற்பது வரியில் அதுக்கு விளக்க உரை, விரிவுரை எழுதிட்டு வந்திருக்காரு!''

— லலிதா செல்லப்பா

நிருபர் : நீங்கள் சொல்லுவது கருணாநிதிக்கு ஆதரவாக அல்லவா இருக்கிறது?

கணேசன் : என்னுடையது வாதம். அவருடையது பிடிவாதம். தன் பெயர் பொறித்த சிலையின் பீடம் அகற்றப்பட்டதில்தான் அவருக்கு அதிர்ச்சி, கோபம் எல்லாம். சிலை அகற்றப்பட்டதற்கு அல்ல. இதை அவருடைய தோழமைக் கட்சிகள் புரிந்து கொண்டால் நல்லது.

நிருபர் : தில்லியில் பெரியார் மையம் இடிக்கப்பட்டது தொடர்பாக....

கணேசன் : பாபர் மசூதியை இடித்த பாதகர்கள் செய்த கொடுஞ்செயலின் தொடர்ச்சிதான் இது.

நிருபர் : பிரதமர் உங்கள் வேண்டுகோளுக்கு என்ன பதில் தந்தார்?

கணேசன் : பாபர் மசூதி கட்டப்படும் போது, பெரியார் மையமும் கட்டாயம் கட்டப்படும் என்று பிரதமர் உறுதி அளித்திருக்கிறார். எங்களுக்கு மகிழ்ச்சிதான்.

(நிருபர் மயங்கி விழப் போக, இல. கணேசன் பிடித்துக் கொள்கிறார்.)

ஒரு கிசுகிசு :

மூதறிஞரின் சீடனாயிருந்து பல கட்சிகளுக்குத் தாவி, தற்சமயம் அகில இந்தியக் கட்சியில் வாய்மூடி மௌனியாக இருந்து வருபவர், பா.ம.க.வில் சேர முயன்றாராம். 'ஏற்கெனவே ஒரு டாக்டர் இங்கே தலைவராக இருப்பதால், இன்னொரு டாக்டருக்கு இடமில்லை என்று கட்சித் தலைமை பச்சையாகச் சொல்லி விட்டதாம்!

கற்பனை : **குறும்புசாமி**

கார்ட்டூன் : **சேகர்**

நுபாக்கூர் வயிற்று வலியைக் காரணம் காட்டி விஷ்ணுவல்தாசன், ஆபிசுக்கு இரண்டு நாள் மட்டம் போட்டதால், கண்ணம்மா பேட்டை ஏரியாவில் லாட்டரி விற்கும் கஜாவும், அதே பகுதியில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டி சமுக சேவை செய்து வரும் கிரியும், (அதாவது சென்னை மாநகரப் பேருந்தை விட கிரியின் ரிக்ஷாவில் கட்டணம் குறைவு! வேகம் அதிகம்) முதல் நாள் இரவு காட்சியில் பார்த்த லைலாவின் காதலன் (அதாங்க மஜ்னு!) படத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததையே விமர்சனமாக சமர்ப்பிக்கிறோம்.

"இன்னாம்மா கிரி, ராத்திரி தியேட்டர்லே இன்ட்ரோலுக்கு அப்பாலே தூங்கித் தூங்கி விழுந்துக்கினு இருந்த போலக்கீது."

"அத ஏம்பா கேக்குற... நம்ம நாயர் டீ கடையிலே, படம் வர்றதுக்குக்கு முன்னாடியே பல தபா மஜ்னு பட பாட்டையெல்லாம் கேட்டுக்கிறேன். இத்தினி சோக்காக்கீதே படமும் டக்கராயிருக்கும்ன்னுதான் நைட்ஷோவுக்கு வந்தேன். ஃபஸ்ட் ஆஃப் பிரேக் இல்லாத நம்ம பெருமான் ஆட்டோ கணக்கா சர்புர்ன்னுதான் வேகமாப் போச்சு. அப்பாலே டைரக்டரு என்ன எழவு எடுக்கிறதுன்னே தெரியாம கொழம்பிப் போயிட்டாரு. அதான் அடிக்கடி கண்ணு சொருகிப்பூட்டுது."

"கதையை கவனிச்சக்கினியா? நம்ம ரகுவரன் பால்தாக்கரே கணக்கா நடிக்கிறாரு. அவரை கொல்றதுக்கு, டெல்லியிலேர்ந்து ஒரு மந்திரி, ஆள் செட் பண்றான். இதுக்கு ஊடாலே, ரகுவரன் பேசுற பப்ளிக் மீட்டிங் மேடை யிலே குண்டு வெடிக்குது. அந்த நேரம் பார்த்து அங்கே வர்ற ஹீரோயின் மேல பழி உழுது. எல்லாரும் தொறத்துறாங்க. சரி... யார்ரா அடைக்கலம் கொடுக்குறான்னு பார்த்தா... ரகுவரன் மகனா வர்ற பிரசாந்து. அவுரு வூட்டுலேயே அந்தப் பொண்ணை... ஒளிச்சு வெக்கிறாரு. அதுக்கு முன்னாலேயே அந்தப் பொண்ணு மேல அவருக்கு லவ்வு."

"இந்த எடத்துல ஒண்ணு கவுனிச்சியா கஜா? நம்ம பிரசாந்து தம்பி... பக்கத்துலே பஞ்சு கணக்கா ஒரு பொண்ணு இருந்தும் இவுரு பத்திக்காம, பத்திரமா காப்பாத்தி கல்கத்தாவுக்கு ரயிலேத்தி வுடுறாரு. இது ரொம்ப நேர்மையா இருக்குல்லே."

"அது கல்கத்தா இல்லப்பா இப்போ கொல்கத்தான்னு மாத்திப்புட்டாங்க. கொல்கத்தான்னு சொன்னதும் ஞாபகம் வந்துடுச்சி... ரகுவரனைக் கொல்ல வந்த கும்பலோட தலைவன் யாருடான்னா... நம்ம ஹீரோயின் அண்ணன்."

"படத்துல டர்னிங் பாய்ண்ட்டெல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனா என்னமோ ஒண்ணு படத்துலே கொறையுதே கவுனிச்சியா?"

"அது வேற ஒண்ணுமில்லே கிரி... ரகுவரனை பால்தாக்கரே மாதிரி காட்டி, அவுரு பையன் லவ் பண்ற பொண்ணு ஒரு முஸ்லீம் தீவிராவாதியோட தங்கச்சி மாதிரி காட்டணும்ன்னு டைரக்டரு தில்லா நெனைச்சிருக்காரு. ஆனா புருடிசரு வுடலை போலகீது. அதான் அதைச் சொதப்பீட்டாரு அதுவுமில்லாமே ஹீரோயின் செலக்ஷன்லே கோட்டை வுட்டுப்புட்டாங்க. அந்தப் பொண்ணு பேரு என்ன ஆங்.. ரிங்கி கன்னா அதாம்ப்பா.. டிம்பிள் கபாடியா பொண்ணு. குளோசப்ல காட்டும்போது பேஜாராக்கீது சரி மொவத்துலையாவது கொஞ்சம் பீலிங்கு காட்டி நடிக்குதான்னா, அதுவும் இல்லே. தப்பித்தவறி பீலிங்கு காட்டணும்ன்னு அது அழுதா நமக்குச் சிரிப்பு வருது!"

"சோக்கா சொன்ன கஜா. ஆனா முழுப் படத்தை ஒக்காந்து பாக்கவெச்சது மியூசிக்குதான்னு சொல்லுவேன்."

"பாயிண்டைப் புடுச்சிட்டியே. படத்துக்கு ஹீரோ பிரசாந்தா இல்லே பின்னணி இசையான்னு சந்தேகமா இருக்கு. அந்த மாதிரி கௌப்பு கௌப்புன்னு தூள் கௌப்பிபுட்டாரு நம்ம ஹாரிஸ் ஜெயராஜு. ஆறு பாட்டும் அல்வா மாதிரியில்லே சூப்பராக்கீது."

"ஆனா 'தென்காத்து சீமையிலே' பாட்டை 'பிஞ்சு தென்றலே பிஞ்சு தென்றலே'ன்னு சோக்கா உல்டா பண்ணிக்கிறாரு."

"பெரிய ஆளுப்பா நீ. அதே மாதிரி பாட்டு சீனையெல்லாம்



டைரக்டரு ரவிச்சந்திரன் இன்னா சூப்பரா படம் புடுச்சுருக்காரு. சும்மா சொல்லக் கூடாது ரொம்ப கஷ்டப்பட்டுருக்காரு."

"அப்பாலே நம்ம வைரமுத்து மட்டும் இன்னா இலேசுபட்ட ஆளா. ஒவ்வொரு வரியும் தேனு சொட்டுதுல்லே..."

"சரி சரி நம்ம பிரசாந்த் ஆக்டிங்கு பத்தி இன்னா நெனக்கிறே?"

"இன்னும் எத்தனை தபாதான் சும்மனாங் காட்டி லவ் பண்ணிக்கினு. ஃபிகருகளை, தொறத்திக்கினு இருப்பாரு. நடிப்புக்குச் சவாலு வுடுற மாதிரி இவுரு எப்போ நடிப்பாரு."

"அதாவது பரவாயில்ல கிரி. அரசியல்வாதி கேரக்டர்லேயும்,



மஜ்னு



• ரவிச்சந்திரன்

அதே வில்லன் கணக்கா நடிச்சி வெறுப்பேத்துறாரு நம்ம ரகுவரன்."

"அது கெடந்துட்டுப் போவுதுப்பா, நம்ம தலைவிதி! இந்த விவேக் பையன் இல்லாங் காட்டியும் நம்ம நெலமைய நெனைச்சுப் பார்த்தியா?"

"ஆமாமா... எஸ்டிடிபூத்துல பத்தொம்போது ரூவாக்கி ஃபோன் பேசிட்டு ஒரே நோட்டா கொடுக்கிற சீனுலே, நம்மூரு நரசிம்மராவுங்ககூட சிரிக்கிறாங்க..."

"அப்பாலே புதிய வார்ப்புகள்ல ஹீரோயினா நடிச்சாங்களே ரத்தி... அவங்க இன்னும் அதே மாதிரி இருக்காங்க. ரிங்கி கன்னாவுக்கு அவங்களை அம்மாவா போட்டதுக்குப் பதிலா அவங்களையே ஹீரோயினா போட்டுருக் கலாம்பா!"

"சவுண்டா பேசாத. புருடீசரு காதுல வுழுந்துடப் போவது... அவரு தான் ஹீரோயின் செலக்ஷன் செய்துருக்காருன்னு டாக்கு!"

"அப்பாலே டைரக்டருக்குச் சொதந்திரமே கிடையாதா?"

"ஏன் கிடையாது. ரவிச்சந்திரன் அடுத்து இயக்கப் போற 'ஹம்மிங்' படத்துல அவரே சூப்பரா இரண்டு ஹீரோயின்களை அறிமுகப்படுத்துறாரு. அப்புறம் இந்தப் படத்துக்கும் ஹாரிஸ் ஜெயராஜ்தான் மியூஜிக். இவங்க ரெண்டு பேரும்... ரொம்ப நான் தோஸ்த்துங்கன்னு பேசிக்கிறாங்க."

"இந்தப் படம் அப்படி இப்படின்னாலும் வசூலுக்கு வொர்க் அவுட் ஆவுற கூட்டணிதான்!"

கான்கிரீட் கனவு

வித்யா பிரசன்னா

மேற்தளம் கான்கிரீட் முடிந்து நிழல் வந்தபிறகு நண்பனைப் பார்க்க வரச் சொல்லியிருந்தான். இப்போதுதான் வீடு என்கிற பார்வை அம்சத்துக்கு மனை தயாராகி வந்தது. பெண் ருதுவான மாதிரி!

"என்னடா இவ்ளோ லேட்டு?" என்று புன்னகை செய்தான் பாலாஜி.

"எவ்வளவு தூரம்...! பஸ் கிடைச்சு வர ணும்ல...?"

அதற்கு மேல் கேள்வி கேட்க பயமாய் இருந்தது.

"எவ்வளவு இடம்டா இது?"

"ஒரு கிரவுண்டு."

"என்ன விலை?"

"அறுபது..."

"இதுவா?" என்று நண்பன் திரும்பிப் பார்த்தபோது, குளுக்கென்று உள்ளே ஏதோ முறிந்து, எச்சிலைக் கூட்டி விழுங்கினான் பாலாஜி.

"அப்ருவ்டா?"

"வாங்கணும்" என்று சொல்லவே கருதி இறங்கிவிட்டது.

"தனியா வாங்கினா செலவு அதிகமாகும். தெரு லே அவுட்டுக்கும் சேர்த்துப் பணம் கட்டணும். கரண்டு தரமாட்டான்...!" என்று நண்பன் அடுக்கிக் கொண்டே போனான்.

அவசரப்பட்டு வீடு கட்டுகிறோமோ?

கிணறை எட்டிப் பார்த்துவிட்டு "இங்கயே இவ்ளோ ஆழத்துல இருக்கே தண்ணி..." என்றபடி வாளியில் இறைத்துக் குடித்தவன், அவசரமாய்த் 'தூ' 'தூ' வெனத் துப்பினான்.

"இந்தா" என்று கொண்டு வந்திருந்த பாட்டில் தண்ணீரை நீட்டினான் பாலாஜி. அழுகை வரும் போலிருந்தது.



ஏமாந்து விட்டோமோ?

"இது ஹால். இது படிக்கும் அறை. படுக்கை அறை. சமையல் அறை இது. அந்தப் பக்கம் சமையலறையிலேயே பூஜையறை தனியே...!" என்று விளக்கிக்கொண்டே வந்தபோது வெட்கமாகவே உணர நேர்ந்துவிட்டது.

"எல்லாம் சின்ன சின்னதா இருக்கு. போதாது" என்றான் நண்பன்.

இருவருமாய் வெளியே வந்தார்கள். பாலாஜி காம்பவுண்டுக் கதவைப் பூட்டிய போது நண்பன் கேட்டான்.

"இங்க வேறெதாவது பிளாட் இருக்கா?"

பாலாஜி சட்டென்று பிரகாசமாகி, "அட, நான் வாங்கும்போதே அத்தனையும் வித்துட்டது" என்றான். ○

ஸ்ரீ :

ஸ்ரீமதே லக்ஷ்மி நாராயண பரப்ரம்மணே நம: ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுனயே நம:

கடலூர் மாவட்டம் வடலூரை அடுத்த

கருங்குழி ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் சன்னதி

மஹாஸம்ப்ரோக்ஷணப் பத்திரிகை

ஸ்ரிய: பதியாய் அவாப்தஸமஸ்தகாமனான ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை தனது மடியில் வைத்து கொண்டும்,

ஸ்ரீ கோபில மஹரிஷி ஸ்ரீ மந் நாராயணனை நேரில் தரிசிக்க வேண்டும் என்ற தனது எண்ணம் ஈடேறும் பொருட்டு தீர்த்த யாத்திரை முடித்து தனது ஆசிரமத்திற்கு திரும்புங்கால், அவரது உடல்நிலை மோசமாகிறது.

ஸ்ரீ மந் நாராயணனை நேரில் தரிசிக்காமல் தனது உயிர் பிரிந்து விடுமோ என கவலை கொண்ட மஹரிஷி ஸ்ரீ விஷ்ணுவை மனமுருகி பிரார்த்திக்கிறார். பிரார்த்தனைக்கு இணங்க ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ லெக்ஷ்மி நாராயணனாக கோபில மஹரிஷிக்கு காட்சியளித்த திருத்தலம்தான் கருங்குழி.

பிற சமய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தில்லை ஸ்ரீ கோவிந்த ராஜ பெருமானை வைணவர்கள் இவ்வாலயத்தில் வைத்து பூஜித்தனர். இதை அறிந்த ஸ்ரீ மான் ராமானுஜர் இவ்வாலயத்திற்கு எழுந்தருளி மங்களாசாசனம் செய்ததுடன் ஸ்ரீ கோவிந்தராஜ பெருமானை எடுத்து சென்று திருப்பதியில் பிரதிஷ்டை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருக்கோயில் முற்காலத்தில் அச்சுதப்பநாயகரால் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஸ்ரீஉவே சோளங்கிபுரம் சண்டமாருதம் தொட்டாச்சார் ஸ்வாமி மங்களாசாசனத்தில் இருந்து வந்தது. வள்ளலார் ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் தன்னுடைய திருவருட்பாவில் இந்த ஸ்ரீமந்நாராயணனை ஸ்ரீ ராமராமவெனவும், தாமோதராய, நாராயணாய, வாமனாய, கேசவாயவெனவும் வாயாரப்புகழ்ந்து பாடி அனுபவித்துள்ளார்.

இப்போது இத்திருக்கோயில் ஸ்ரீ லக்ஷ்மிநாராயண பெருமாள் பக்தஜனசபாவின் (பதிவு எண்: 148/2000) முயற்சியால் நல்லமுறையில் திருப்பணி நடந்து மகா ஸம்ப்ரோக்ஷணம் செய்யும் நிலையில் பொலிவுடன் விளங்குகிறது. நாளது விஷு ஸ்ரீ தை மீ 14ந் தேதி (27.01.2002)ஞாயிற்றுக் கிழமை புனர்பூச நட்சத்திரம் சித்த யோகம் கூடிய சுபதினத்தில் காலை 9.30 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் மீன லக்னத்தில் மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடத்த ஸ்ரீ பெருமாள் நியமனப்படி பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு தை மீ 10ந் தேதி (23.01.2002) புதன்கிழமை மாலை முதல் சோளங்கிபுரம் ஸ்ரீ உவே கோ.கம்.சம். வேதாந் தாச்சார்யார் ஸ்வாமியின் அனுகிரகத்துடன் நடக்கவிருப்பதால் இதை கண்ணுறும் பக்தர்கள் அனைவரும் தங்களால் ஆனவகையில் பகவத் கைங்கர்யத்தில் பங்கு கொண்டு சிறப்பாக பூர்த்தி செய்து ஸ்ரீ லக்ஷ்மிநாராயண பெருமாளின் க்ருபா கடாக்ஷத்தைப் பெற்று சகல ஐஸ்வர்யங்களையும் அனுபவிக்க வேண்டுமாய் பிரார்த்திக்கிறோம்.

பகவத் கைங்கர்யத்தில் ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் பக்த ஜனசபா கருங்குழி (வழி) வடலூர் - 607 303.

இங்ஙனம்,
தலைவர்
ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் பக்த ஜனசபா
கருங்குழி (வழி) வடலூர் - 607 303.
பரம்பரை அறங்காவலர் மற்றும் கிராமவாசிகள்

குறிப்பு: இத்திருக்கோயிலுக்கு வழங்கப்படும் நன்கொடைகள் வருமான வரி பிரிவின் கீழ் வரிவிலக்கு பெற்றது. நன்கொடை கொடுக்க விருப்பமுள்ளவர்கள் 'ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் பக்த ஜனசபா' என்ற பெயருக்கு காசோலை / வரைவோலை மூலமாக அனுப்பலாம்.

Happy New Year

FITCH RATINGS — IND AA — HIGH SAFETY RATINGS

Life is too Wonderful to be spent worrying

FIRST AMONGST — ISO 9001 CERTIFIED — NBFC'S

PERIOD	NON-CUMULATIVE DEPOSIT SCHEME - A		CUMULATIVE DEPOSIT SCHEME - B	
	Monthly	Quarterly	Interest Rate	Effective Annual Yield
12 Months	10.50 %	10.50 %	11.50 %	11.50 %
18 Months	N.A	N.A	11.75%	12.21%
24 Months	11.00 %	11.00 %	12.00 %	12.72 %
36 Months	11.50 %	11.50 %	12.25 %	13.81 %
60 Months	12.50 %	12.50 %	12.50 %	16.04 %
Minimum Amount (Rs.)	15000	10000	5000	

PERIOD	MONEY MULTIPLIER - SCHEME - C	
	Minimum Deposit Rs.	Maturity value Rs.
42 Months	10000	15000

NICCO UCO ALLIANCE CREDIT LTD.

Regd. Office : NICCO House, 2, Hare Street, Kolkata - 700 001. Tel : 248-5102 (6 Lines).
Southern Divisional Office : Aalim Centre, 3rd Floor, 82, Dr. Radhakrishnan Salai, Chennai - 600 004. Phone : (044) 8112446 / 8113548 / 8111661. Fax : (044) 8111959.

Branches : • Bangalore ✆ 5325344/45 • Calicut ✆ 720456 • Cochin ✆ 316356 • Coimbatore ✆ 542376 • Hyderabad ✆ 3233806 • Madurai ✆ 630251 • Mettur ✆ 31813 • Mumbai ✆ 3723448 • Namakkal ✆ 80475 • Nasik ✆ 501807 • New Delhi ✆ 4601610 • Salem ✆ 334404 • Trichy ✆ 761168 • Tuticorin ✆ 327407 • Vellore ✆ 223008 • Vijayawada ✆ 483904

The Statutory Advertisement published in the Hindustan Times and Kalantar on 1-10-2001



சுடுகாட்டில் தொடங்கிய




"கமல்ஹாசன் காமெடி படத்தில் நடிக்கப் போகிறாரா? வசனம் எழுத கூப்பிடு கிரேஸிமோகனை" என்று சொல்லுவது கோடம்பாக்கத்து வழக்கமாகி விட்டது! 'ஆளவந்தான்' படம் முடிந்த கையோடு, கமல் அடித்த மொட்டைத் தலையில் வளர்ந்திருக்கும் அரை அங்குல முடியோடு, மனிதர் அவசர அவசரமாக நடித்துக்கொண்டிருக்கும் படம், பம்மல் கே சம்பந்தம்.

இந்த மெகா நகைச்சுவைப் படத்திற்கும் கிரேஸிமோகன்தான் வசனம். "அப்படியென்ன உங்களுக்கும் கமலுக்கும் ஏதாவது தொட்டில் பழக்கமா?" என்றால் "அட! அந்த ரகசியம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது" என்று சொல்லிவிட்டு கிச்சு கிச்சு மூட்டத் தொடங்கினார்.

"சென்னை செயின்ட் மேரிஸ் சாலையில் இருந்த சுடுகாட்டில் 'சத்யா' படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. எனக்குப் பக்கத்திலேயே வீடு. கமலை வேடிக்கைப் பார்க்க கூட்டத்தோடு கூட்டமாக நின்றுகொண்டிருந்தேன். அத்தனை கூட்டத்திலும் கமல் என்னை அடையாளம் கண்டுகொண்டு கூப்பிட்டார். இதுதான் சமயமென்று எனது 'மிடில் கிளாஸ் மர்டர்' நாடகத்தின் நூறாவது காட்சிக்குத் தலைமை தாங்க வர வேண்டும் என்றேன். ஒத்துக்கொண்டார். அதன்பிறகு ஒருநாள் என் வீட்டிற்குத் திடீரென்று வந்த கமல் என்னைக் காரில் ஏற்றிக்கொண்டு போனார். பார்க்க அறிவுஜீவி போல இருந்த ஒரு மனிதரிடம் அறிமுகப்படுத்தினார். "இவன்தான் 'அபூர்வ சகோதரர்கள்' படத்திற்கு வசனம் எழுதப் போகிறான்" என்று சொல்லிவிட்டு, 'இவர் இயக்குனர் சிங்கீதம் சீனிவாசராவ்' என்றதும் எனக்கு இன்ப அதிர்ச்சி! அதன்பிறகு கனவுத் தொழிற்சாலையின் ஒவ்வொரு துறையையும் எனக்குப் பழக்கப்படுத்தியவர் கமல்தான். தொட்டிலுக்குப் பதிலாக அன்று சுடுகாட்டில் தொடங்கிய எங்கள் நட்பு இன்று கமலுக்கு நான் எழுதும் பத்தாவது படமான பம்மல் கே சம்பந்தம் வரையிலும் தொடர்கிறது... இறுதிமூச்சு உள்ளவரை தொடரும்"

என்று உணர்ச்சி வசப்பட்டவரைத் தடுத்தாட்கொண்டு மறுபடியும் கிச்சுகிச்சு மனநிலைக்கு இழுத்து வந்தோம்....

"மௌனி ஒரு மேடை மேதை, நீங்களும் தான். (இப்படிச் சொல்லும்போது கிரேஸியின் முன்பக்க வழுக்கையில் வெட்கம் டாலடிக்கிறது) இரண்டு நாடக ஆட்கள் எப்படி ஒரே படத்தில் வேலை செய்ய முடியும். குடுமிப்பிடி



நட்பு!

சண்டை வந்து விடாதா'' என்றால், ''என்ன இப்படிச் சொல்லிட்டீங்க... கமலும்கூட நாடகத்திலிருந்து வந்தவர்தானே. டி.கே. சண்முகம் சகோதரர்கள் நாடகக் குழுவில் தூள் கிளப்பியவர்தானே நம்ம கமல்!

''மௌலியோ நான் நேசித்த, ரசித்த ஒரு அற்புத நாடகக் கலைஞர். அவர் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இயக்கும் இந்தப் படத்திற்கு எழுத எனக்கு வாய்ப்பு என்றால் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் மாதிரி இரட்டிப்புச் சந்தோஷத்தில் இருக்கிறேனாக்கும்'' என்றவரின் காதருகில் நெருங்கி, ''அதென்ன பம்மல் கே சம்பந்தம்'' என்று கிசுகிசு குரலில் கேட்டோம். அவரும் நம் காதருகே நெருங்கி அதே குரலில் சொன்னார்.

''கமல் இந்தப் படத்தில் இரண்டு காதலர்களைப் பிரிக்க முயற்சி பண்ணும் கல்யாணம் ஆகாத பிரம்மச்சாரி. அதனால் படத்திற்கு என்ன டைட்டில் வைக்கலாம் என்று மண்டையில் உள்ள மசாலாவைக் கலக்கிக் கொண்டிருந்தபோது கிடைத்த டைட்டில்தான், கல்யாண சம்பந்தம்.

நாங்கள் மூவருமே நாடகத்திலிருந்து சினிமாவிற்கு வந்தவர்கள் என்பதால், நாடகத் தந்தை பம்மல் கே சம்பந்த முதலியாரின் ஊர்ப் பெயரான பம்மலை அதோடு சேர்த்துக்கொண்டோம். பம்மல் கல்யாண சம்பந்தம் என்பதன் சுருக்கம்தான் பம்மல் கே. சம்பந்தம்'' என்றவரிடம் ''கமலுக்கு இதில் என்ன பாத்திரம்'' என்றதும் மனிதர் தயங்காமல் ரகசியத்தை உடைக்கிறார்.

''கமல் ஒரு சினிமா ஸ்டண்ட் மாஸ்டர். கமலின் இயல்பான குணாதிசயம் நாகேஷ் பாதி, சிவாஜி மீதி. அதுதான் இந்தப் படத்திலும். படத்தில் காமெடி மட்டும்தான் என்றில்லை. 'தெனாலி'யில் கலங்க வைத்த மாதிரி இதிலும் சீரியஸ் டச் உண்டாக்கும்'' என்கிறார்.

''இத்தனை அவசர அவசரமா ஒரு படத்தை எடுத்து முடிச்சிருக்கீங்களே... ஏதும் பிரச்னையே இல்லையா?'' என்றால் ''அதை யேன் கேக்குறீங்க... கமல்தான் ஸ்டண்ட் மாஸ்டராக நடிக்கிறார். ஆனால் டைரக்டர் மௌலிக்கு கை ஒடிஞ்சுடுச்சி. வீட்டிலே வழுக்கி விழுந்துட்டார்! இதைக் கேள்விப்பட்டதும் எங்களுக்கெல்லாம் கை ஒடிஞ்சமாதிரி ஆயிப்போச்சு... மனுஷன் விட்டாரா? கையைத் தொட்டில் கட்டி மார்போடு தொங்கவிட்டு, ஒரு கையாலேயே ஆங்கிள் பார்த்து, ரெடி டேக் ஆக்ஷன் சொல்லி முழுப் படத்தையும் முடிச்சுட்டார். அதான் மௌலி...'' என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார்.




சந்திப்பு:
ஸ்ரீசக்கரம்
படம்: ரமேஷ்

குறள்வழி நடப்பவர்கள்!


இதனை இதனால் இவன்கண் ஆராய்ந்து
அதனை அவன்கண் விடல்.




உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு



அடக்கம் அமரருள் உய்க்கும்...



ஊழிற் பெருவலி யாவுள?...



ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்



குறும்பு : குல்லூ

குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்



வட்டமேஜை வட்டமேஜை வட்டமேஜை

✉ குப்பைத் தொட்டிக்கும், காயலான் கடைக்கும் போக வேண்டிய பொருட்களைச் சேகரித்து 'லவ் ஆர்ம்' போன்ற வித்தியாசமான இன்னிசைக் கருவிகளைத் தயாரிக்கும் ஜப்பானியரின் திறமை வியக்க வைத்தது.
சென்னை, வி.பாலகிருஷ்ணன்.

✉ சிறிது கூட நடுநிலை வழுவாது எழுதப்பட்ட 'முக்கியத்துவம் இழந்த முத்துக்கருப்பன்' தலையங்கம் பாராட்டுக்குரியது. மாணவர்கள் பக்கமும், எதிர்க்கட்சி தலைவர்கள் பக்கமும் தவறு இருப்பதைச் சுட்டிக் காட்டிய தங்கள் தலையங்கத்துக்கு ஒரு சபாஷ்!
மதுரை, வி. சிவா.





✉ சமீபத்தில் காலமான நடிகர் அசோக்குமார் பற்றிய கட்டுரை அருமை. மூன்று முறை எமனிடம் இருந்து மீண்டவர் நான்காவது முறை மாட்டிக் கொண்டது பரிதாபம்.
விழுப்புரம்,
வை. வெங்கடேசன்.



✉ "உயிர்களிடத்து அன்பு வேணும். தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்" என்ற பாரதியின் பாட்டை சிறுவர்கள் மூலமே நமக்கு உணர வைத்தது 'பூடம்' சிறுகதை. இந்த மனிதர் பணி நிமித்தம் அடிக்கடி நான் சுற்றும் கிராமங்களையே கதைப் புலமாகக் கொண்டு எழுதுவது அவர் கதைகளின் மீது ஒரு வாத்சல்யத்தை ஏற்படுத்துகிறது.
பாளையங்கோட்டை,
தி.சு. பாலசுப்பிரமணியன்.

✉ "பாராளுமன்றம்... பக்... பக்..!" என்ற தலைப்பைப் பார்த்ததும், என்னவோ ஏதோ என்று படித்துப் பார்த்தால்... பாராளுமன்றத்தின் அமைப்பையும், அதன் வரலாற்றையும் "நறுக்.. சுறுக்..!" என்று சுவை படக் கூறியிருந்தவிதம் பயன் உள்ளதாக இருந்தது.
தேனி, ஜி.மாரியப்பன்.

✉ கூவ(ம்) தரிசனம் கட்டுரை மிகவும் அருமை. வரலாற்றை நினைவு கூர்ந்து ஆன்மிக மணம் கமழ இருந்தது. நகரில் பிரவேசித்ததாலேயே நதியின் தூய்மை நச்சாயிற்று என்னும் வார்த்தை நச்!
சென்னை,
மா.இராம்ஜி.

✉ நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாடமியில் ப்ரியா சகோதரிகளுக்கு மிருதங்கம் வாசித்தவர் நெய்வேலி ஸ்கந்த சுப்ரமணியம். தும்புருவின் இசை விமர்சனத்தில் சீர்காழி ஸ்கந்த சுப்ரமணியம் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது.
ஹைதராபாத்,
உமா இராமனாதன்.

நறுக்... சுறுக்...!

✉ துணிவும், தன்னம்பிக்கையும் இருந்தால் படித்தவர்கள் மட்டுமல்ல படிக்காதவர்களும் சிறப்பாக செயல்பட முடியும் என்பதற்கு ஆயம்மாள் சிறந்த வழிகாட்டி.
சென்னை,
கன்னி. சுப்பிரமணியன்.

✉ 'சூரியனில் ஒரு மூன்று கால் காக்கை' கட்டுரை வெகு அருமை. சூரியனில் கூட இத்தனை அதிசயங்கள் இருக்கின்றனவா? சூரியப் புள்ளிகளைப் பற்றி 'சுப்ரபாலன்' ஒரு ஆராய்ச்சியே செய்துவிட்டார். பத்திரப்படுத்தப்பட வேண்டிய பயனுள்ள செய்திகள்!
நல்லூர், சு.சம்பத்.

சிறப்புத் தள்ளுபடி 10%

பிரம்மாண்டமான

BAPASI

25–வது சென்னை

புத்தகக் கண்காட்சி

ஜனவரி – 5ம் தேதி முதல் 19 வரை

இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி, சென்னை – 2

நேரம் :

வேலை நாட்களில் – மாலை 2.30 முதல் இரவு 8.30 வரை
7, 8, 9, 10, 11, 17, 18 தேதிகளில்
விடுமுறை நாட்களில் – காலை 11.30 முதல் இரவு 8.30 வரை
6, 12, 13, 14, 15, 16, 19 தேதிகளில்

நுழைவுக் கட்டணம் ரூ. 2.00 மட்டும்

தினமும் மாலை 6.00 முதல் 7.30 வரை – சிறப்புப் பேச்சாளர்கள்

தேதி	தலைப்பு	பேச்சாளர்
6.1.2002	பாதை மாறி - படிக்கும் பறவைகள்	ராதாகிருஷ்ணன் IPS
7.1.2002	தமிழர் சரித்திரம்	வலம்புரி ஜான்
8.1.2002	தமிழில் கிரேஸி கிண்டல்கள்	கிரேஸி மோகன்
9.1.2002	அரசியல், இலக்கிய, சினிமா - பார்வை	ஜெயகாந்தன்
10.1.2002	காலம் நமக்குத் தோழன்	லேனா தமிழ்வாணன்
11.1.2002	சிரிப்பேன், சிந்தித்து சிரிப்பேன்	தென்கச்சி சுவாமிநாதன்
12.1.2002	தமிழ் சினிமாவில் தமிழ்	நடிகர் சிவகுமார்
13.1.2002	எங்கேயோ கேட்ட ஒலி, ஒளி - அலைகள்	பால.இரமணி
14.1.2002	'வல்லவர்' குரலுக்கு மதிப்பு இருக்கும்	இறையன்பு IAS
15.1.2002	அன்பிற் சிறந்த தவமில்லை	தமிழருவி மணியன்
16.1.2002	முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்	சுதாங்கன்
17.1.2002	'அம்மி குத்த சிற்பி எதற்கு'	அப்துல் ரகுமான்
18.1.2002	'இள'மை இதோ ! இதோ !	இளம்பிறை மணிமாறன்
19.1.2002	'கள'வழி நாற்பது	கா. காளிமுத்து (சபாநாயகர்)

Programmes Sponsored by Eagle Diaries, Chennai


அறுசுவை அரசின் சிற்றுண்டி உண்டு

THE BOOK SELLERS' AND PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA, CHENNAI - 600 006.

'இன்ஸ்டன்ட்' சக்தி!

சில குடும்பங்களில் பரம்பரைத்தன்மையாகவே உயரம் குறைந்து காணப்படுவார்கள். 'அம்மா அஞ்சடி, அப்பா அரை அடி அதிகம். குழந்தை மட்டும் அமிதாப் மாதிரியா இருக்கும்?' என்றெல்லாம் சொல்வார்கள். மனம் தளராமல், டோலாசனம் செய்து வந்தால், குழந்தைகளுக்கு நல்ல உயரம் தரும். ஆனால் பதினெட்டு வயதுக்குள் டோலாசனம் பழகி தவறாது செய்து வர வேண்டும். திருமணம் ஆகாத பெண்கள், டோலாசனம் பழகி வந்தால், திருமணமான பின்னர், குழந்தை பெறுவதற்கான அவயங்கள் பலம் பெறும். கருப்பை, யோனி ஆகியவை ஏற்ற நிலை அடையும்.

நாள் முழுக்க அலுவலக வேலைகளில் அலுத்துப் போய் வீடு திரும்புபவர்களுக்கு, 'டோலாசனம்' இன்ஸ்டன்ட் சக்தி தந்து ஊக்கப்படுத்தும். செருப்புக் கடைகளின் முன்னால், 'இங்கு குதிகால் வலி செருப்பு கிடைக்கும்' என்று போர்டு வைக்குமளவுக்கு, குதிகால்வலி பிரச்னை பெண்களிடையே வெகு தீவிரமாக உள்ளது. 'டோலாசனம்' பழகி வந்தால், குதிகால் வலி மறைந்து விடும்.



• டோலாசனம்

எப்படிச் செய்வது?

■ விரிப்பின் மீது, கால்களை அரை அடி அளவு இடைவெளிவிட்டு, அகட்டி வைத்து நிற்கவும்.

■ கைகளை, பக்கவாட்டில் நீட்டி, பூமிக்கு இணையாகக் கொண்டு வரவும்.

■ மெதுவாக குதிகால்களை உயர்த்தி, நிமிர்ந்து உள்ளங் கைகளை மேல் நோக்கி திருப்பி, ஒன்று சேர்த்து, நமஸ்காரம் செய்வது போல் வைத்து, கால் விரல்கள், முன் கால் பாகங்களில் உடல் எடையை வைத்து 20 எண்ணிக்கைகள் இருக்க வேண்டும். கை முட்டியை வளைக்கக் கூடாது.

■ மெதுவாக, கைகளைப் பிரித்து, பக்க வாட்டில் கொண்டு வர வேண்டும். உடன் குதிகால்களைக் கீழ் நோக்கி கொண்டு வந்து, விரிப்பின் மீது வைத்து நின்று சிறிது ஓய்வு எடுக்கவும். மூன்று முறை செய்து ஓய்வெடுக்கவும்.

டோலாசனம் செய்து முடித்த நிலையை மாற்றாமல், அப்படியே விரிக்ஷாசனம் தொடரலாம்.

செய்முறை:

விரிப்பின் மீது நின்று வலது காலை மடித்து, கைகளால் பிடித்து, உள்ளங்காலை இடது தொடை உள்பகுதியில் படும் படி குதிகாலை மேல் நோக்கி வைக்கவும். கைகளை, பக்க வாட்டில் கொண்டு வந்து உயர்த்திக் கூப்பி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

■ கால்களின் அமைப்பு 'ட' வடிவத்தில் இருக்க வேண்டும். மடித்த கால்முட்டி, பக்க வாட்டத்தில் இருக்க வேண்டும். கை முட்டியை வளைக்காது நேராக உள்ள ஒரு பொருளை, கண்களைத் திறந்து பார்க்க வேண்டும். இதே நிலை

எச்சரிக்கை : இங்கே தரப்பட்டுள்ள யோகாசன பயற்சி முறைகள் தகவலுக்காக மட்டுமே. இவை வழிகாட்டி முறைகள் அல்ல. யோகாசன நிபுணரின் நேரடி கண்காணிப்பில்தான் பயிற்சி தொடங்க வேண்டும்.

யில் 15 எண்ணிக்கை இருக்க வேண்டும்.

■ கைகளை முதலில் பிரித்து, பிறகு கால்களைப் பிரித்து, சாதாரண நிலைக்கு வர வேண்டும். மாற்று ஆசனமாக இடது காலை மடித்து முன் போல செய்ய வேண்டும்.

■ மூன்று மாத பயிற்சிக்குப் பிறகு கண்களை மூடிப் பழக லாம்.

விரிக்ஷாசனம் செய்வதால் முதுகு வலி குணமாகும். நரம்புத் தளர்ச்சி உள்ளவர்களுக்கு நாங்கள் சிபாரிசு செய்யும் ஆசனங்களில் விரிக்ஷாசனம் பிரதானமானது. கண் பார்வை தெளிவடையும். மன ஒருமைப்பாடு, ஞாபக சக்தி கூடும். பதினெட்டு வயதுக்குள் பழகி வந்தால், உயரம் கூடும். உடல் வடிவழகு பெறும்.



• பாதஹஸ்தாசனம்



• விரிக்ஷாசனம்

அடுத்த நிலையாக பாத ஹஸ்தாசனம் செய்யலாம். நின்று முன்னால் குனிந்து பாதங்களை உள்ளங்கை தொடும் ஆசனம்.

செய்முறை:

விரிப்பின் மீது கால்களைச் சேர்த்து வைத்து நிற்கவும்.

■ கைகளை, பக்கவாட்டில் கொண்டு வந்து தலைக்கு மேல் காதுகளை ஒட்டியவாறு, மடிக்காமல் நிறுத்தவும். மெதுவாக முன்னால் குனிந்து கால் விரல்களைத் தொட முயற்சி செய்யவும். முடிந்தால் படத்திலுள்ளபடி, கால் பாதங்களைப் பற்றி முன்னால் வளைந்து, நெற்றிப் பொட்டு, கால் முட்டிகளைத் தொடும்படி முயற்சி செய்யவும்.

■ சாதாரண மூச்சில் இருபது எண்ணிக்கை இருக்கவும். கால் முட்டிகளை வளைக்கக் கூடாது.

■ கைகளைத் தளர்ச்சி செய்து மெதுவாக எழுந்து நிமிர்ந்து நிற்கவும். உடன் கைகளை உயர்த்தி நிற்கவும்.

■ கைகளை மெதுவாக பக்கவாட்டில் கொண்டு வந்து சிறிது ஓய்வு எடுக்கவும்.

■ மறுபடியும் முன்பு கூறியபடி செய்யவும். மூன்று முறை செய்து பின் ஓய்வெடுக்கலாம். பாத ஹஸ்தாசனத்தைச் செய்வதால் ஏற்படும் பலன்கள் பற்றி அறிய நேர்ந்தால், பெண்கள் விரும்பிச் செய்ய முன் வருவார்கள். ஏனென்றால், பாத ஹஸ்தாசனம் செய்வதால், உடல் எடை, தொந்தி குறையும். தலை முடி செழித்து வளரும். முடி கொட்டுவது அறவே நிற்கும். பெண்கள் தொடர்ந்து செய்து வந்தால், திருமணமானபின் சுகப்பிரசவம் ஆகவும், பின் நன்கு தாய்ப்பால் சுரக்கவும் உதவும். மாதவிடாய்க் கோளாறுகள் சரியாகும்.

கடந்த 14 வாரமாக தரப்பட்ட விளக்கங்கள், யோகக் கலையின் சிறு பகுதி மட்டுமே! இதனால் 'யோகா பயில வேண்டும்' என்ற ஆர்வம் உங்களிடையே தோன்றியிருந்தால் அதுவே இத்தொடரின் வெற்றி. ஆசனம், பிராணாயாமம், தியானம் ஆகியவற்றை முறையாகப் பயின்று, ஆரோக்கிய வாழ்வு வாழ பிரார்த்தனை செய்து முடிக்கிறேன்.

(முற்றும்)

படங்கள்: ஸ்ரீஹரி

டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார்

சைக்கிள் காதல்

மானஸா

குமரவேல் மாஸ்டரின் சைக்கிள் காணாமல் போய்விட்டது. பழைய வண்டி தான் என்றாலும் அவர் மனம் சோர்ந்து விடப் போகிறார். அந்தக் கால 'ராபின் ஹூட்'. இப்போது அந்தப் பெயரில் கம்பெனியே இல்லை.

அது ஒன்றும் அவர் சம்பாதித்து வாங்கியது இல்லை. அவரது அண்ணனுக்கு வேலை கிடைத்தபோது, அவர் ஒரு டூ வீலர் வாங்கிக் கொண்டு, அந்தச் சைக்கிளைப் பெரிய மனத்துடன் அவருக்குத் தந்ததாய் அவரே மகன்களிடம் சொல்லியிருக்கிறார்.

நான்கு நாட்களாக குமரவேல் ஊரில் இல்லை. அவர் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. தன் வகுப்பு மாணவர்களுடன் சுற்றுலா போயிருக்கிறார்.

அவன் தனது சைக்கிளை எப்போதும் அஃறிணையாக நினைத்ததே இல்லை. எப்போதாவது அது தவறிப் போய் சாய்ந்தால்கூட, பதவிசாய்த் தூக்கி, விழுந்து எழுந்த சிறுவன் தனது உடலின் காயங்களை ஆராய்வதுபோல், சைக்கிளை முன்னும் பின்னும் திருப்பி சேதமாகியிருக்கிறதா? எனப் பார்ப்பார்.

இளவயதில் பல நேரம் அதனை எடுத்துக் கொண்டு பல மணி நேரம்கூட மிதித்து அக்கம்பக்க கிராமங்களுக்குச் சென்று நண்பர்களையோ, உறவினர்களையோ சந்தித்து வருவார்.

'டபிள்ஸ்' போவதே தடை செய்யப்பட்டிருந்த அந்தக் காலத்தில், எப்போதும் அவரது சைக்கிளுக்கு உரிமை கொண்டாடும் இரு கல்லூரி நண்பர்களுடன் பயந்தபடி ட்ரிபிள்ஸ் போவார்.

மூன்று பேருடன் வண்டி மிதிப்பது சிரமமாக இருந்தாலும், அந்தச் சைக்கிளை அவரே செலுத்துவதில்தான் அவருக்கு ஒரு திருப்தி. வண்டியை யாரிடமும் தர மாட்டார்.

அவரது பள்ளி, வீட்டின் அருகிலேயே இருப்பதால் அதற்கு மட்டும் எப்போதும் நடைப் பயணம்தான், மற்றபடி எந்த வேலையாய் வெளியே போவதாயிருந்தாலும் சைக்கிளையே விரும்புவார்.

சென்னையைத் தவிக்க விட்டுக் கொண்டிருக்கும் தண்ணீர்ப் பஞ்சத்தில் அந்தச் சைக்கிள்தான் ரொம்ப உதவியாக இருந்தது. கல்லூரி படிக்கும் பெரியவன் கேரியரில் கோணி போட்டுக் கொண்டு நான்கு பிளாஸ்டிக் குடங்களைக் கட்டி ஏதாவது அடி பம்பிற்குப் போய்த் தினமும் தண்ணீர் கொண்டு வருவான். வழக்கமாய் வீட்டுக் கதவைப் பூட்டும் முன், இரவில் சைக்கிளை வராண்டாவில் ஏற்றி விட்டுத் தான் பூட்டுவார் குமரவேல்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நள்ளிரவு வரை தண்ணீர் கொண்டு வந்த அசதியிலோ என்னவோ, வீட்டின் பக்கவாட்டில் நிறுத்தியிருந்த சைக்கிளை எல்லோரும் மறந்து விட்டனர். சொல்லி வைத்தாற் போல் அன்றைய இரவில்தான் அது காணாமல் போய் விட்டது.

குமரவேல் வந்துவிட்டார். விவரம் தெரிவிக்கப்பட்டது. தோளுக்கு மேல் வளர்ந்துவிட்ட மகனைக் கண்டிக்க முடியவில்லை.

"நீயாவது கவனமா இருந்திருக்கக் கூடாதா?" என மனைவியிடமும், "போலீஸ் கம்ப்ளெயின்ட் குடுத்தியா?" என மகனிடமும் கேட்டார்.

பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டனர் மகன்கள். அவர் திரும்பவும் கேட்க, "அப்பா... அது எவ்வளவு பழைய

சைக்கிள்... அது காணாமப் போச்சுன்னு புகார் தர முடியுமா? கேட்டாலே கிண்டல் செய்வாங்க. ஏதோ பஜாஜ்.. யமஹா போயிட்ட மாதிரி சொல்றீங்களே.."

கோபம் வந்தது. ஆனால் பொறுமை காத்தார். அதன்மீது அவருக்கிருக்கும் உளவியல் சார்ந்த ஈடுபாடு இவர்களுக்குப் புரியாது.

"நீங்க வேணா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் உங்க நண்பர் மணிகண்டனிடம் கேட்டுப் பாருங்க. எத்தனையோ பழைய சைக்கிள்கள் அங்கே வீணாகிட்டிருக்கும். அதிலே நல்லதா ஒண்ணைத் தரச் சொல்லுங்க. காசு கொடுத்து வாங்கிக்கலாம்.."
என்றாள் மனைவி.

"... அதைவிட புதுசாகவே வாங்கிடலாம்.." என்றான் மகன்.

"புதுசா வாங்கி அதையும் பாழடிக்கணுமா? இந்தக் கால வண்டிகள் அதுபோல உழைக்குமா? இவன் அடிக்கற மாதிரி நாலு தவலை கட்டித் தண்ணீர் அடிச்சா சீக்கிரமே உட்கார்ந்துடும். அது இல்லாம இனிமே எப்படித் தண்ணீர் கொண்டு வர்றது?"

"சின்னவனின் ரேஞ்ஜரில்தான்.."

அன்றிலிருந்து வெளியே எங்கே போனாலும் தென்படும் சைக்கிள்களில் ஏதாவது தன்னுடையதாக இருக்காதா? என ஆர்வமாய்த் தேடுவார். அப்படித் தேடுவது அபத்தம் எனத் தெரியும்தான்.

எடுத்துப் போனவன் அதை இந்நேரம் முழுதாகவா வைத்திருப்பான்? அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து விற்றிருப்பான். அல்லது அது பல கை மாறி எங்கோ போயிருக்கும்.

முதல் மகனின்



பிரசவத்திற்காகக் காத்திருந்தபோது, திடீரென மனைவிக்கு வலி ஏற்பட, அவசரமாகப் போய் அந்தச் சைக்கிளில்தான் மருத்துவரை அழைத்து வந்தார். விடலைப் பருவத்தில் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் யாருக்கும் தெரியாமல் அதில் வலம் வந்ததும் உண்டு.

மகன்கள் எவ்வளவவோ கிண்டல் செய்து பார்த்தார்கள்.

"அப்பா... உங்க சைக்கிளைப் பார்த்து பள்ளிக் கூடப் பசங்கள்லாம் உங்களுக்குப் 'பேரிச்சம் பழ வண்டிக்காரர்'னு பேர் வச்சிருக்காங்க. எங்களுக்கு ரொம்ப அவமானமாயிருக்கு. அதை வித்துட்டு வேறே வாங்குங்களேன்."

ஆனால்.. அவர் அப்படிச் செய்ய நினைத்ததில்லை. மாறாக, "இந்தக் காலத்துல உடம்பைப் பராமரிக்கறேன்னுட்டு ஜிம்முக்குப் போய் காசைக் கரியாக்கற பசங்களுக்குச் சைக்கிளின் பெருமை எங்கே புரியப் போகுது. தினமும் சைக்கிளிங் போனா அதுவே உடற்பயிற்சிதான். அதை விட்டுட்டு பைக்லே பறக்க நினைக்கறாங்க.." என்பார்.

அக்கம் பக்க சைக்கிள் கடைகளில் தனது சைக்கிளின் அடையாளங்களைச் சொல்லி, யாரேனும் அதனை விற்க வந்தாலோ, அதனைப் பற்றி தகவல் தெரிந்தாலோ தனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார். நாட்கள் போயின. பலன் இல்லை.

புற நகர்ப் பகுதியில் ஒரு புது மனை புது விழாவிற்குப் போக வேண்டியிருந்தது. அப்பகுதிக்குப் பேருந்தில் போவது சரிப்படாது என்பதால் உடன் பணிபுரியும் நண்பர் தனது வீட்டிற்குக் குமரவேலை வரச் சொல்லிருந்தார். இருவருமாய்க் காரில் போய் வரலாம் என முடிவெடுத்திருந்தனர்.

எனவே காலை ஐந்து மணிக்கே நண்பரின் வீட்டில் மாஸ்டர் இருந்தார்.

"வாப்பா... எப்பவும் சைக்கிளில் வருவே.. அதுதான் காணாமப் போயிடுச்சே. எப்படி இவ்வளவு தூரம் வந்தே?"

"மகன் கொண்டு வந்து விட்டுட்டுப் போனான்."

"கொஞ்சம் உட்கார்.. காபி சாப்பிட்டதும் புறப்படலாம்.."

அப்போது பேப்பர்காரப் பையன் அன்றைய தினசரியைப் பவ்யமாகக் கொண்டு வந்து கொடுத்தான். அவனது செயலே மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தது. வழக்கமாய்ச் செய்தித் தாள்களை முகத்தில் அறைவது போல் எறிந்து விட்டுப் போகும் பையன்களைத்தான் குமரவேல் பார்த்திருக்கிறார். அதுவும் நண்பர் இருப்பது மாடியில். சுருட்டி வீசினால் ராக்கெட் போல பேப்பர் மேலே வந்து விழும். பையனோ ஊனமான காலுடன் சாய்ந்து நடந்தான். இந்நிலையில் படியேறி வந்து அவன் கொடுத்தது அவன் மீது மதிப்பை ஏற்படுத்தியது குமரவேலுக்கு.

"தம்பி.. கொஞ்சம் பொறு.. நீயும் ஒரு காபி சாப்பிட்டுட்டுப் போ..." என்ற நண்பர் உள்ளே திரும்பி மனைவியிடம் இன்னொரு காபியும் எடுத்து வரச் சொன்னார்.

"பரவாயில்லையே... இவ்வளவு சீக்கிரம் இங்கே பேப்பர் வந்துடுதே.. என் வீட்டுக்கு ஏழு மணிக்குத்தான் வரும்.." என்றார் குமரவேல்.

"பையன் ரொம்ப பொறுப்பானவன். சுறுசுறுப்பு. ஏன் தம்பி.. உங்க அப்பா 'வெளியே' வந்துட்டாரா?" என்றார் நண்பர்.

"இல்ல சார். அடிக்கடி ஏதாவது சில்லறைத் திருட்டுல மாட்டிக்கிட்டு ஜெயிலுக்குப் போய் வருவதே அவருக்கு வேலையாப் போச்சு. ஏதோ என்னோட, எங்க அம்மாவோட உழைப்புலதான் குடும்பம் நடந்துகிட்டிருக்கு. என் அப்பாவாலே எங்களுக்குத்தான் கெட்ட பெயர்.." என்றான் வருத்தத்துடன். அதற்குள் காபி வர, அவன் பருகி விட்டுக் கீழே போனான்.


நண்பர் உடை மாற்றிக் கொண்டதும் இருவரும் படியிறங்கியபோது, "ஏங்க.. உங்களுக்கு ஃபோன்.." என்றாள் அவரது மனைவி.

"நீ போய் காரில் இரு. நான் வந்துடறேன்.." என மேலே போனார் நண்பர். குமரவேல் மாஸ்டர் கீழே வந்தபோது,

சென்னையில் ஓடும் ஓர் ஆட்டோவின் பின்புறம் எழுதியிருந்த வாசகம் :

விபத்தை விதி என்றது வீணர்களின் மதி; பாதுகாப்பு விதிகளை மீறியதால் நேர்ந்த கதி.

- ஜி.ஜி. குமார்



இவர்கள் போகப் போகும் காரின் முன்பு தனது சைக்கிளை நிறுத்தி ஏதோ குடைந்து கொண்டிருந்தான் அவன்.

''என்னப்பா... நீ இன்னும் புறப் படலையா..?''

''சைக்கிள் கொஞ்சம் மக்கர் பண்ணுது. உங்ககிட்டே சொல்றதுக்கென்ன. இதுவே திருட்டு சைக்கிள்தான். முன்னாடியெல்லாம் பொழுது விடிஞ்சதும், வாடகை வண்டி எடுத்துகிட்டுப் பேப்பர் போடப் போவேன். இது கிடைச்சப்புறம்தான் என்னாலே சீக்கிரம் பேப்பர் போட முடியுது. வண்டி ரொம்பப் பழசா இருக்கறதால ஃப்ரீவில் பிரச்னை பண்ணுது. லூசான செயின் அடிக்கடிக் கழட்டிக்குது. இப்படியொரு வண்டியை வச்சுக்கிட்டிருந்தவர் எப்படியும் ஒரு ஏழையாகத்தான் இருப்பார். அப்படியொருத்தரிடமிருந்து இதைத் திருடிக்கிட்டு வந்திருக்காரே எங்க அப்பான்னு நினைக்கும்போது மனசுக்குக் கஷ்டமா இருக்கு. இது யாருதுன்னு தெரிஞ்சா அவங்க காலில் விழுந்தாவது மன்னிப்பு கேட்டு இதைக் கொடுத்துடுவேன். எத்தனை முறை கேட்டாலும் எங்க அப்பா சொல்லவே மாட்டேங்கறாரு..''

அப்போதுதான் சட்டெனக் கவனித்தார் குமரவேல். இது அவரது காணாமல் போன சைக்கிளேதான். கொஞ்ச நாளாக பராமரிப்பு இல்லாததாலும், அதிக பட்ச உழைப்பாலும் சண்டித்தனம் செய்கிறதோ.. என்னவோ.. இம்முறையும் அவர் அவசரப்படவில்லை.

சைக்கிளை நெருங்கி அதன் ஹாண்டில் பாரில் உற்று கவனித்தார். அவரது இனிஷியலும், பெயரின் முதலெழுத்தும் சேர்த்து 'டி.கே.' என ஆங்கிலத்தில் பொரித்திருந்தது தென்பட்டது. தனது சைக்கிள்தான் என உறுதி செய்து கொண்டார்.

ஆனால் அதைத் தனது எனச் சொந்தம் கொண்டாட இப்போது அவருக்கு மனமில்லை. அது காணாமல் போய்விட்டது என இது நாள் வரை மனத்தில் இருந்த வருத்தம் சுத்தமாய் வடிந்து விட்டதைப் போல் உணர்ந்தார்.

இப்படியொரு நல்லவனிடம் இது போய்ச் சேர்ந்திருக்கிறதே, அதுவே தானும், தன் சைக்கிளும் செய்த பாக்கியம் எனத் தோன்றியது.

பையன் தொடர்ந்தான்.

''...என்னோட தொழிலுக்கு இது உபயோகமா இருக்கறது உண்மைன்னாலும் என்னைக்காவது இதனோட சொந்தக்காரர் கண்ணிலே பட்டு நான் மாட்டிக்கிடப் போறனோன்னு பயம் இருந்துகிட்டே இருக்கு. அந்த உறுத்தலாலயே இருட்டோட என் வேலையை முடிச்சுகிட்டு வீட்ல போய் இதை வச்சுடுவேன். அப்பா வெளியே வந்ததும் திரும்பவும் கேட்டுப் பாக்கப் போறேன்.'' என்றான்.



''தூக்கத்தில நடக்கிற வியாதிக்கு மருந்து கொடுத்தேனே. இப்ப எப்படி இருக்கு...?''

''நல்ல முன்னேற்றம் டாக்டர். இப்பல்லாம் சைக்கிளை எடுத்துக்கிட்டு ஒரு ரவுண்டு போயிட்டு வந்திடறேன்...!''

- பாலு, சென்னை

அதற்குள் நண்பர் கீழே வந்து காரின் ஓட்டுனர் இருக்கையில் ஏறி அமர்ந்தார்.

பையன் சைக்கிளைச் சரி செய்து கொண்டு புறப்பட யத்தனித்தபோது, தனது பர்ஸிலிருந்து ஒரு நூறு ரூபாயை எடுத்து பையனிடம் தந்தார் குமரவேல். அறிமுகம் இல்லாத அவரின் செய்கை அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''... தம்பி. உன்னோட நல்ல மனசுக்கு உனக்கு எந்தப் பிரச்னையும் வராது. இந்தக் காசுல வண்டியை நல்லபடியா ரிப்பேர் செய்துக்கோ. சின்னச் சின்ன மாற்றங்கள் செய்து, தேவையான புது பாகங்களைப் போட்டு, பெயின்டும் அடிச்சிட்டியானா நீ இதைத் தைரியமா வெளியே எடுத்துட்டுப் போகலாம். உனக்கு இது இன்னும் அதிகமாகப் பயன்படும்.'' என்றார் குமரவேல்.

காரில் போகும்போது நண்பர் கேட்டார்.

''என்னப்பா.. அந்தப் பையனிடம் என்னவோ பேசிக்கிட்டிருந்தே. அவனுக்கு ஏதோ பணமும் கொடுத்தியே... எதுக்கு..?''

''நேர்மையா உழைக்கற பையன்.. சைக்கிள்ல ஏதோ ப்ராப்ளம்னான். அதான் ரிப்பேருக்குக் காசு கொடுத்தேன்.''

''பலே! உன்னோட 'சைக்கிள் காதல்' இன்னும் மாறலை போலிருக்கு..'' என்றார் நண்பர் கிண்டலாய்.

பதில் பேசாமல் அர்த்தத்துடன் புன்னகை செய்தார் குமரவேல்.



சிவகாமியின் சபதம்

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

மர்ம ஓலை

அமரர் கல்கி

இராஜாதிராஜனான புலிகேசி மன்னன் ஒல்லியாக உயர்ந்த ஆகிருதியும், வற்றி உலர்ந்து எலும்புகள் தெரிந்த தேகமும் உடையவனாக இருந்தான். அவனுடைய முகத் தோற்றம் இரும்பையொத்த நெஞ்சத்தையும், தயை தாட்சண்யம் இல்லாத கடூர சுபாவத்தையும் பிரதிபலித்தது. கோவைப் பழம் போல் சிவந்து அனல் கக்கிய அவனுடைய கண்களைப் பார்க்கும் போது, கழுகின் கண்களைப் போன்று தூரதிருஷ்டியுடைய கண்கள் அவை என்று தோன்றியது.

புலிகேசியின் முகத்தைப் பார்த்ததும் நமக்கு ஒரு கணம் திகைப்பு ஏற்படுகிறது. 'ஆ!' இந்த முகத்தை இதற்கு முன்னால் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா என்ன?" என்று வியப்புறுகிறோம். 'கம்பீரக் களையுடன் கடூரம் கலந்த இந்த முகத்தையும் அறிவொளியுடன் கோபக் கனலைக் கலந்து வீசும் இந்தக் கண்களையும் வேறு எங்கேயும் பார்த்திருக்க முடியாது' என்று தீர்மானிக்கிறோம். 'இத்தகைய முகம் வேறு யாருக்காவது இருப்பதென்றால், அது யமதர்மராஜனாகத்தான் இருக்க வேண்டும்!' என்ற முடிவுக்கு வருகிறோம்.

புலிகேசியின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பரஞ்சோதியும் அதே முடிவுக்குத்தான் வந்தான்.

பரஞ்சோதியைப் பிடித்துக் கொண்டு வந்த வீரர்களின் தலைவன் சத்யாச்ரய புலிகேசிக்கு வணக்கம் செலுத்திவிட்டு,

வடபெண்ணை நதிக்கரையிலுள்ள பௌத்த மடத் தலைவர் இந்த வாலிபனைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகச் சொன்னதிலிருந்து நடந்தவற்றை விவரமாகக் கூறி வந்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள்ளே புலிகேசி பொறுமை இழந்தவனாய், ''அதெல்லாம் இருக்கட்டும்; இவன் யார்? எதற்காக இவனைக் கொண்டு வந்தீர்கள்?'' என்று கோபக்குரலில் கர்ஜித்தான்.

வீரர் தலைவன் நடுங்கிய குரலில், 'நாகநந்தி பிக்ஷுவிடமிருந்து சத்யாச்ரயருக்கு ஓலை கொண்டு வந்ததாக இந்த வாலிபன் சொல்லுகிறான். இதோ அந்த ஓலை!'' என்று கூறி, பரஞ்சோதியிடமிருந்து வழியில் கைப்பற்றிய ஓலையைப் புலிகேசியிடம் சமர்ப்பித்தான்.

புலிகேசி ஓலையைப் பிரித்து, கவனமாகப் படித்தான். அப்போது அவனுடைய முகத்தில் வியப்புக்கும் குழப்பத்துக்கும் அறிகுறிகள் ஏற்பட்டன. ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்த பிறகும் தெளிவு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.


அவன் ஓலையைப் படித்தபோது அவனுக்கு எதிரில் இருந்த படைத் தலைவர்கள் அவனுடைய முகத்தையே பார்த்தவண்ணம் இருந்தனர்.

பரஞ்சோதியோ சொல்ல முடியாத மனக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் நாகநந்தியின் ஓலையை எடுத்துக்கொண்டு கிளம்பியபோது, இம்மாதிரி பகைவர்களிடம் சிறைப்பட்டு எதிரி அரசன் முன்னால் நிற்க நேரிடுமென்று நினைக்கவே இல்லை. அந்த எதிரியின் பாசறையில் வஜ்ரபாஹுவைச் சந்தித்ததும், அவன் போகிற போக்கில், ''சத்யாச்ரய புலிகேசியிடம் உண்மையை உள்ளபடி சொல்லு!'' என்று கூறியதும் அவனுடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின.

இன்னும் நாகநந்தி தன்னிடம் ஓலையைக் கொடுத்தபோது கூறிய வார்த்தைகள் நினைவு வந்தபோது அவன் தலையே, கிறுகிறுக்கும் போல் ஆகிவிட்டது. 'இந்த ஓலையை நீ சத்யாச்ரயரிடமே கொடுக்க வேண்டும். வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாது. சத்யாச்ரயரை ஒருவேளை நீ வழியிலேயே சந்தித்தாலும் சந்திக்கலாம். எப்போது எந்தக் கோலத்தில் அவர் இருப்பார் என்று சொல்ல முடியாது. அவரை எந்தக் கோலத்தில் பார்த்தாலும் நீ அதிசயப்படாதே! - இவ்விதம் நாகநந்தி பிக்ஷு கூறியது அவனுக்கு நினைவு வந்தது. 'நாகநந்தி கூறிய சத்யாச்ரயர் இந்த வாதாபி சக்கரவர்த்தி புலிகேசியா? நாம் கொண்டு வந்த ஓலையில் உள்ள விஷயம் அஜந்தா வர்ணக் கலவை சம்பந்தமானதுதானா? அல்லது, ஒரு பெரிய மர்மமான சூழ்ச்சியில் நாம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோமா?' என்று பரஞ்சோதி எண்ணியபோது, அவன் அறிவு குழம்பியது.

புலிகேசி சட்டென்று தலையைத் தூக்கி, எதிரே இருந்த படைத் தலைவர்களைப் பார்த்து, ''இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?'' என்று கேட்டான். உடனே, ''உங்களால் ஒரு நாளும் ஊகம் செய்ய முடியாது'' என்று தானே மறுமொழியும் கூறிவிட்டு, இடிஇடியென்று சிரித்தான்.

இடி முழக்கம் நிற்பது போலவே சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு,



காவலர்களுக்கு நடுவில் கட்டுண்டு நின்ற பரஞ்சோதியை உற்று நோக்கினான். புலிகேசியினுடைய கழுகுக் கண்களின் கூரிய பார்வை பரஞ்சோதியின் நெஞ்சையே ஊடுருவுவது போலிருந்தது.

புலிகேசி அவனைப் பார்த்துக் கடுமையான குரலில், "பிள்ளாய்! உண்மையைச் சொல்! நீ யார்? எங்கு வந்தாய்? இந்த ஓலையைக் கொடுத்தது யார்? இதிலுள்ள விஷயம் இன்னதென்று உனக்குத் தெரியுமா?" என்று சரமாரியாகக் கேள்விகளைப் போட்டான். அந்தக் கேள்விகளில் ஒன்றையும் புரிந்துகொள்ள முடியாதவனாய், பரஞ்சோதி மௌனம் சாதித்த வண்ணம் நின்றான்.



அதனால் புலிகேசியின் கோபம் கணத்துக்குக் கணம் பொங்கிப் பெருகிற்று. அதைப் பார்த்த படைத் தலைவர்களில் ஒருவன், "பிள்ளையாண்டான் செவிடு போலிருக்கிறது!" என்றான்.

இன்னொருவன், "இல்லை ஊமை!" என்றான்.

மற்றொருவன், "அதெல்லாம் இல்லை. பையனுக்கு நம்முடைய பாஷை புரியவில்லை! அதனால்தான் விழிக்கிறான்!" என்றான்.

அப்போது புலிகேசி, "ஆமாம்; அப்படித்தான் இருக்க வேண்டும். ஜைன முனிவர்கள் கோபித்துக் கொண்டு போனதில் அதுதான் ஒரு சங்கடம். அவர்கள் இருந்தால் எந்தப் பாஷையாக இருந்தாலும் மொழி பெயர்த்துச் சொல்லி விடுவார்கள். போகட்டும், இவனைக் கொண்டு போய்ச் சிறைப்படுத்தி வையுங்கள். பிறகு பார்த்துக் கொள்வோம்!" என்று கூறியவன், திடீரென்று, "வேண்டாம். இவன் இங்கேயே இருக்கட்டும். சற்று முன்பு வந்திருந்த வீரன் வஜ்ரபாஹுவை உடனே போய் அழைத்து வாருங்கள்!" என்றான்.

வஜ்ரபாஹுவை அழைக்க ஆள் போனபிறகு, புலிகேசி படைத் தலைவர்களைப் பார்த்துக் கூறினான்.

"இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது, தெரியுமா? கேளுங்கள் அதிசயத்தை! இந்த ஓலை கொண்டு வருகிற பையனிடம் அஜந்தா வர்ண இரகசியத்தைச் சொல்லி அனுப்ப வேணுமாம். இரண்டு வருஷம் நான் அஜந்தா குகைகளிலேயே வசித்திருந்தும் அந்தப் புத்த பிக்ஷுக்களிடமிருந்து வர்ண இரகசியத்தை என்னால் அறிய முடியவில்லை. பிக்ஷுக்கள் அவ்வளவு பத்திரமாக அஜந்தா வர்ண இரகசியத்தைப் பாதுகாக்கிறார்கள். அப்படியிருக்க இந்தப் பிள்ளையிடம் அதைச் சொல்லி அனுப்பும்படி இந்த ஓலையில் எழுதியிருக்கிறது. எழுத்தோ நம் பிக்ஷு எழுதியதாகவே தோன்றுகிறது. இதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர், மைத்ரேயரே!" என்று சொல்லிக்கொண்டே புலிகேசி மன்னன் அந்த ஓலையை ஒற்றர் படைத் தலைவனிடம் நீட்டினான்.

மைத்ரேயன் ஓலையை வாங்கிக் கவனமாகப் படித்தான். பின்னர் சக்கரவர்த்தியைப் பார்த்து, "சத்யாச்ரயா! இதில் ஏதோ மர்மமான செய்தி இருப்பதாகத் தெரிகிறது. பையனை விசாரிக்கிறபடி விசாரித்தால் தெரிகிறது!" என்றான்.

"அழகுதான், மைத்ரேயரே! பையனை விசாரித்தாலும் அவன் சொல்கிறது நமக்கு விளங்கினால்தானே உபயோகம்? அதற்காகத்தான் வஜ்ரபாஹுவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் புலிகேசி.

இப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வஜ்ரபாஹு கூடாரத்துள் நுழைந்தான். புலிகேசியின் அருகில் வந்து வணங்கி, "இராஜாதிராஜனே! மறுபடியும் ஏதாவது ஆக்ஞை உண்டா?" என்று கேட்டான்.

"வஜ்ரபாஹு, உம்மைப் போலவே, இந்தப் பையனும் எனக்கு ஓர் ஓலை கொண்டு வந்திருக்கிறான். ஆனால், அதிலுள்ள விஷயம் மர்மமாக இருக்கிறது. ஓலையை யார் கொடுத்தார்கள், யாரிடம் கொடுக்கச் சொன்னார்கள் என்பதை விவரமாக விசாரித்துச் சொல்லும், அதற்காகத்தான் உம்மை மீண்டும் தருவித்தேன்" என்றான்.

வஜ்ரபாஹு பரஞ்சோதியின் பக்கம் திரும்பி உற்றுப் பார்த்து, "ஆகா! இந்தப் பையனா? இவனை நான்


முந்தாநாள் இரவு மகேந்திர மண்டபத்தில் பார்த்தேனே! இவனைப் பார்த்ததுமே எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. விசாரித்தேன்; ஆனால், பையன் அமுக்கன்; மறுமொழியே சொல்லவில்லை!'' என்றான்.


''இப்போது விசாரியும், மறுமொழி சொல்லாவிட்டால், நாம் சொல்லச் செய்கிறோம்'' என்றான் வாதாபி அரசன்.

''மன்னர் மன்னா! இவன் சுத்த வீரனாகக் காண்கிறான். இவனைப் பயமுறுத்தித் தகவல் ஒன்றும் அறிய முடியாது; நானே விசாரித்துப் பார்க்கிறேன்'' என்று வஜ்ரபாஹு கூறிவிட்டுப் பரஞ்சோதியை நோக்கி, ''தம்பி! நான் அப்போதே சொன்னேனல்லவா, அதன்படி சத்யாச்ரயரிடம் உள்ளது உள்ளபடி சொல்லு! பயப்பட வேண்டாம். நான் உன்னைத் தப்புவிக்கிறேன்'' என்றான்.

அதற்குப் பரஞ்சோதி, ''ஐயா, எனக்குப் பயமே கிடையாது. எதற்காகப் பயப்பட வேண்டும்? உயிருக்கு மேல் நஷ்டமாகக் கூடியது ஒன்றுமில்லை அல்லவா? இந்த ஓலையை நாகார்ஜுன பர்வதத்துக்குக் கொண்டு போய்ச் சத்யாச்ரயரிடம் கொடுக்கும்படி நாகநந்தி பிக்ஷு கூறினார். நீங்கள் சொல்கிறபடி







இவருக்குத்தான் இந்த ஓலை என்றால், பெற்றுக் கொண்டு விடை எழுதிக் கொடுக்கட்டும். நான் எடுத்துக்கொண்டு திரும்புகிறேன் அல்லது இந்த ஓலை இவருக்கு அல்ல என்றால் ஓலையைத் திருப்பிக் கொடுக்கட்டும். வேறு என்ன நான் சொல்லக்கூடும்?'' என்றான்.

வஜ்ரபாஹு புலிகேசியைப் பார்த்து, ''அரசர்க்கரசரே, ஓலையை நாகநந்தி பிக்ஷுதான் கொடுத்ததாகவும், அதில் ஏதோ அஜந்தா வர்ணச் சேர்க்கையைப் பற்றி எழுதியிருப்பதாகவும் பிள்ளையாண்டான் சொல்கிறான். அந்த ஓலையை நான் சற்றுப் பார்வையிடலாமா?'' என்று கேட்டான்.

புலிகேசி ஓலையை வஜ்ரபாஹுவிடம் கொடுத்து, ''இதிலிருந்து தெரியக்கூடியது ஒன்றுமில்லை. நீர் வேணுமானாலும் பாரும்'' என்றான்.

வஜ்ரபாஹு ஓலையில் சிறிது நேரம் கவனம் செலுத்திவிட்டு, ''பிரபு, நாகார்ஜுன பர்வதத்திலுள்ள புத்த சங்கராமத்தின் தலைவரின் திருநாமம் சத்யாச்ரய பிக்ஷுதானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்; அதனால் என்ன?''

''இந்த ஓலை அவருக்கே இருக்கலாம் அல்லவா?''

''இருக்கலாம்; ஆனால் நாகநந்தி அவருக்கு இம்மாதிரி விஷயத்தைப் பற்றி எழுத நியாயமே இல்லையே?''

''பிரபு! இந்த ஓலையைப் படித்ததும் நாகநந்தி பிக்ஷு கூறிய ஒரு விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. கிருஷ்ணா நதிக்கரையோடு வேங்கி ராஜ்யத்தின்





மேல் படையெடுத்துச் செல்லும் தங்கள் சகோதரருக்கும் செய்தி அனுப்ப வேண்டும் என்றும் அவர் சொன்னார். ஒரு வேளை தங்கள் சகோதரர் விஷ்ணுவர்த்தன மகாராஜாவுக்கு இதில் ஏதாவது செய்தி இருக்கலாம் அல்லவா?"

இதைக் கேட்டதும் புலிகேசியின் முகம் பிரகாசமடைந்தது. "வஜ்ரபாஹு! நீர் மகா புத்திசாலி. நம்முடனேயே நீர் இருந்து விடலாமே? பல காரியங்களுக்கு அனுகூலமாயிருக்கும்" என்றான்.

பிறகு, தன் படைத் தலைவர்களிடம் சிறிது கலந்து யோசித்து விட்டு, "எப்படியும் விஷ்ணு வர்த்தனனுக்கு நான் ஓலை அனுப்ப வேண்டியிருக்கிறது. ஓலையுடன் ஒன்பது வீரர்கள் போகட்டும். அவர்களுடன் இந்தப் பையனையும் அனுப்புங்கள். இவனுடைய ஓலையின் விஷயம் என் தம்பிக்கும் விளங்காவிட்டால், இவனை உடனே சிரச்சேதம் செய்யக் கட்டளையிட்டு அனுப்புங்கள்!" என்றான். பிறகு, வஜ்ரபாஹுவை நோக்கி, "இந்த விஷயத்தைப் பையனிடம் சொல்லும்" என்று ஆக்ஞாபித்தான்.

வஜ்ரபாஹு பரஞ்சோதியிடம், "தம்பி! நாகார்ஜுன மலைக்கு இங்கிருந்து சக்கரவர்த்தியின் ஓலையுடன் ஒன்





பது வீரர்கள் நாளைக் காலையில் போகிறார்கள். அவர்கள் உன்னையும் அழைத்துப் போவார்கள். நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நாளை இராத்திரி உன்னை அநேகமாக நான் வழியில் சந்திப்பேன்'' என்றான்.

பரஞ்சோதி அகமும் முகமும் மலர்ந்தவனாய், "ஐயா! தங்களுடன் பிராயணம் செய்வதாயிருந்தால் நரகத்துக்கு வேணுமானாலும் வரச் சித்தம். தங்களிடம் கதை கேட்க அவ்வளவு ஆவலாக இருக்கிறது!'' என்றான்.

"பையன் என்ன சொல்கிறான்?'' என்று புலிகேசி கேட்டதற்கு, ''பிள்ளையாண்டான் பலே கைகாரன்; தான் கொண்டு வந்த ஓலை தங்களுக்கு இல்லையென்றால் தன்னிடம் திருப்பிக் கொடுத்து விடும்படி கேட்கிறான். இளங்கன்று பயமறியாது என்று தமிழிலே ஒரு பழமொழி உண்டு!'' என்றான் வஜ்ரபாஹு.

புலிகேசி சிரித்துவிட்டு, "அப்படியா? நல்லது; ஓலையைப் பையனிடமே கொடுத்து வைக்கலாம். இப்போதைக்கு அவனுடைய கட்டையும் அவிழ்த்து விடுங்கள்!'' என்றான்.

ஓலையைப் பரஞ்சோதியிடம் கொடுத்ததோடு, அவனுடைய கட்டுக்களையும் உடனே அவிழ்த்துவிட்டார்கள். பிறகு, அவனைச் சக்கரவர்த்தியின் சமூகத்திலிருந்து அழைத்துச் சென்றார்கள்.

மறுநாள் அந்தி மயங்கும் சமயத்தில் பரஞ்சோதியும் அவனுக்கு முன்னும் பின்னுமாகச் சென்ற ஒன்பது வீரர்களும் காட்டு மலைப் பாதையில் ஒரு குறுகிய கணவாயைத் தாண்டி, அப்பால் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பழைய பாழடைந்த வீட்டை அடைந்தார்கள். அந்த வீட்டின் வாசல் திண்ணையில் ஒரு முதிய கிழவன் உட்கார்ந்திருந்தான். தலையும் தாடியும் நரைத்த அக் கிழவன் உலகப் பிரக்ஞையே அற்றவனாய்க் கையிலிருந்த ஜபமாலையை உருட்டிக் கொண்டிருந்தான். பத்துக் குதிரைகள் சேர்ந்தாற்போல் வந்து அவ் வீட்டின் வாசலில் நின்றதைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை.

வந்த வீரர்களில் ஒருவன் கிழவனை என்னவோ கேட்க, அவன் இரண்டொரு வார்த்தையில் மறுமொழி கூறிவிட்டு மறுபடியும் ஜபமாலையை உருட்டலானான்.

அன்றிரவு அந்தப் பாழ் வீட்டிலேயே தங்குவதென்று அவ்வீரர்கள் முடிவு செய்தார்கள். தங்களில் நாலு பேரை நாலு ஜாமத்துக்குக் காவல் செய்யவும் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

எல்லாரையும்விட அதிகக் களைப்புற்றிருந்த பரஞ்சோதிக்குப் படுத்தவுடனே கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. தூக்கத்தில் ஆழ்வதற்கு முன்னால் அவன் மனத்தில் கடைசியாக 'வஜ்ரபாஹு இன்றிரவு சந்திப்பதாகச் சொன்னாரே? இனி எங்கே சந்திக்கப் போகிறார்?' என்ற எண்ணம் தோன்றியது.

பரஞ்சோதி அன்றைக்கும் தூக்கத்தில் கனவு கண்டான். புலிகேசியின் கூரிய கழுகுப் பார்வை ஒருகணம் அவன் நெஞ்சை ஊடுருவியது. 'இவனை யானையின் காலால் இடறச் செய்யுங்கள்!' என்று புலிகேசி கட்டளையிடுகிறான். பரஞ்சோதி தன்னை இடற வந்த யானையின் மீது வேலை எறிந்துவிட்டு ஓடுகிறான். யானை அவனை விடாமல் துரத்தி வருகிறது. கடைசியில், அது கிட்ட நெருங்கி விட்டது. யானையின் தும்பிக்கை தன் தோளில் பட்டதும், பரஞ்சோதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறான். பார்த்தால் யானையின் முகம் அந்த வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்த கிழவனின் முகமாகவும், துதிக்கை அக்கிழவனின் கையாகவும் மாறியிருக்கின்றன.

இது கனவில்லை; உண்மையாகவே அந்தக் கிழவன் தன்னைத் தொட்டு எழுப்புகிறான் என்பதைப் பரஞ்சோதி உணர்ந்ததும் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

(தொடரும்)

G. RAGHAVAN
Managing Trustee,
Res: 2364777

SHREE GAYETHRI TRUST

Plot No. 45, LAKSHMI NAGAR, CHROMEPET, CHENNAI - 600 044 - INDIA

ஸ்ரீ காயத்ரி அறக்கட்டளை சார்பாக இனிய புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ காயத்ரி அறக்கட்டளையின் பொதுமக்கள் சேவைகள்

1) 10 படுக்கைகளை கொண்ட புற்றுநோய் இறுதிநிலை பராமரிப்பு மையம் ஸ்ரீசங்கரா மருத்துவமனையின் உதவியுடன் பம்மலில் செயல்பட்டு வருகிறது. சிகிச்சை பெரும் நோயாளிகளுக்கு மருந்து, உணவு பராமரிப்பு முற்றிலும் இலவசம்.

2) இறந்த பின் இந்துக்கள் கர்மாக்கள் செய்யும் பொருட்டு 10 காரியங்கள் ஒரே சமயம் செய்ய சகல வசதியுடன் கட்டிடம் கட்டி பொதுமக்கள் உபயோகத்தில் உள்ளது.

3) சாஸ்திர முறைப்படி குளத்தில் ஸ்நானம் செய்து கர்மாக்கள் செய்ய ஒரு குளம் (TANK) வெட்டி உபயோகத்தில் உள்ளது.

4) இறந்த பின் உடலை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்ல State Bank of India மூலம் நன்கொடையாக பெற்ற இரண்டு பரமபத ரதம் (Mortuary Van) குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு கொடுத்து உதவுகிறது. (Phone - 2364444, 2212984)

5) அனாதை பிணத்தை எடுத்து வந்து மத முறைப்படி எரியூட்டல்/ புதைத்தல் செய்யப்படுகிறது.

6) இரண்டு Mortuary vanகளும் பராமரிப்பு செய்யும் நிலையில் இருப்பதாலும், கட்டிட விரிவாக்க பணி உள்ளதாலும், தொண்டு உள்ளம் கொண்ட ஸ்தாபனமும், தர்ம சிந்தனை கொண்ட பெரியோர்களும் தாராளமாக நன்கொடை கொடுத்து மேற்படி அறக்கட்டளையின் சேவைகளை தொடர்ந்து செய்ய உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு 80-G ன் பிரிவின்படி விலக்கு உண்டு.

நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி,

SHREE GAYETHRI TRUST
45, LAKSHMI NAGAR, CHROMEPET, CHENNAI- 44

G. RAGHAVAN
Managing Trustee,
Res: 2364777


கடிகாரப் பூங்கா...

ஜெர்மனியின் டுசல்டார்ஃப் நகரில், கடிகாரப் பூங்கா ஒன்று உள்ளது. ஜெர்மனியில் கோடை காலம் முடிவடைந்ததும் ஒரு மணி நேரம் குறைத்து கடிகாரத்தை மாற்றி அமைத்துக் கொள்கின்றனர். மழைகாலம் பிறந்து விட்டது எனப் பொருள்!

- பட்டு, திருச்சி

மிகப் பெரிய ஷூ

ஷூக்களில் 7 முதல் 11 அளவு வரை உள்ளவை சராசரி மனிதனுக்குப் பழக்கமானவை. '247' அளவு



எவ்வளவு நீளம் இருக்கும் என அறிந்து கொள்ள விரும்புபவர்கள் படத்தைப் பார்க்கவும். 1.65 மீட்டர் நீளம் கொண்ட இதனைச் செய்ய இரண்டு வருடம் ஆனதாம். 1998ல் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற இந்த ஷூ தற்போது, ஜெர்மன் ஷூ அருங்காட்சியகத்தில் உள்ளது. ஜெர்மனியின் பிரபல ஷூமேக்கர் ஜெயின்ஸ் ப்னேட் இதனுள் நின்று ஆசையாக போஸ் கொடுக்கிறார்" பாருங்கள்!

- ஜீரா, திருச்சி.



பிரசங்கம்!

முன்னர் தாம் செய்த பிரசங்கங்களைச் சார்ல்ஸ் லாம்பிடம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார், காலரிட்ஜ். இறுதியில், "சார்லஸ்! நான் பிரசங்கம் செய்து நீங்கள் கேட்டதில்லைதானே?" என்று வினவினார்.

சார்லஸ் லாம்ப் சொன்னார் : "உங்களிடம் நான் பிரசங்கத்தைத் தவிர வேறெதையுமே இதுவரையிலும் கேட்டதில்லையே!

- பா. குணா, சேத்துப்பட்டு.

தேன்கூடு

பிள்ளையார் பிடிக்க...

நாம் ஒரு செய

...லைச் செய்ய முற்படும் போது, அச்செயல் நல்லபடியாக நிறைவேறாவிட்டால், "பிள்ளையார் பிடிக்கப்போய் - குரங்காய் முடிந்தது" என்று சொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். அது தவறு.

ஒரு செயல் நல்லபடியாக நிறைவேற பிள்ளையாரை வழிபட்டு ஆரம்பிக்க வேண்டும். அச்செயல் நல்லமுறையில் நிறைவேறி முடியும்போது ஆஞ்சநேயரை வழிபட வேண்டும். "பிள்ளையார் பிடிக்கணும் - குரங்காய் முடிக்கணும்" என்பதுதான் சரியானது.

- இரா. சக்கரபாணி, மதுரை




காஸ்ட்லி பேனா!

உலகிலேயே விலையுயர்ந்த பேனாவின் விலை சுமார் 50 லட்ச ரூபாய். இந்தப் பேனாவின் நிப் முழுவதும் தங்கத்தால் செய்யப்பட்டது. இதன் மூடியின் மேல் வைரங்கள் இழைக்கப்பட்டுள்ளன. 1810ம் ஆண்டு கனடாவின் மாண்ட்ரியால் நகரில் இயந்திரங்கள் உதவியின்றி கரங்களாலேயே தயாரிக்கப்பட்டதாக இதன் மேல் செதுக்கப்பட்டுள்ளது. தற்போது சுவிட்ஸர்லாந்து நாட்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தப் பேனா, அந்நாட்டுக்கு உலகப் பெருந்தலைவர்கள் வருகை புரியும்போது கையெழுத்திட மட்டும் தருவது வழக்கமாக உள்ளது.

- பூபதிராவ், சிதம்பரம்.

சும்மா இருந்த சங்கை!

ஆண்டி ஒருவர் 'சங்கு' ஊதிப் பிச்சை எடுப்பதை வழக்கமாக கொண்டவர். ஒரு நாள் பிச்சை எதுவும் கிடைக்காததால் சோகமாக அமர்ந்திருந்தார். அப்போது ஆடு திருடும் திருடனொருவன் ஆண்டியைப் பார்த்து, அன்று இரவு தன்னுடைய 'தொழிலில்' உதவி செய்தால் ஆண்டிக்குப் பங்கு தருவதாக கூறி அழைத்தான். இருவரும் ஆடு திருடச் சென்றனர். ஆட்டைத் திருடும்போது ஆட்டின் குரல் வளையை அழுத்திப் பிடித்து தான் திருடுவர். (அது கத்திவிடக் கூடாதே என்பதற்காக) அக்குரல் வளையை, கிராமங்களில் 'சங்கு' என்னும் கூறுவர். அந்தப் பழக்கத்தில்.. திருடன் ஆண்டியிடம் 'சாமி சங்கைப் புடிங்க' (ஆட்டின் குரல்வளையை) என்று கூறியவுடனே ஆண்டி 'சங்கு' ஊதி பிச்சை எடுத்த பழக்கத்தில் தன் கையிலிருந்த சங்கை எடுத்து ஊதினார். சங்கின் ஒலி கேட்டு, ஆடு கத்த, ஆட்கள் வந்து இருவரையும் பிடித்து நையப்புடைத்தனர். அன்று முதல் 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி': என்ற பழமொழி உண்டானது. பெரிசு ஒருவர் சொன்னதைக் கேட்டது. - **உ. குணசீலபாண்டியன், இராஜபாளையம்.**



(பிற பத்திரிகைகளில் வெளியான சில கடிதங்கள் - சற்றே சுருக்கமாக)

கொஞ்சம் ஆக்ரோஷம்; கொஞ்சம் குறும்பு!

யோசிக்க வேண்டும்!

பாதுகாப்பில் ஓட்டை என்று கோஷமிடுவதற்கு முன் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால் இப்படிப்பட்ட அறிக்கைகளை வெளியிடுவதற்கு அவர்கள் உயிரோடு இருந்திருக்க மாட்டார்களே! பாதுகாப்புக் கோணத்தில் அவர்களைச் சோதனையிட்டால் அதை ஒரு பெரிய பிரச்னையாக்கி, அப்படிச் சோதனை செய்தவர்களுக்குத் தண்டனையும் அல்லவா கொடுக்க வேண்டும் என்று இவர்கள் செயல்படுவார்கள். செய்தியில் இடம் பெற வேண்டுமென்பதற்காக யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றாகிவிட்டது.

(தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ் - கிருஷ்ணப்ரியா, சென்னை)

சாப்பிடத் தண்டனை!

சுரங்கப் பாதைகளில் உணவுப் பண்டங்களை விற்பது தப்புதான். ஆனால் அவர்களை ஆதரிப்பது பொதுமக்கள்தானே. சட்டமீறலுக்குத் துணை போவதால் அந்த உணவுப் பண்டங்களை வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கும், தண்டனை அளிக்கப்பட வேண்டும்.

(டைம்ஸ் ஆப் இந்தியா - ஜெய்பிரகாஷ் குப்தா, ஈ-மெயிலில்)

தற்காலிக ஜனாதிபதி!

இன்னமும்கூட சட்டப்படி முழுமையாக ஜார்ஜ் புஷ் அமெரிக்க ஜனாதிபதியாகவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படியானால் இதோ ஒரு ஆலோசனை. இந்த நிலை நிச்சயமாகும்வரை உங்கள் கட்டுரைகளிலெல்லாம் அவரை அமெரிக்காவின் தற்காலிக ஜனாதிபதி என்று குறிப்பிடுங்களேன்!

(தி எகனாமிஸ்ட் - ஆன்ரு அயெரியா, லண்டன்)

பிரசார பேச்சு!

பேனசிர் புட்டோவுக்கு அரசு ராஜ வரவேற்பு அளித்திருக்கிறது. கலிபோர்னியாவில் வாழும் என் மாணவன் ஒருவன் எனக்கு அனுப்பிய தகவல் இது. 'ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகத்தில் பேனசிர் பேசியது ஏதோ இஸ்லாமாபாதில் தேர்தல் பிரசாரம் செய்வது போலவே இருந்தது. 'காஷ்மீர் விடுதலைப் போராட்ட வீரர்கள்' என்று கூட அவர் குறிப்பிட்டார். எனவே சிறுத்தை தனது புள்ளிகளை மாற்றிக் கொள்ளும் என்று நம்ப வேண்டாம்.


(தி ஹிண்டு - கே.ஈ.ஈப்பன், பெங்களூர்)



* பேனசிர் புட்டோ



* லல்லு




* ஜார்ஜ் புஷ்

ராஜா!

பீஹாரின் ராஜா என்று அழைக்கப்படும் லாலு பிரசாத் யாதவுக்கெதிராகத்தான் எத்தனை வழக்குகள்! அவ்வப்போது ஜாமீனும் கிடைக்கிறது அவருக்கு. ஒரு ராஜாவைப் போலதான் நடந்து கொள்கிறார். அவருக்கு மிகுந்த மரியாதை அளிக்கிறார்கள் அரசு அதிகாரிகள். லாலுவைப் பொருத்த வரை சிறையில் இருப்பதில் எந்த வேறுபாடும் அவருக்குத் தெரிய நியாயமில்லை!

(அலைவ் - வித்யா சாகர், டெல்லி)


அப்பாடா! ஒரே உடம்புவலி! சூடா நாலு டீ சொல்லுப்பா!
வெத்தலை பாக்கு இடிக்க யாராவது வந்தா தேவலை!


நான் அஹிம்சாவாதின்றதுக்காக சும்மா சீண்டிப் பார்கறியா...?
எத்தனை நாளைக்குத்தான் என்னை அடக்கி வைப்பே?
கற்பனை: ஜூலி

த.மா.காவிலிருந்து அ.தி.மு.கவுக்கு!

● 'பொடோ' சட்டம் யாரைப் பயமுறுத்த வேண்டுமோ அவர்களை நன்றாகவே பயமுறுத்தியிருக்கிறது. தமிழர் விடுதலைப் படை, தமிழ் மீட்சிப் படை ஆகிய இயக்கங்களில் மிச்சம் மீதியுள்ள தோழர்கள் வெளியே வந்து "தமிழர் விடுதலை இயக்கம்" என்ற அரசியல் அமைப்பைத் துவங்கியிருக்கிறார்கள். 'மக்களை ஆயுதப்படுத்தாத எந்த ஆயுதம் தாங்கிய போராட்டமும் வெற்றியடைய இயலாது என்பதை, கடந்த கால வரலாறு நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது" என்று சொல்கிறார் அமைப்பின் முன்னணித் தலைவரான சுபா. இளவரசன். ஏற்கெனவே தலைமறைவு இயக்கங்களில் இருந்த சிலர், நெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் வெளிப்படையாக இயங்க இருக்கிறோம். எங்களை போலீஸ் துன்புறுத்தக் கூடாது'' என்கிறார் இயக்கத் தோழர் ஒருவர்!

● இந்திய - நேபால் எல்லைப் பகுதியில் போதை பொருட்கள் கடத்தப்படுவது சகஜம். இந்தப் பகுதியில் சுங்க இலாகாவில் போஸ்டிங் வாங்க பலத்த போட்டி உண்டு. ஏனென்றால் நல்ல காசு பார்க்கலாம். சமீபத்தில் தமிழகத்து தி.மு.க எம்.பி ஒருவர், ஒரு வடநாட்டவருக்கு அந்தப் பகுதியில் போஸ்டிங் போடச்சொல்லி மத்திய நிதித்துறை இணை அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரனிடம் சிபாரிசு செய்திருக்கிறார். ஆனால் அமைச்சர், "நீங்கள் தமிழ்நாட்டு ஆட்கள் யாருக்காவது சிபாரிசு செய்தாலாவது முயற்சி செய்து பார்க்கலாம்; ஆனால் சம்பந்தமே இல்லாமல் வட இந்திய நபருக்குச் சிபாரிசு செய்வது சரியல்ல'' என்று கோரிக்கையை நிராகரித்து விட்டாராம்!

காதில் விழுந்தவை





● வழக்குகளில் வெற்றி, வாஸ்து நிவர்த்தி என்று, தாம் பொறுப் பேற்பதற்கு முன் சாதகமான சூழலை உருவாக்கி வரும் ஜெ, எதிர்க்கட்சிகளையும் பலவீனமாக்க திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார் என்கிறார்கள். பா.ம.கவில் பிளவு ஏற்படுத்தும் முயற்சியில், ஏற்கெனவே வெற்றியடைந்த நிலையில், ஏழு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களில் ஆறுபேரை ஜெ வளைத்துப் போட்டு விட்டார். த.மா.கா, ஆளும் கட்சிக்கு எதிர்ப்பு நிலை எடுக்கும் பட்சத்தில் அதிலும் பிளவு உண்டாக்கப்படுமாம். ஏற்கெனவே, த.மா.கா, காங்கிரஸில் இணையும் முடிவெடுத்தால், குறைந்தபட்சம் பத்து எம்.எல்.ஏக்கள், அ.தி.மு.கவுக்குத் தாவ முடிவு செய்து விட்டார்களாம். "கட்சிக்கு நிதி கொடுத்துச் சீட்டு வாங்கி லட்சக்கணக்கில் செலவு செய்து தேர்தலில் வெற்றி அடைந்த நிலையில் எதிர்க்கட்சி அரசியல் செய்தால் செலவழித்த பணத்தைச் சம்பாதிப்பது எப்படி?" என்று கேட்கிறார் பா.ம.க எம்.எல்.ஏ ஒருவர்!

● தி.மு.க ஆட்சியின்போது முக்கிய இடங்களில் பணியாற்றிய, அசோக் வரதன் ஷெட்டி, இறையன்பு, பூர்ண லிங்கம் போன்ற நிறமையான, நடுநிலை அதிகாரிகளை மீண்டும் ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தலைமைச் செயலாளர் உட்பட மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் வற்புறுத்தி வருகிறார்கள். தி.மு.க ஊழல் ஆட்சியின்போது அ.தி.மு.க உமா களைத் தோண்டியெடுத்த தி.மு.க சங்கரைக்கூட பயன்படுத்தி, தி.மு.க ஆட்சியில் நடந்ததாகக் கூறப்படும் ஊழல்களை ஆராயச் சொல்லலாம் என்கிறார்கள் இவர்கள். செவி சாய்க்குமா அரசு?

- சஞ்சயன்

அறிமுகப்படுத்துகிறோம்

எங்கள் நந்தவனம் உங்கள் தங்கவனம்

நந்தவனம் கார்டன்ஸ்



ரியல் எஸ்டேட் துறையில் குறுகிய காலக்கட்டத்தில் வாடிக்கையாளர்கள் மத்தியில் தன்னிகரில்லா பெயரை நிலை நிறுத்தியுள்ள **ABI** எஸ்டேட்ஸ் தற்பொழுது உங்கள் மனங்கவர, கண்கவர உருவாக்கியுள்ளது.

- அடையார் - மகாபலிபுரம் I.T. நெடுஞ்சாலை இடையே
- சோழிங்கநல்லூர் அடுத்து கேளம்பாக்கம் அருகே
- வளர்ந்து வரும் கம்ப்யூட்டர் நகரை அடுத்து
- தென்னை, மாமரங்கள் மற்றும் பலன்தரும் மரங்கள் சூழ
- நீச்சல் குளம் **(Swimming Pool)**
- ஒவ்வொரு பண்ணைக்கும் தனித்தனி குழாய் வசதி
- 24 மணி நேர பாதுகாவலர் சேவை
- ஒரு வருட இலவச பண்ணை பராமரிப்பு சேவை

ABI
INTEGRATED TO INTEGRITY

ABI எஸ்டேட்ஸ்

281, அண்ணா சாலை, பிரிசிஷன் பிளாசா,2வது மாடி, தேனாம்பேட்டை,(அண்ணா அறிவாலயம் அருகில்)
சென்னை 600 018. போன்: 4329690/91, 4313271,
Tel/ Fax: 4321941 மொபைல்: 98410-90008
email: ablestates@now-india.com

சென்னை சுற்றி உங்கள் பண்ணையை பார்வையிட தினசரி இலவச வாகன வசதி

சுப யாத்ரா

SHUBH - YATRA

G-8, Elcanso Complex, No. 10, Casa Major Road,
Egmore, Chennai - 600 008,
Phone : 8268372, 6600308, Cell : 9840064243
E-mail : leotravels2000@yahoo.com

எமது 2002 ற்கான யாத்திரைகள்

அஷ்டகணபதி யாத்திரை

அஷ்டகணபதி - ஷிரிடி - சனிசிங்கனாப்பூர் நாசிக் த்ரயாம்பகேஷ்வர்

புறப்படும் நாள் : **08-03-2002 (9 நாட்கள்)**
கட்டணம் : ரூ. 3,500/- மட்டும்

முக்திநாத் யாத்திரை

அலஹாபாத் - நேமிசரண்யம் - அயோத்யா முக்திநாத் - காட்மண்டு - காசி - கயா

புறப்படும் நாள் : **15-04-2002 (12 நாட்கள்)**
கட்டணம் : ரூ. 6,850/- மட்டும்
+ ரூ. 13,000/- தனி (ஹெலிகாப்டர்)

காசி யாத்திரை

அலஹாபாத் - நேமிசரண்யம் - அயோத்யா காசி - கயா

புறப்படும் நாள் : **22-04-2002 (8 நாட்கள்)**
கட்டணம் : ரூ. 3,900/- மட்டும்

பத்திநாத் - கேதார்நாத் யாத்திரை

ஆக்ரா - மதுரா - பிருந்தாவன் ஹரித்துவார் ரிஷிகேஷ் கேதார்நாத் பத்ரிநாத் - டெல்லி

புறப்படும் நாள் : **04-05-2002 (12 நாட்கள்)**
கட்டணம் : ரூ. 4,900/- மட்டும்

கோடை விஷேச சுற்றுலா

ஜெய்ப்பூர் - ஆக்ரா - மதுரா - குலு - மணலி சண்டிகர் - டெல்லி

புறப்படும் நாள் : **16-05-2002 (12 நாட்கள்)**
கட்டணம் : ரூ. 5700/- மட்டும்

கைலாஷ் - மானசரோவர் யாத்திரை

புறப்படும் நாள் : **02-06-2002 (18 நாட்கள்)**
கட்டணம் : ரூ. 89,000 மட்டும்

யாத்திரைக்கு செல்ல விரும்புவோர் விவரங்களை நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்

மேற் கட்டணத்தில் 2-ம் வகுப்பு இரயில் கட்டணம், 2 x 2 சூப்பர் டீலக்ஸ், தூய காற்றோட்ட வசதியுள்ள தங்கும் அறைகள், சைவ உணவு ஆகியவை அடங்கும்

Mrs. ஜெயலக்ஷ்மி - 6473878, Mrs. வசந்த குமாரி - 4812817,
Mr. ஜெகபதி - (04114) 30031, Dr. போஸ் - (04324) 381830,
Mrs. லோகிகா - 4352244, Mrs. மீரா ராஜன் - 2494225, Mr. & Mrs. பெருமாள் - 4755228, Mr. & Mrs. வீரராகவன் - 4787658, Mr. & Mrs. சுந்தரம் - 4843600

அழகு, மிகுந்த சிந்தனைவயப் பட்டிருந்தான். கிருஷ்ண வேணிக்கும், சரவணனுக்கு மிடையே ஒருவித ஈர்ப்பு இருந்ததை அவனது உணர்வு மோப்பம் பிடித்து சில காலமாகிறது. அன்று ஒருநாள் திருடன், வீட்டுக்கு வந்தபோதே அந்த நேரம் சரவ ணன் ஏன் அங்கு வரவேண்டும்? என்ற கேள்வி எழுந்து ஒருவாறு யூகித்தான் அழகு. அதன்பின் சில சந்தர்ப்பங்கள், மூவரும் ஏதாவது ஓரிடத்தில் தற்செயலாக சந்தித்துக் கொண்டால் சரவணன் அழகுவுடன் பேசு கையில் கண்கள் அடிக்கடி கிருஷ்ண வேணியை சந்தித்து மீள்கின்றன. கிருஷ்ண வேணியோ வீட்டுக்கு வந்து விட்ட பின்பும் கூட எதற்காகவோ தனக்குள் புன்னகைக் கிறாள். சரவணனும் சரி, கிருஷ்ணவேணியும் சரி அவ்வளவு தூரம் திறமைசாலிகளில்லை என்பதை அழகு புரிந்து கொண்டான். தங் களது மன ஓட்டங்களை மறைக்கிற சாமர்த்தியம் இருவருக்குமில்லை.

முந்தாநாள் மாலை பல நாள் சந்தேகம் உறுதிப்பட்டு விட்டது. இலேசாக இருள் பரவிக் கொண்டிருந்த நேரம். அம்மா வீட்டி லில்லை. கிருஷ்ணவேணி கோயிலுக்குத் தனியாகப் போயிருந்தாள். போரடிக்கிற தென்று அழகு கால்போனபடி சுற்றிவிட்டு வருகையில் யதேச்சையாக அதனைப் பார்த்து விட்டான். சைக்கிளில் வந்த சரவ ணன், கிருஷ்ணவேணியை சைக்கிளின் பின் புறம் ஏறச் சொல்லி வற்புறுத்த, அவள்



பூவரசம்

மாட்டேனென்று தலையசைக்க... ஒரு கட் டத்தில் அவன் கிருஷ்ணவேணியின் கையைப் பிடித்து இழுக்க, அவள் செல்ல மாகக் கையை உதறி, சுற்றுமுற்றும் பார்த்து விட்டு அவனது முதுகில் அடித்தாள். சரவ ணன் சந்தோஷமாகச் சிரித்தான். அழகுவுக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது. என்னதான் இருந்தாலும் இவன் இப்படிப் பண்ணலாமா? என்று சரவணனின் மீது கோபம் வந்தது. தலைக்கேறிய கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அங்கிருந்து கிளம்பிப்போய் பாலத் தில் தனியாக அமர்ந்தான். தங்கை மீதான கோபத்தை மீறிக் கொண்டு சட்டென்று அவனுக்குத் தன்மீது ஒரு கழிவிரக்கம் தோன்றியது. அவனுக்குக் கிட்டாத... கிட்டும் வாய்ப்பு தென்படாத ஒரு விஷயம்... காதல்.... எத்தனை பெண்கள் ஊரில்... எல்லா வயது களிலும்... இளம் பெண்களை இவன் பார்த்த துண்டு. இவனைப் பார்க்கும் எந்த ஒருத்தி யும் 'சட்'டென்று முகத்தில் ஒரு வினோத உணர்வு பீறிட இவனை நேருக்கு நேர் பார்ப்பாள். ஒரு ஆணை பெண் பார்க்கிற பார்வை அல்ல அது. ஹை! இதென்ன பிறவி! என்கிற பார்வை. அழகுவின் பார்வை அவளது பார்வையைச் சந்திக்கிற

23



வீடு

நொடியில் சங்கடம் தோன்றுமோ என்னவோ? பார்வையை விலக்கி வேறு புறம் பார்ப்பான். பிறகு அவளுக்குள்ளாக ஒரு புன்னகை... அழகுவை ரணப்படுத்துகிற புன்னகை. எத்தனை காயங்கள்!

சரவணனும், கிருஷ்ணவேணியும் சற்று நேரம் மறந்துபோய், அழகு தனக்குள் குமுறி அழுதான்... ஒரு கட்டத்தில் அழுகை வடிந்து போய் இயல்பான பின்பு யோசிக்கத் துவங்கினான். அவனுக்குத் தனது அம்மா குறித்து மிகுந்த பயம் தோன்றியது. இந்த விஷயத்தை என்ன செய்வது? அம்மாவிடம் சொன்னால் கிருஷ்ணவேணியைக் கொன்றே விடுவாள். அதுமட்டுமில்லாமல் அவளது கூச்சலில் ஊரே கூடிப் போகும். பெரிய அசிங்கமாகி விடும்.

சரவணனிடம் பேசலாமா? அவன் தனக்கு ஒரு நல்ல நண்பனாகத்தானிருக்கிறான்... பேசிப் பார்த்தால் ஒத்துக் கொள்வானா? ஒதுங்கிப் போய்விடுவானா... ஒரு வேளை மறுத்தால்... பேசாமல் தங்கை கிருஷ்ணவேணியிடம் பேசி விடலாம்... சரவணனை விட, அவளுக்குத்தான் நமது குடும்ப நிலைமை தெரியும். அம்மாவைப் பற்றித் தெரியும்... தங்கையிடம் பேசிவிட முடிவு செய்தான் அழகு...

"இப்படிச் செய்றது சரியா வேணி?" என்ற அழகுவைப் பார்த்தாள் கிருஷ்ணவேணி. வயிற்றுக்குள் அலையடித்தது... 'தெரிஞ்சு போச்சு... ஐயையோ...' என்று பதறியது. உதடுகள் அனுமதியின்றித் துடிக்க ஆரம்பித்தன.

"எதுண்ணே?" என்றாள். தொண்டை காய்ந்து குரல் வேறு மாதிரி கேட்டது.

"எல்லாம் தெரியும். தெரியாத மாதிரி கேக்காத.. எத்தனை நாளா லவ் பண்றிங்க நீயும், அவனும்."

கண்களில் 'குபுக்'கென்று நீர் வந்து விட்டது. "மூணு...நாலு மாசமிருக்கும்" என்றாள் தயங்கியபடியே...

அவளது கண்ணில் நீரையும், பயத்தையும் பார்க்கையில் அழகுவுக்குச் சங்கடமாயிருந்தது. தனது குரலில் கோபம் வெளிப்படாமல் அடக்கிக் கொண்டு முடிந்தவரை மென்மையாகப் பேச ஆரம்பித்தான்.

"ஏம்மா... நம்ம அம்மா பத்தி உனக்குத் தெரியாதா... நாம இருக்கற இருப்பு தெரியாதா? இதெல்லாம் நமக்குத் தேவையா?"

"..............."

"அட...பேசு... அமைதியா இருந்து பிரயோஜனமில்ல.... வாயைத் திறந்து சொல்லு...

பாஸ்கர் சக்தி

எங்கிட்ட பேசுறதுக்கு இவ்வளவு சங்கடப் படுகிற நீ, எப்படி லவ் பண்ணே?"

'அதுவேற... இதுவேற' என்று கிருஷ்ண வேணியின் மனசுக்குள் தோன்றியது.

"சொல்லு வேணி.... எங்கிட்ட பேசினா பரவாயில்லை, இல்லாட்டி அம்மாட்ட போய்ச் சொல்ல வேண்டியது வரும்."

இந்த விஷயம் 'சட்'டென்று கிருஷ்ண வேணிக்குள் வேலை செய்தது. அவள் உடனடியாகப் பேச ஆரம்பித்தாள்.

"அவரு என்னைக் கல்யாணம் பண்ணிக் கிறேங்கறாரு."

"அவன் அப்படித்தான் சொல்வான். ஆனா.. அது சரியா வருமா?.. அவன் ஓரளவு வசதியான வீட்டுல ஒரே பையன். நம்ம நிலைமை உனக்கே தெரியும். மூணு, வயசுப் பொண்ணுக, தாலியறுத்த அம்மா... ஆம்பளையில்லாத வீடு..."

"நீ இருக்கேல்ல அண்ணே.."

"நான் என்ன கணக்கு! வாடா முழுக் குச்சி' அப்படின்னு அன்னிக்கு ஒரு ஆளு என்னைப் பாத்து சிரிச்சுக்கிட்டே சொல்றான். அவ்வளதானம்மா எனக்கு இந்த உலகத்துல மரியாதை" அழகுவின் குரல் மாறியது. கண் கலங்கியது.

கிருஷ்ணவேணிக்கும் மனசு கஷ்டப்பட்டது. அண்ணனின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"ஃபீல் பண்ணாதண்ணே... உயரத்தைத் தவிர உனக்கு வேற என்ன குறை!" என்றாள்.

"பச்" என்றான் அழகு விரக்தியுடன்.

"அதை விடு.. என் தலையெழுத்து; உன் விஷயத்தைப் பேசு... நம்ம அம்மா இதை எப்படி எடுத்துக்கிடுவாங்க.. உனக்குத் தெரியாதா அவங்களைப் பத்தி.."

"தெரியும்ணே.."

"தெரிஞ்சும் இப்படிப் பண்ணலாமா? உனக்கும் மூத்தவ ஒருத்தி இருக்கா.. உனக்கு அப்புறம் ஒருத்தி இருக்கா. நீ இப்படிப் பண்ணா அவங்க நிலைமை என்னாகும்?"

"நாங்க ஒண்ணும் தப்புப் பண்ணலைண்ணே."

"ப்ச்; தனியா என்ன தப்பு? லவ் பண்றதே தப்புதான்."

"அண்ணே... நாங்க லவ் பண்றோம்... ஆனா அவருக்கு வேலை கிடைக்கணும். அம்சவேணியக்கா கல்யாணம் முடியணும். அப்புறம்தான் நாம கல்யாணம் பண்ணிக்க முடியும்னு நாங்க ரெண்டு பேரும் பேசி வச்சிருக்கோம்."

"ம்.. அவ்வளவு தூரம் வந்துட்டிங்களா?"

"முறைப்படி எல்லார் சம்மதத்தோடதான் கல்யாணம் பண்ணிக்கிரணுமுனு முடிவு பண்ணிருக்கோம்."

"நீங்க ரெண்டுபேரும் என்னா இதை முடிவு பண்றது?"

'நாங்கதான அண்ணே கல்யாணம் பண்ணிக்கப்போறோம்? அவரு ரொம்ப நல்லவருண்ணே."

"இதுக்கெல்லாம் யாரும் ஒத்துக்க மாட்டாங்க கிருஷ்ணவேணி!"

கிருஷ்ணவேணி அமைதியாக இருந்தாள். கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.

"எதுக்கு அழுகுற! அழுதா பிரச்னை தீந்துடுமா?" கண்களைத் துடைத்துக் கொண்ட கிருஷ்ணவேணி அழகுவின் கைகளைப் பற்றினாள்.

"அண்ணே... உங்கிட்ட ஒரே ஒரு உதவி கேக்கறேன். மாட்டேன்னு சொல்லிடாத."

அழகு தங்கையைப் பார்த்தான். இயல்பாகவே குடும்பத்தில் மிகவும் பிரியமானவன். தங்கையின் முகமும், அவளது கண்ணீரும், கெஞ்சுகிற குரலும் அவனை நெகிழ்ச்சியடைய வைத்தன.

"என்ன வேணி? சொல்லு."

"எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு.. அவருக்கும்தான். ஆனா இப்போதைக்கு இந்த விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம்."

"அப்புறம்?!"

"முதல்ல அம்சவேணிக்கு மாப்பிள்ளை பாத்து அவ காரியம் முடியட்டும். அதுக்கப்புறம் பக்குவமா அம்மாகிட்ட நான் சொல்றேன். தயவு செஞ்சு இந்த விஷயத்தை நீ

"டாக்டர், ஆபரேஷன் தியேட்டர்ல இருந்த பேஷண்டைக் காணோம்."

"அவருக்கு எப்போதும் அவசரம்தான். போய் மார்ச்சுவரியில தேடிப் பாருங்க!"

— ஆரூர் சரோ



மறந்துடு."

"நீங்க பண்றதுக்கு என்னையும் உடந்தையா இருக்கச் சொல்றியா?"

"இப்ப அம்மாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா, அதனால நல்லது ஒண்ணும் நடக்கப் போறதில்லை. சண்டைதான் வரும். நிம்மதி போயிடும். அக்கா கல்யாணம் முடியட்டும்... இதை உடனே அம்மாகிட்ட சொல்லி நீ என்ன சாதிக்கப் போற?"

"அம்மாகிட்ட சொன்னா உங்க 'லவ்' தொடர முடியாதபடிக்கு அவ ரணகளம் பண்ணிடுவா இல்லையா?"

"ஆமாண்ணே."

"நீ சொல்றமாதிரி நான் பண்றேன். இதை அம்மாகிட்ட நான் சொல்லலை... ஆனா நீங்க நான் சொல்றபடி கேக்கணும்."

"என்ன செய்யணும்?"

"இது ரொம்ப சின்ன ஊர்... நீங்க தொடர்ந்து இப்படி ரோடு, கோயில்னு லவ் பண்ணிக்கிட்டுத் திரிஞ்சா அது ஈஸியா வெளில தெரிஞ்சுடும். அதுனால நீங்க ரெண்டு பேரும் பேசுறதையும், பழகுறதையும் லிமிட்டுல வைங்க."

"அம்மா 'கட்' பண்ணுவான்னு சொன்ன... இப்ப நீயே ஆப்' பண்ணச் சொல்ற... இல்லையா?"

"அப்படிச் சொல்லலை.. அளவா இருங்க... கொஞ்சம் விலகி நின்னே பேசுங்க.. அது உனக்கே கூட ரொம்ப நல்லது. புரியுதா?"

"சரி."

"அடிக்கடிச் சந்திச்சுப் பேசுற வேலையெல்லாம் வேணாம்..."

'சரி' என்று தலையாட்டினாள் கிருஷ்ணவேணி! அவளது மனம் தற்காலிகமாக நிம்மதியடைந்திருந்தது.

"சரி போய் மூஞ்சியைத் துடைச்சுக்க.. சரவணங்கிட்டயும் சொல்லிடு... இந்த ரோட்ல வச்சு கையைப் புடிக்கிற வேலையெல்லாம் வேணாம்னு."

"ஆகட்டும்ணே" என்றாள் மனசில் சங்கடமும், வெட்கமும் ஒரு சேரத் தோன்றின.

வீரையன் சைக்கிளை 'ஸ்டாண்டு' போட்டு நிறுத்தி பின் ஸீட்டில் அமர்ந்து டீ குடித்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான். அடி குழாயிலிருந்து வேணி சகோதரிகள் தண்ணீர் எடுத்துப் போய்க் கொண்டிருந்தனர். கிருஷ்ணவேணி அடித்து நிரப்ப மற்ற



"உங்க பெயரில் லெட்டர் வந்தால் இந்த வீட்டில் கொடுக்கணுமா, இல்ல, ரெண்டு தெரு தள்ளி இருக்கும் உங்க சின்ன வீட்டில் கொடுக்கணுமா?"

இருவரும் குடங்களைச் சுமந்து, போய் வந்த வண்ணமிருந்தனர். அரைமணி நேரமாக இந்தக் காரியம் நடக்கிறது. இருபது நிமிஷம் அரசமரத்தடித் திண்ணையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இப்போது 'டீக்' கடைக்கு வந்து டீ குடித்தபடி பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தான் வீரையன். தண்ணீர் சுமந்து ஈரமாகியிருந்த உடைகளுடன் பெரியவளும், கடைசிப் பெண்ணும் போய் வருவதை ரசித்துக் கொண்டிருந்தான். வீரையனைப் பொறுத்தவரை அவன் வரைமுறைகளை, தாரதம்மியங்களை மனதளவில் கடந்து வெகு காலமாகி விட்டது. ஆரம்பத்தில் லீலாவிடம் பேசிப் பார்த்து அவள் கடுமையானவள் என்று உணர்ந்ததும் ஒதுங்கி விட்டான். மூன்று சகோதரிகளில் கிருஷ்ணவேணி இவனை சட்டை பண்ணவே இல்லை. அம்சவேணி? அவளும் கூட யாரையுமே பார்க்காதவள் போலத்தான் பூச்சி காட்டினாள். ஆனால் வீரையனின் அனுபவம் அவளது வயதையும், நிலையையும் வைத்து ஒரு கணக்குப் போட்டது. அது தவறவில்லை....

ஒரு சில நேர்ப்பார்வைகள், சிரிப்பு, காத்திருத்தல் என வீரையனின் சமிக்ஞைகள் எளிதாயிருந்தன. அவளுக்கும் அவை உடனே புரிந்தன. ஆனால் பயம். அதுதான் மிக அதிகமாக அவளை ஒரு போர்வை போல் மூடியிருந்தது. அதனை விலக்கத்தான் வீரையன் தனது ஜாலங்களனைத்தையும் காட்ட வேண்டியிருந்தது. ஆனாலும் அத்தனை எளிதில் அவள் பயம் போய்விட

வில்லை. ஒரு நாள் கோயிலில் தனியே மடக்கி, எட்டநின்று ஒரு சத்தியம். இன்னொரு நாள் ஒரு தற்கொலை மிரட்டல், என்று அறிவுக்குப் புறம்பான சில காரியங்களை அவன் வேண்டுமென்றே நிகழ்த்தினான். அதன்பின் அவளது பார்வையில் ஒரு மாற்றம். அதனை எளிதில் படித்ததும் அவளிடம் நெருங்கிப் பேசி தயக்கங்களை நீக்கினான். தைரியம் கொடுத்தான். அவளுக்கும் பயம் விலக்க, தைரியம் ஊட்ட, தன்னை விரும்ப ஒரு ஆள் தேவைப்பட்டுக் கொண்டுதானிருந்தான். எனவே அவன் அவளை மகிழ்வுடன் வரவேற்றாள். மெதுவாக பயம் விலகியது. இப்போது ஆர்வம். இத்தனை நாள் கனவுகளிலும், ரேடியோப் பாடல்களிலும் தான் கண்டது தற்போது தனது வாழ்விலும்...! அவளது ஆர்வம் பீறிட்டது. சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டன. சர்வ ஜாக்கிரதையாக, வீரையனின் கிரிமினல் புத்தி ஐடியாக்களை உருவாக்கிக் கொடுத்தது.

சந்திப்புகள் நிகழ்ந்தன. அவளை நெருங்குவதில்தான் சிரமமிருந்ததே தவிர நெருங்கியவுடன் வெல்வதில் வீரையனுக்கு ஒரு சிரமமுமில்லை. அவள் வெகு எளிதில் வீழ்ந்து விட்டாள்.

போதுமான தண்ணீர் சேர்ந்து விட்டது போலும். அம்சவேணி கண்ணாலேயே 'இந்த குடத்துக்குப் பின் வரமாட்டேன்' என்று உணர்த்திவிட்டுப் போனாள்.

வீரையன் சிகரெட்டை அணைத்தான். சரவணனும் சகாக்களும் வருவது தெரிந்தது.

"என்னண்ணே இங்க நிக்கிறீங்க?! நாங்க உங்க கடையில போய் பாத்துட்டு வர்றோம்."

"நான் நீங்க இங்கிட்டு இருப்பீங்கன்னு இங்க வந்து தேடினேன்" என்றான் வீரையன்.

"கிரவுண்டுக்குப் போலாம்" என்றான் மணி. எல்லோரும் கிரவுண்டுக்கு வந்தார்கள்.

"என்னடா சரவணா.. உன் ஆளு அவ சகோதரிகளோட வந்து இவ்வளவு நேரம் அடி பம்ப்புல தண்ணியடிச்சுக்கிட்டிருந்தா... மிஸ் பண்ணிட்டியே" என்றான் வீரையன்.

"அப்படியா; அடடே..." என்றான் சுந்தர்.

"நீயென்ன அடடே? அது அவன் ஆளுடா." இது மணி.

"சின்னப் பொண்ணு இருக்கில்ல அதைப் பாக்கலாமில்ல" என்று இழுத்தான் சுந்தர்.

சரவணன் தன் நண்பர்களுடன் தனது காதல் விவகாரத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தான். அவர்களும் வேறு வழியின்றி அதனை வரவேற்று விட்டு, எஞ்சிய இருவரில் அம்சவேணி சீனியர் என்பதால் அவளை விட்டுவிட்டு, சின்னவளைப் பற்றிப் பேசி பசியாறிக் கொண்டிருந்தனர்.

சரவணன் ஏனோ சுரத்தின்றி இருந்தான்.

"என்னா சரவணா 'டல்'லா இருக்கே?" என்றான் வீரையன்.

"ஒண்ணுமில்லண்ணே.. இனிமே நாம முன்ன மாதிரி ஜாஸ்தி பாத்துக்கவோ, பேசிக்கிரவோ வேணாம்னுட்டா."

"ஏன்டா?"

"அழகுவுக்கு மேட்டர் தெரிஞ்சு போச்சாம்."

(தொடரும்)

கிஷ்கிந்தாவில் லேசர் மேஜிக்!

அறுபது வயது பெரிசுகளைக் கூட எழுந்து நின்று ஆட்டம் போட வைக்கிறது கிஷ்கிந்தாவின் லேசர் மேஜிக்ஷோ! லேசர் கதிர்களின் வண்ணங்கள் அரங்கில் அமர்ந்திருக்கும் நம்முள் ஊடுருவி கிளுகிளுப்பூட்டுகின்றன. ஜெர்மன் தொழில் நுட்பத்துடன் வந்திருக்கும் இந்த மேஜிக்



• விழாவில்
'கிஷ்கிந்தா' அதிபர் அப்பச்சனுடன் யேசுதாஸ்

காட்சிக்கான செலவு லட்சக்கணக்கிலாம். தினமும் நான்கு மணி முதல் ஆறுமணி வரை இலவசமாக இந்தத் துள்ளலை அனுபவிக்கலாம் கிஷ்கிந்தாவில். பாடகர் கே.ஜே. யேசுதாஸ் திறந்து வைத்து டான்ஸ் 'போடுவார்' என்றார்கள். ஆவலுடன் எதிர்பார்த்தால்... ப்ச்... திறப்போடு முடித்துக் கொண்டு பாடலுக்கான சி.டி.யைத்தான் போட்டார்!

— அப்பு

ரிமோட்

ஸ்டாலினுக்கு ஒரு சந்தோஷம்

மேயர் ஸ்டாலினுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய காட்சியொன்றை விஜய் செய்தியில் காட்டினார்கள்.

கடும் மழை. கொட்டும் வெள்ளம். சாலைகளெல்லாம் ஆறாக மாறிவிட்டன. முழங்காலளவுத் தண்ணீரில் துழாவித் துழாவி நடக்கிறார்கள் மக்கள். ஒரு முதியவர், சாலையில் பள்ளம் இருப்பது தெரியாமல் காலை வைத்து இடறி விழுந்து சமாளித்து எழுந்து நடையைத் தொடர்கிறார். ஒரு கார் நடுச் சாலையில் சாய்ந்து நிற்கிறது. ஒரு வேன் தண்ணீருக்குக் கீழே பாதியும் மேலே பாதியுமாக அனாதையாய்க் கிடக்கிறது.

இந்தக் காட்சி எப்படி ஸ்டாலினுக்கு மகிழ்ச்சி தரும் என்று கேட்கலாம். இது சென்னை நகரில் அல்ல, பாரிஸில். 'ஆனானப்பட்ட பாரிஸ் மாநகரே இப்படி இருக்கையில், சிங்காரச் சென்னை பற்றி என்னைக் குற்றம் சொல்கிறார்களே!' என்று ஸ்டாலினுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு, புதிய உத்வேகத்தைக் கொடுத்திருக்குமா இல்லையா? Stick to the fight when you are hardest hit என்ற தீர்மானத்துக்கு வந்திருப்பாரா இல்லையா?



• கஜோல்

சோதனைகளுக்கு ஆளாகின்ற நபர்களைத் தினம் தினம் டீ.வி.யில் பார்த்து அலுத்துவிட்டது. எனவே பரிசோதனைகள் செய்யும் ஆராய்ச்சியாளர் இருவருக்கு யூகி சேது தனது தர்பாரில் இடம் கொடுத்த போது அம்மாடி என்றிருந்தது. No man ever yet became great by imitation என்றார் சாமுவேல் ஜான்ஸன். இருவரும் அந்த ரகம்.

ஒருவர், வீணை காயத்ரி. மனித உடம்புக்கும் மனிதன் இசைக்கும் வீணைக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்திருக்கிறார். மனித உடம்பு தெய்வ வீணை, இசைக்கும் வீணை மானுஷ வீணை என்றும் வேதத்தில் குறிப்பிட்டிருப்பதாக விளக்கினார்.

பிறகு, கட்சியோ, தனி நபரோ, ஸ்தாபனமோ எதுவானாலும், அதன் பெயரில் உள்ள ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு அதன் தலையெழுத்தைக் கூற முடியும் என்ற ஒரு புதிய சோதிடத்தை விளக்கினார். (ஒரு புத்தகத்தில் படித்ததாம்.) உதாரணமாக, World Trade Centre என்ற பெயரில் உள்ள எழுத்துக்களை மாற்றி மாற்றி அமைத்தால், War Crowd Ran முதலிய பல சொற்கள் கிடைக்கின்றன என்றார். அவர் சொல்லி முடிக்கு முன் பேப்பர் பென்஀லில் எடுத்து வைத்துக்கொண்டு

வேறு பல பெயர்களைக் குறித்து ஆராய வேண்டும் போலிருந்தது.

மற்றொரு பரிசோதனையாளர் அபஸ்வரம் ராம்ஜி. சிறுவர் சிறுமியருக்குப் பயிற்சியளிக்கும் 'பாலப் பிரம்மம்' என்ற இசையமைப்பைத் தொடங்கியிருக்கிறார் இவர். கர்னாடக ராகம், அதையொட்டினாற்போல் இந்துஸ்தானி ராகம், அதையொட்டினாற்போல் வெஸ்டர்ன் மியூசிக், அதையொட்டினாற் போல ஒரு வெஸ்டர்ன் மியூசிக் - என்னென்ன உற்பத்தி பண்ண முடியும் என்று ராம்ஜியின் கற்பனை சென்றிருக்கிறது. நாலு வகைகளுக்கும் நாலு குரு இருக்கிறார்களாம்.

நல்ல குரல் வளம் கொண்ட குழந்தைகள். தர்மவதி ராகத்தில் ஆரம்பித்து, மதுவந்திக்குக் கொண்டு போய், லாராலாரல்லாவாகச் செய்து, 'ஒட்டகத்தைக் கட்டிக் கோவில் குதூகலமாக, உற்சாகமாக முடித்தார்கள். நன்றிஜி, ராம்ஜி.

'திரையிடப்பட்ட முதல் வாரத்திலேயே வசூலை அள்ளிக் குவித்து எல்லா ரெகார்டுகளையும் முறியடித்து விட்டதாமே?' என்று கேட்டார் ஸ்டார் நியூஸ் பேட்டியாளர்.


'ஆமாம்' என்றார் பெருமை பொங்க, 'கபி குஷி கபி காம்' படத்தின் டைரக்டர் கரன் ஜோஹர்.

'பெண்களுக்குப் பிடித்த கதையம்சம் இதில் இருக்கிறது. பெண்களுக்குப் பிடித்துவிட்டால் குடும்பம் மொத்தத்துக்கும் பிடித்த மாதிரிதானே?' என்று வெற்றிக்குக் காரணமும் சொன்னார்.

ஆனால் துண்டுக் காட்சிகளைப் பார்த்தபோது, ஷாருக்கும் கஜோலும் அடிக்கிற அமர்க்களங்கள்தான் உண்மையான காரணம் என்று புலப்பட்டது. This is a season of love and laughter, of light and life.

வைகுண்ட ஏகாதசி தினத்தன்று ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் சொர்க்க வாசல் திறக்கப்படும் காட்சியை விடிகாலை மூன்றரை மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்தது ராஜ் டி.வி. உற்சவமூர்த்தி எழுந்தருளுவதையும் பக்தர்கள் சொர்க்க வாசல் வழியே வெளிவருவதையும் அழகாகக் காட்டினார்கள். எனினும், பெருமாள் அந்தச் சுற்றுக்குச் செல்கிறார். இந்த வாசலுக்கு வருகிறார், இன்ன மண்டபத்துக்கு இன்ன பெருமை என்றெல்லாம் வர்ணனையாளர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர, அந்தக் குறிப்பிட்ட இடங்களுக்குக் கேமரா போகவேயில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் படமெடுப்பது கஷ்டம்தான். முன்னதாகவே எடுத்து வைத்திருந்து இணைத்திருக்கலாம்.

Having failed to do their homework properly, கடைசியில் கால் மணி நேரத்துக்கு மேலாக, காட்டிய விளம்பரங்களையே திரும்பத் திரும்பக் காட்டி., மெகா சீரியல்களின் முன்னறிவிப்புக்களை ஒளிபரப்பி போரடிக்க, அப்படியும் நேரம் மிச்சமிருக்கவே திருப்பதி பெருமாளைப் பக்தர்கள் தரிசிப்பதுபோல ஒரு செட் போட்டுச் சரி செய்தார்கள். (பொதுவாகத் திருமலையில் படப்பிடிப்பு நடத்த அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் இப்படிச் செய்தார்கள் போலிருக்கிறது.) எதுவாயினும் வெகு அருமையாகத் தாண்டிவிட்டார்கள் பாதிக் கிணற்றை.



• ஷாருக்



• மு.க.ஸ்டாலின்

மயிலாப்பூர் சாம்பு மாமாவின் மனக்குறை இது.

நானும் முப்பது வருஷமாய்ப் பல வித்வான்களின் கச்சேரியை சபாவிலும் நேரடியிலும், டி.வி.யிலும் கேட்டு வருகிறேன். வாதாபி கீர்த்தனையில், 'திம்பஜே திம்பஜே' என்று கேட்டுக் கேட்டு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. ஒரு வித்வானாவது 'கணப-திம்பதே' என்று கொலை செய்யாமல் 'கணபதிம்-பஜே' என்று அர்த்தத்துடன் பாடக் கூடாதா?'

சான்ஸே இல்லை, சாம்பு மாமா! அப்படிப் பாடினால் தாளம் கீளம் தப்புமோ என்னவோ. அத்துடன் இத்தனை வருட வழக்கத்தை மாற்றிக் கொள்வது பாடகர்களுக்குக் கஷ்டம். Man feels repentance on Sunday for what he did on Saturday and is going to do on Monday.

வினோத்

"இந்த விளம்பரங்களுக்கும், அதற்கான தயாரிப்பு மற்றும் மீடியா செலவுக்கும் என் ஒப்புதல் கையெழுத்தைத் தர முடியாது. நான் சொன்ன மாற்றங்களைச் செய்து கொண்டு வாருங்கள். அல்லது முற்றிலும் புதிய விளம்பரக் கதைக் கருக்களோடு வாருங்கள். காலம் தாழ்ந்தாலும் பரவாயில்லை. அதுவரை பழைய விளம்பரங்களை வைத்துக் சமாளித்துக் கொள்ளலாம். அவற்றுக்கான 'பார்வையாளர் மறதி' குறைவு என்று இந்த நீல்ஸன் விவரம் சொல்கிறது; எனவே, மீடியா அட்டவணையைக் குறுக்கி, செலவைக் குறையுங்கள். புதிய விளம்பரங்களோடு மீண்டும் சந்திப்போம். நன்றி" ரஞ்சி அழுத்தமாகக் கூறி விட்டு மேசையை விட்டு எழுந்தாள்.



இக்கரையில்

காஞ்சனா தாமோதரன்

விளம்பர நிறுவனக் குழுவின் அதிர்ச்சி நன்றாகவே தெரிந்தது. ஏற்கெனவே மார்க்கெட்டிங் வைஸ்-பிரெசிடெண்ட் ஏரன் ஒப்புக்கொண்ட விளம்பரங்கள்தாம். சீனியர் வைஸ்-பிரெசிடெண்ட் ரஞ்சியிடம் விளம்பரங்களின் கம்ப்யூட்டர் வடிவத்தைக் காட்டி, ஒப்புதல் பெற வேண்டும். இரண்டு மில்லியன் டாலர் தயாரிப்புச் செலவு, இருபது மில்லியன் டாலர் மீடியா செலவு ஆகியவற்றிற்கான பத்திரங்களில் கையெழுத்து வாங்க வேண்டும். வெறும் சம்பிரதாயம் என்றுதான் அவர்கள் நினைத்திருந்தார்கள்.

இப்படி ஒட்டுமொத்தமாகப் புறந்தள்ளுவாள் என்று எதிர் பார்க்கவில்லை. அவள் படைப்பாளியாக இருந்தால்தானே படைப்பின் சிரமமும் அதன் மேலுள்ள தீவிரக் காதலும் புரியும். விளம்பரப் படைப்பாளிக் குழு தன் எரிச்சலை மறைக்கக்கூட முயலவில்லை; முணுமுணுத்துக் கொண்டே எழுந்து வெளியேறியது.

ஏரனும் விளம்பர நிறுவனப் பங்குதாரர் ஸாலியும் மட்டும் நின்றார்கள். ஸாலியின் முகத்திலும் வழக்கமான மலர்ச்சி இல்லை. "என்ன ரஞ்சி இது?" என்ற ஏரனின் வருத்தம் அவளுக்குப் புரிந்தது.

"ஏரன், நீ ஒப்புக்கொண்டதை நான் மறுத்தது உனக்கு ஒரு தன்மானப் பிரச்னையாகத் தெரியலாம். அப்படி எடுத் துக்கொள்ளாதே. ஒளிவு மறைவாக இருந்தாலும், இந்த விளம் பரங்களில் பெண்கள் சித்திரிக்கப்பட்ட விதம் உனக்குத் தவறாகத் தெரியவில்லையா? அல்லது, அந்த ஃபிராய்டியன் குறிப்புகள் புரியவில்லையா?"

"ரஞ்சி, இவ்வளவு தீவிரமாக நீ அதைப் பார்ப்பதுதான் தவறு."

"ஏரன், மன்னிக்கவும், இது என் தனிப்பட்ட தீர்வு மட்டும் இல்லை. இது போன்ற விஷயங்களை இவ்வளவு தீவிரமாய்ப் பார்க்க வேண்டியது உன் கடமை. என் பொறுப்பு. நம் நிறுவனத் தொழில் அறநெறி சம்பந்தப்பட்ட விஷயம். நம் பெயர் அத்தகைய விளம்பரங்களுடன் மக்கள் மனத்தில் பதிவதை அனுமதிக்க முடியாது. மேலும், சிறுவர் - சிறுமியரும் பார்க்கும் முக்கிய மீடியா நேரத்தில் ஓடும் விளம்பரப் படங் கள் இவை என்பதும் நினைவிருக்கட்டும். ஸாலி, உனக்குத் தெரியாததா?"

"அறிவுஜீவிப் பி.ஹெச்டி. பெண்கள் எல் லாம் மேல்மட்ட நிர்வாகத்திற்கு வந் தால், அறநெறி அது இது என்று கழுத்தறுக்கத்தான் செய்வார்கள். பேராசிரியைப் பதவி பொருத்தமாக இருந்திருக்கும்." மெல்லச் சிரித்தான் ஏரன்.

"ஏரன், இறுக்கமான நிறுவனச் சூழலில் நகைச்சுவை உணர்வு தேவைதான். ஆனால், அது நம் பரஸ் பரத் தொழில்முறை மரியா தையைக் கெடுத்து விடா மல் பார்த்துக்கொள், சரியா?" ரஞ்சி மென்மை யாய்ச் சொன்னாள். ஏரன் மௌனமாய் முகம் சிவந் தான்.

"ஏரன், ஸாலி, உங்கள் இருவரின் உழைப்புக்கும் நேரத்துக்கும் நன்றி. அடுத்த முறை வெற்றி கிடைக் கட்டும்."

அவன் தன் அறை நோக்கி விரைந்தாள். அங் கிருந்து சில பத்திரங்களை எடுத்துக்கொண்டு பிரெ சிடெண்ட்டைச் சந்திக்க வேண்டும். ஏற்கெனவே ஐந்து நிமிடத் தாமதம். அவள் கவலைப்பட்டிருக்க வேண்டியதில்லை. பிரெ சிடெண்ட்டே அவள் அறைக்கு வந்து காத்திருந் தார். அவள் உள்ளே நுழை யவும், கையில் எடுத்து வைத்திருந்த அவள் குடும் பப் படத்தை மீண்டும் மேசை மேல் வைத்தார். "அனுகா நல்ல உயரம், அப்பா போல்" என்றார். அவள் தலையசைத்தாள்.

'ஹ்ம்ம்ம்... ரஞ்சி களைத்துத் தெரிகிறாய். காஃபி, தேநீர் ஏதாவது...?" அவள் வேண்டாமென்று தலையசைத்தாள். "பேசிக்

கொண்டே ஒரு நடை போகலாமா? கொஞ்சம் சுறுசுறுப்பாய் இருக்கும்" என்று அவர் சொன்னது வினோதமாகத் தெரிந்தது. கட்டடத்துக்கு வெளியே கூடப் போகவில்லை. அவர்கள் அறைகளுக்கு வெளியே நீண்டிருந்த அடர்பச்சைக் கம்பள வெளியில் உலாவ ஆரம்பித்தார்.

உலகத் தலைமையகக் கட்டடத்தில், மேல் மட்ட நிர்வாகத்தினர்க்கு மட்டுமான பன்னிரண்டாவது தளம் அது. அதன் ஆழமான அமைதியில் பல இரகசியங்கள் புதைந்து கிடப்பதுபோல் தோன்றும். சார்த்தப்பட்ட பெரும் அறைக் கதவுகளின் பின்னால் பல திட்டங்கள் தீட்டப்படுவது புரியும். காலணிகள் ஆழப் புதையும்போது கம்பளம் பெருமூச்சு விடுவது மட்டும் அவ்வப்போது கேட்கும். இப்போது போல்.

இரு பக்கத்துச் சுவர்களிலும் பெரிய ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்தன. ஒவ்வொன்றின் மேலும் ஒரு தனி மின்விளக்கின் ஒளிவட்டம். தெரிந்த படங்களை மெதுவாகக் கூர்ந்து பார்த்துக் கொண்டே வந்தார் ஏ.ஜே., அவள் மௌனமாய் அருகே நடந்தாள். விளம்பர நிறுவனக் கூட்டத்தின் சோர்வு இன்னும் அகலவில்லை. நேர விரயம் உருவாக்கும் தீவிர மனச்சோர்வு. அந்த நேரத்தில் ஒரு நல்ல புத்தகம் படித்திருக்கலாம். பாடல்கள் கேட்டிருக்கலாம். பறவைக் கூட்டம் மூக்கோண வரிசையில் பறப்பதைப் பார்த்து அதிசயித்திருக்கலாம். க்ரிஸ்ஸைக் காதலிப்பதாய் அவனிடம் தொலைபேசியிருக்கலாம்.

ஏ.ஜே.யின் குரல் நினைவைக் கலைத்தது. "ரஞ்சி, ஒவ்வொரு நாளும் இந்தப் படங்களை எத்தனையோ முறை கடந்து செல்கிறோம். இவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்திருக்கிறாயா?"

என்ன வினோதமான கேள்வி இது. "ஏ.ஜே. நான் அங்கும் இங்குமாய் ஓடும்போது, அந்தந்தக் கணத்துக்கான தொழில் பிரச்னைகளும் அவற்றின் தீர்வுகளும்தான் என் நினைவில் இருக்கும். இந்தப் படங்களை நின்று நிதானமாகப் பார்க்கவோ, அவற்றைப் பற்றி யோசிக்கவோ நேரம் இருந்ததில்லை. ஆனால், பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஒரு குடும்ப நிறுவனமாய்த் தொடங்கியது, முதல்தரப் பன்னாட்டு நிறுவனமாக இன்று விரிந்ததற்கு இவர்கள் எல்லாரும் காரணம் என்பது தெரியும்."

ஏ.ஜே. இறுதி ஓவியத்தின் அருகில் நின்றார். அதற்கடுத்த வெறுமையாய்க் கிடந்த சுவர்ச் சதுரத்தைக் காட்டினார். "இங்குதான் என்னுடைய திருமுகம் ஏறும்" என்றார். சில நிமிட மௌனம். "ரஞ்சி, அதற்கு அடுத்ததாய் உன் படம் இருந்தால் எப்படி இருக்கும்?"

அவர் சொல்

சுவை குடம்!

கற்க வேண்டியதையெல்லாம் குருவிடம் கற்று முடித்துவிட்டான் சிஷ்யன். பிறகு நம் எம்.எல்.ஏக்கள் கட்சி தாவுவது மாதிரி வேறு குருவிடம் செல்ல நினைத்தான். குருவுக்குச் சிஷ்யனை விட மனமில்லை. எவ்வளவோ சொல்லியும் சிஷ்யன் கேட்கவில்லை. பிறகு ஒரு குடம் நிறைய தண்ணீர் தந்து, "இதை நீ சேரப் போகும் குருவிடம் கொடுத்துவிட்டுச் சேர்ந்து கொள்" என்றார் குரு. இவன் எல்லாம் கற்றுத் தேர்ந்துவிட்டான் என்பதுதான் அதன் அர்த்தம்.



குடத்தைத் தூக்கிக்கொண்டு சேரப் போகும் குருவிடம் கொடுத்தான். அந்தக் குரு விஷயத்தைப் புரிந்துகொண்டார். பிறகு அந்தக் குடத்தில் சில கற்கண்டுகளைப் போட்டு, "முதல் குருவிடம் கொண்டு போய் இதைக் கொடு" என்றார். சிஷ்யன் தூக்கிப் போனான். ஒருகணம் திகைத்த அவர், தண்ணீரைக் குடித்துப் பார்த்தார். இனித்தது. "நீ சேரப் போகும் குரு விஷயமுள்ள குறும்பு பார்ட்டிதான்" என்றார் குரு.

- இரா. சுந்தரானந்தா, சென்னை - 23.

வது சரியாகக் காதில் விழவில்லையோ, "என்ன சொன்னீர்கள், ஏ.ஜே?"

"எனக்கு அடுத்து இந்த நிறுவனத்தின் தலைவராக உனக்கு விருப்பமா என்று கேட்டேன்."

ரஞ்சி அருகே கிடந்த இருக்கையில் உட்கார்ந்தாள். "ஏ.ஜே. என்ன இது திடீரென்று நீங்கள்?"

"நான் 'போர்ட் சேர்மன்' ஆக மட்டும் இருக்கலாமென்று நினைக்கிறேன். நிறுவனத்துக்குப் புதுத் தலைமை, புதுப் பார்வை தேவை."

ஏ.ஜே. கையைக் கட்டியவாறு குறுக்கும் நெடுக்குமாய் நடக்க ஆரம்பித்தார். உடல் மொழியில் ஒரு தீவிரம். சுவரில் தொங்கும் ஓவியங்களை நோக்கிக் கை வீசினார். "இந்தப் படங்களையும், அடுத்த படமாக உறையப் போகும் என்னையும் பார். வெள்ளைக்கார ஆண்கள், பெண்களுக்கும், கறுப்பினத்தவருக்கும், பிற இனத்தவருக்கும், கல்வி, அரசியல், வோட்டு, மற்றச் சமூக உரிமைகள் இல்லாத காலம் வரைக்கும் அது சரி. எல்லாரும் முன்னேறி வரும் இந்தக் காலத்திலும் பழைய தலைமை முறைகளே தொடர்வது செயற்கையாக இல்லை?"

"அதாவது, நம் நிறுவனம் முற்போக்கானது என்று காட்டிக் கொள்ள உங்களுக்கு ஒரு வெள்ளைத் தோல் இல்லாத பெண் தலைமை தேவை!?"

ஏ.ஜே. நடப்பதை நிறுத்தினார். அவள் எதிரே கிடந்த இருக்கையில் அமர்ந்தார். அவளை உற்றுப் பார்த்தார்.

ரஞ்சி நிதானமாகத் தொடர்ந்தாள். "ஏ.ஜே, என் நேர்க் கேள்விக்கு நீங்கள் நேராகப் பதில் சொல்வீர்கள் என்ற நம்பிக்கை. என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு உள்நோக்கம் எதுவும் இருந்தால் அதைத் தெரிந்து கொள்ளும் உரிமை எனக்கு உண்டு. என் முடிவுக்கு அது முக்கியம்."

"ரஞ்சி, உன் நேரடிப் பேச்சு என்றுமே உன் பலமாகத்தான் இருந்திருக்கிறது. உன் கேள்விக்குப் பதில் சொல்வது என் பொறுப்பு. சம வாய்ப்பு போன்ற சமூக விஷயங்களில் நம் நிறுவனம் முன்னணியில் நிற்பது. அதை வலிந்து காட்ட வேண்டிய தேவை நமக்கு இல்லை. உண்மையில், உன்னைத் தவிர்த்து வேறொருவரைத் தலைமைப் பதவியில் போட்டால்தான் வர்த்தக வட்டத்தில் கேள்விகள் எழும். நிச்சயமாக."



"நம்ம பால்காரன் மந்திரி மாதிரி பேசக் கத்துக்கிட்டான்..."

"எதை வச்சுச் சொல்றே?"

"பால் ஏன் ரொம்பத் தண்ணியா இருக்குன்னு கேட்டா, முன்னாடி மாட்டை வச்சுக்கிட்டிருந்தவர் அதைச் சரியா பராமரிக்கலைன்னு பதில் சொல்றான்!"

- பாளை பாலு

"சரி, தொடருங்கள், ஏ.ஜே."

"நம் மேல்மட்ட நிர்வாகம் வெள்ளை ஆணாதிக்க உலகமாக இருந்தது தெரியும். இங்கு பிற இனத்தவருக்கும், பெண்களுக்கும் இதுவரை இருந்த, கண்ணுக்குத் தெரியாத தடையை ('க்ளாஸ் சீலிங்') உடைத்து நீ மேலே வந்திருக்கிறாய் - சமரசம் செய்யாத உன் திறமையால். அந்த விதத்தில் நீ எல்லாருக்கும் ஒரு முன்மாதிரி. உன் முன்னேற்றத்திற்குத் திறமையைத் தவிர மற்ற எல்லா காரணங்களையும் காட்டச் சிலர் முனைவதை நாங்களும் கவனித்திருக்கிறோம். சிறு வயதிலிருந்தே ஆணாதிக்க உலகில் படிப்பு, தொழில் என்றிருந்த உனக்கு இதெல்லாம் புதிது அல்லவே. உன் திறமை பற்றி உனக்குத் தெரியும்..."

ஏ.ஜே. நிறுத்தினார். வார்த்தைகளைக் கவனமாகப் பொறுக்கிப் போடுவது புரிந்தது.

"ரஞ்சி, அயராத உழைப்பும் திறமையும் பலரிடமும் உண்டு. கூடவே, நிறுவனத்தை எதிர்க்கேள்வி கேட்கும் மனச்சாட்சியும் உன்னிடம் இருக்கிறது. ஆக்கப்பூர்வமாக, பண்பு தவறாமல் கேள்வி கேட்க உன்னால் முடிகிறது. ஒரு சின்ன உதாரணம். உலகமயமாக்கல் பற்றி நீ கிளப்பிய பிரச்னை நினைவிருக்கிறதா?"

அவளால் எப்படி மறக்க முடியும், சில மூன்றாம் உலக நாடுகளில் நிறுவனத்தின் செயல்பாடுகள் சரியில்லை. பலருக்கும் சீட்டுக் கிழித்து, புது விதிமுறைகள் உண்டாக்கியது அவன்தான். "நான் செய்தது



''கண்ணகி சிலைக்குப் போ'ன்னு சொன்னா இங்கே கொண்டாந்து நிப்பாட்டிட்டியே?''
''கண்ணகி சிலை இப்ப இங்கேதான் ஸார் இருக்கு!''
- உ. ராஜாஜி

சரி. ஏ.ஜே. ஆனால், லாபம் குறைந்ததும், பலருக்கும் என் மேல் எரிச்சல் ஏற்பட்டதும் உண்மைதானே.''

''அதனால் வந்த உன் பதவி உயர்வும் உண்மைதானே, ரஞ்சி. பிரச்னையை அந்தந்த நாட்டினரின் கண்கள் வழியே உன்னால் பார்க்க முடிந்தது. சரியென்று நம்பியதை எடுத்துச் சொல்லும் தைரியம் இருந்தது. அதனால் ஒரு மாற்றுப் பார்வையை நம் நிறுவனத்தின் முன் வைக்க முடிந்தது. உடனடி லாபமும், 'ஈகோ'வும் அடிமட்ட, நடுத்தர நிர்வாகத்துக் கணக்கர்களின் பிரச்னை. மேல்மட்டத்தில் நமக்கு தேவையானது விரிவான தொலைநோக்கு...''

''நாம் இன்னும் இருபதாம் நூற்றாண்டிலேயே நின்று கொண்டிருக்கிறோம், ஏ.ஜே. நிறைய மாறுதல்கள் தேவை.''

''நிறுவனத்தின் ஒரு பகுதியாக, அதன் தலைமையில் இருந்தே மாற்றங்கள் செய்யலாமே, ரஞ்சி? பல இனத்தவரையும், பல மதத்தவரையும், இரு பாலாரையும், பல பார்வைகளையும் உன்னால் அரவணைத்துச் செல்ல முடிகிறது. உலக நடப்புகளைப் புரிந்து, தூரப் பார்வையுடன் செயல்பட முடிகிறது. நெருக்கடியான நேரங்களில்கூட ஓர் அமைதி உன்னிடம் இருக்கிறது...''

''ஏ.ஜே., நீங்கள் இப்படியே பேசிக் கொண்டு போனால் நான் போனஸைக் கூட்டிக் கேட்க வேண்டியிருக்கும்...'' ரஞ்சியின் சிரிப்பில் ஏ.ஜே.யும் கலந்து கொண்டார்.

''மென்மையும் உறுதியும் கூட்டுறவும் தத்துவமும் பொருந்திய 'பெண் தன்மை'யுள்ள நிர்வாகப் போக்கு உன்னுடையது என்றார் ஒருவர். இது ஆண்களுக்குள்ளும் இருப்பதுதான். ஆனால், 'ஆண் தன்மை' கொண்ட நிர்வாகப் போக்குகளையே நம் ஆணாதிக்கச் சமூகம் பெரும்பாலும் அங்கீகரிக்கிறது. ஆண், பெண் யாராக இருந்தாலும், இந்தப் புது நூற்றாண்டில் செல்லுபடியாகப் போவது உன்னுடையது மாதிரியான மனிதத் தன்மையுள்ள நிர்வாகப் போக்குதான்...'' ஏ.ஜே நிறுத்தினார்.

அவன் சற்று நேரம் மௌனமாயிருந்தாள். ''சுறா மீன்களே அதிகமுள்ள நம் உலகத்தில் என் போன்றவர்களின் தலைமை நம் நிறுவனத்தைப் பலவீனப்படுத்தலாம்...''

''நீண்ட காலப் பார்வையில் அதுவே பலமாகவும் அமையலாம், ரஞ்சி...''

''ஏ.ஜே. இது நான் சிறிதும் எதிர்பாராதது. தீர யோசித்துத்தான் முடிவு செய்ய வேண்டும்.''

எவ்வளவு வாரங்கள் வேண்டுமானாலும் எடுத்துக்கொள். அவசரமில்லை. சாதகமான முடிவானால் மகிழ்வேன். சொல்லிவிட்டு நகர்ந்தார் ஏ.ஜே.

ரஞ்சி அசையாமல் உட்கார்ந்திருந்தாள். வெந்நீர், தேயிலைப் பைகள், சர்க்கரை, பால் எல்லாம் ஏந்திய தாம்பாளத்தை அவளருகே வைத்து விட்டுப் போனார் உதவியாளர். அவள் கைகள் தாமாகவே தேநீர் கலந்தன. கண்கள் கண்ணாடிச் சுவருக்கு வெளியே நிலைத்திருந்தன. நிறுவன வளாகத்தின் சீராய்ச் செதுக்கிய புல் தரைகள், குளிர் காலத்திலும் இலையிழக்காத மரச் செறிவுகள். இவற்றிற்கு அப்பால் பரந்திருக்கும் நெடுஞ்சாலைப் பின்னல்கள். அவற்றின் மேல் மௌன எறும்புச் சாரையாய் ஊர்ந்துகொண்டிருக்கும் வாகனங்கள். எதுவுமே அவள் கண்ணுக்குத் தெரியவில்லை.

பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால், பற்பல வருடங்களுக்கு முன்னால், 'நீயோ-நானோ' என்று கண்மறைவான பறவைகள் பாடும் தாமிரபரணிக் கரையோரத்தில் இப்போது அவள் இருந்தாள்.

(தொடரும்)

ஆகாஷ் குழந்தையின்மை சிகிச்சை மையம்

AAKASH FERTILITY CENTRE

* குழந்தையில்லா தம்பதியினருக்கு நவீன சிகிச்சை மூலம் ஒரு தீர்வு. பெண்களுக்கான குறைபாடுகளை அறிந்து சிகிச்சை அளிக்க புகழ்பெற்ற பெண் மருத்துவரும், ஆண்களுக்கு தகுதி வாய்ந்த ஆண் மருத்துவரும் உங்களுக்கு சிகிச்சை அளிப்பார்கள்.

ஆம்! நீங்களும் குழந்தை பெற்றுக் கொள்ளலாம்!

* குழந்தை இன்மைக்கான காரணங்களை விஞ்ஞான முறையில் ஹார்மோன்கள், ஸ்கேன் HSG மற்றும் லேப்ராஸ்கோப் மூலம் அறிந்து, தேவையெனில் நவீன சிகிச்சை முறைகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.

* நவீன சிகிச்சை முறைகள்:

IUI மிகக் குறைந்த உயிரணுக்கள் இருப்பது, பெரும்பான்மையான உயிரணுக்கள் ஊர்ந்து செல்லும் தன்மையில்லாததும் விந்துவில் எதிர் உயிரிகள் இருப்பது போன்ற காரணங்கள் இருந்தால் கணவனின் விந்துக்களில் உள்ள நல்ல அணுக்களைப் பிரித்தெடுத்து கர்ப்பப் பையினுள் செலுத்தப்படுகிறது. இதனால் பெருமளவு விந்துக்கள் கர்ப்பம் தரிக்கும் இடத்தை அடைய ஏதுவாகிறது.

IVF டெஸ்ட் டியூப் பேபி: இம்முறையில் ஆண்-பெண் அணுக்களை வெளியே எடுத்து அவற்றை கருவுறச் செய்து மீண்டும் கர்ப்பப் பையினுள் செலுத்தப்படுகிறது.

ICSI மிகவும் பலவீனமான விந்தணுக்களைக் கொண்டவர்களுக்கு பெண்ணின் கருமுட்டையை எடுத்து அதில் சிறு துளையிட்டு விந்தணுவைச் செலுத்தி கர்ப்பம் தரிக்கச் செய்யப்படும் முறை இது.

நீங்கள் எவ்வாறு தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம்:

தொலைபேசி : 4742727, 4897098, 4745599,
செல்லுலார் போன்: 98410 48993
133, காமகோடி தெரு, லேக்வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 33

சாருலதாஸ்

சாரி ஷாப்

20% தள்ளுபடி

பெங்கால் மற்றும் பேன்ஸி சேலைகள்

பொங்கல் வரை



- காந்தா ஓர்க்
- பெங்கால் சில்க்
- டஸ்ஸர் சில்க்
- கட்டான் சில்க்
- கிரஷ்டு சில்க்
- டபேடா சில்க்
- பாலிகாட் எம்பிராயிடரி
- பாலுசேரி
- டாக்காய், ஜாம்தானி
- காட்டன் சில்க், கிரேப் எப்பிராயிடரி
- டிசைனர் சாரி (Hand - Painted)
- தனியாகாலி
- சில்க் காட்டன்
- 9 கெஜ புடவைகள்

SPECIAL OFFER !!

3 ஆர்ட் சில்க் சேலைகள் Rs.600/- மட்டுமே

3 பேன்ஸி ஆர்கன்ஸா சேலைகள் Rs.900/- மட்டுமே

ஞாயிறு கடை உண்டு

10, ராஜா பாதர் தெரு (ரத்னா பேன் ஹவுஸ் வளாகம்) (நாயுடு ஹால் பின்பக்க தெரு), பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 17
தொலைபேசி : 8212427, 8214972

MASTER/VISA/DINERS CARDS ACCEPTED

Starching & Polishing of Sarees undertaken

மும்பை மசாலா

உலக அமைதிக்காக மும்பைக்காரர்கள்தான் என்ன பாடுபடுகிறார்கள்? ஒருபுறம் சின்மயாக்காரர்களின் விஸ்தார பொன் விழாக் கொண்டாட்டங்கள்; மறுபுறம் ஆயிரம் ஹோம குண்டங்களில் யக்ஞத் தீ வளர்ப்பு; பிறிதொரு புறம் லட்சம் மோதகங்களை அக்னிக்குச் சமர்ப்பிக்கும் மகா யக்ஞம்; இன்னொரு புறம் முற்றிலும் மூங்கிலால் வேய்ந்த குடில்களில் அதிருத்ரம். அப்புறம் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் விஜயம்... எல்லாமாகச் சேர்ந்து மும்பைக்காரர்களை நடுநடுங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. ...சீச்சீ... செலவைப் பற்றிய கவலை எல்லாமில்லீங்க... ஒரு பக்திப் பரவசம்தான்!



* சாதாரணர்

பரவசம் ஏற்படாதா என்ன... ஒரு சாதாரணருக்குச் சிலை வைத்தால். சாதாரணமாக நாம் சாதாரணர்களை சர்வசாதாரணமாக ஒதுக்குவதுதான் வழக்கம். ஆனால், ஆர்.கே. லக்ஷ்மணின் கார்ட்டூன் கேரக்டரான "சாதாரண மனிதருக்கு" புனேவில் சிலை எடுத்து, 'பிரசிடெண்ட்'ஜி கையால் திறப்பு விழாவே நடத்தியிருக்கிறார்கள். மிஸ்டர் பொதுஜனத்தின் வாயிலாக அரசியல்வாதிகளுக்கு லக்ஷ்மண் கொடுத்த சாட்டையடிகளை, முதல்வரும், துணை முதல்வருமே பாராட்டிப் பேசினர். ஆனால் வேடிக்கை என்னவென்றால், இதுவரை, நடப்பவற்றிற்கு மௌன சாட்சியாய் இருந்திருக்கிறாரேயன்றி, வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசியதேயில்லை இந்த 'சாதாரணர்'! அசாதாரணமாயில்லை?

மித்வா...



* லகான் டீம்...

ஓ...

அசாதாரணமான காரியங்களை, சாதாரணர்களும் செய்ய முடியும் என்பதற்கு, பாண்டுப் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் தொழிற்கூடம் வைத்திருக்கும் ராமானுஜமே சாட்சி; பாருங்களேன்... இனிமேல் லெட்டரை எழுதிக் கவரில் போட்டு விட்டு, அதை ஒட்ட 'கம்'மையோ, கூழையோ, சோற்றுப் பருக்கையையோ, எச்சிலையோ தேடி அலைய வேண்டுமென்பதில்லை! ஜஸ்ட் மடித்து, வெறும் கையால் ஒரு அழுத்து அழுத்தினால் போதும்... (காதல் கடிதமென்றால் அன்புடன் அழுத்தலாம்; ஆந்த்ராக்ஸ் சமாசாரமென்றால் ஒரு குத்து விடலாம்.) கொஞ்சம் பெரிய பார்சலென்றாலும் உள்ளே துணி வைத்துத் தைத்தக் கவர்களுடன் அல்லாட வேண்டாம்; பதிலாக ப்ளாஸ்டிக் லாமினேஷன்... நீட்டாக இருக்கிறது.

சாமானை வைத்து விட்டு ஒரு 'செக்'! 'பசக்'கென்று ஒட்டிக் கொள்ளும்... இதயங் களைப் போல... வாட்டர் ப்ரூஃப், டர்மைட் ப்ரூஃப் வேறு! வெறும் ஸ்மால் 'ஸ்கேல்' இண்டஸ்ட்ரியலிஸ்ட்டாக இருந்தவர், (குட்டி ஸ்கேல் உற்பத்திதாங்க) வெளிநாடு களிலிருந்து வரும் கவர்களின் தரத்தால் ஈர்க் கப்பட்டு, இன்டர்நெட்டில் மேய்ந்து, அயல் நாட்டு யுக்தியை இறக்குமதித்து, கொஞ்சம் நம்மூர் மசாலாவையும் சேர்த்து, இந்தியா விலேயே முதன் முறையாக, தானே ஒட்டிக் கொள்ளும் கவர் உற்பத்தி யாளராக மாறி விட்டார். பாண்டுப் தொழிற்பேட்டை யின் 'ஹவுஸ் மாகஸீ'னான மார்க்கதர்சினியை சஜன் புஜ்பல் வெளியிட்ட போது, இந்தக் கவர்களின் சாம்பி ளைப் பெற்றுக் கொண்டு, 'இந்த மாதிரி புதிய முயற்சிகளை வரவேற்க வேண்டும்' என்று (அவரே ஏதாவது பல்க் ஆர்டர் கொடுப்பாரா?) பாராட்டி யிருக்கிறார்!



• ராமானுஜத்திடம் 'கவர்' பெறுகிறார் புஜ்பல்

மித்வா!

பாராட்டும் புகழும் எக்கச்சக்கமாக அள்ளிக் கொண்ட 'லகான்' டீம், அந்தக் கைதட்டல்களை 'லைவ்'வாகப் பெற்ற கதை தெரியுமா? க்ராமீய ஸ்டைலில் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, காதில் வளைய மும், கையில் தாயத்தும், ஆனால் காலில் மட்டும் ஷூ ஸாக்ஸுடன், ஆமீர்கான், "மித்வா... ஓ மித்வா!" பாடிக் கொண்டு, கிரிக் கெட் விளையாடியதைப் பார்த்து, கூட்டம் ஆரவாரித்தது, ப்ரபோர்ன் ஸ்டேடியத்தில்! எதிர்த்து ஆடியவர்கள் பிரிட்டானியா அணியைச் சார்ந்த இளசுகள். வெற்றி, ஆமீர் அண்ட் கோவுக்குத்தான்! (97 for 7; எதிரணி 96 ஆல் அவுட்) மேன் ஆஃப் த மாட்ச் அவார்டான ரூ. 50,000 வென்றவர்.... கச்சரா!

கச்சடாவாகி விட்டதே..! முன்னாள் முதல்வரும் இந் நாள் எதிர்க்கட்சித் தலைவரு மான நாராயண் ராணே விவகாரம்தான். சிவசேனைக் காரர்கள் குசுகுசுப்பாகப் பேசி சிரித்துக் கொண் டிருக்கிறார்கள்... ஒன்று மில்லை... நாக்பூரில் நடந்த கூட்டத்தில் ராணே ஆவேச மாகப் பேசிக் கொண்டிருந்த போது, யாருடைய செல் ஃபோனோ அலற, ருத்ர தாண்டவமாடி விட்டார் ராணே; அவர் கோபம் பிரசித்தமென்பதால் கூட்டத் தில் அப்புறம் பேச்சு மூச்சே இல்லை; திடீரென்று மறு படியும் செல்ஃபோன் அடிக்க, கூட்டம் நடுங்கி விட்டது. பார்த்தால்... கடைசியில் அது ராணேயு டைய செல்ஃபோனேதான்! வழிந்து... பின்... அடங்கி விட்டார்!

— ஜெயஸ்ரீ ராஜ்

தலம் தோறும் தமிழ்க்கடவுள் - 8

திருமதி ஏ.எஸ். ராகவன்

திருமலிவான

இறைவனைக் குழந்தையாக பாவித்துப் போற்றுவதில் நாம் அடைகிற உள்ளக் களிப்பு தனியானது.

கிருஷ்ண லீலைகளைக் கேட்க கேட்க அலுப்பு ஏற்படுகிறதா...?

'பௌர்ணமி சந்திரனை பிடித்துத் தா' என்று ஸ்ரீராமன் பாலகனாக இருந்தபோது படுத்திய கதையைக் கேட்க கேட்க பூரிப்பு ஏற்படுகிறது அல்லவா!

மாமனின் இந்த லீலா விநோதங்களையும் அவன் குழந்தையாயிருந்தபோது கன்னமும் கதுப்புமாக, சுருள் கேசம் சூழ்ந்த முகத்தில் இரு கண்களும் குறும்பு சிந்த சிரித்த காட்சிகளையும் மருமகன் முருகனிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்...?

இந்த கிருஷ்ண லீலா 'ஹரிகதை' நடந்தது திருஆலவாயில். நிகழ்த்தியவர்கள்... சாக்ஷாத் மீனாக்ஷி அம்மையும் ஸ்ரீராமன் சுந்தரேசுவரரும்தான்! குழந்தை முருகனை மடியில் வைத்துக் கொண்டு, கதை சொல்லிக் கொண்டிருந்த அம்பிகை, சகோதர பாச மிகுதியால் ஒரு தவறு செய்தாள். "உன்னை மாதிரி சின்ன குழந்தையாய் இருந்தபோது கண்ணன் ரொம்ப அழகாயிருந்தான்... உன்னை விட அழகாயிருந்தான்!" என்று சொல்லி விட்டாள் குழந்தையிடம். அவ்வளவுதான்! பாலமுருகனின் பால்முகம் வாடிச் சிறுத்து விட்டது.

சற்றைக்கெல்லாம், கந்தனைக் காணோம் என்று மேலும் கீழுமாகத் தேடும்படியாகி விட்டது. தேடி அலைந்தவர்கள் அவனைக் கண்டெடுத்தது சோலைமலையில். பார்த்த சில கணங்களுக்கு அடையாளம் புரியாமல் திகைத்தார்கள்... ஏனெனில், தன்னை கண்ணனாக வேஷமிட்டுக் கொண்டிருந்தான் கந்தன்! கிருஷ்ணன்தான் அழகு என்று அம்மா சொல்லிவிட்டதால் தானும் மயில் பீலியும் முத்துக் கொண்டையும் அணிந்து மோகன புன்னகையைத் தவழவிட்டு நின்றான்.

அம்பிகையும் ஈசுவரனும் நெகிழ்ந்துருகி குழந்தையை வாரி அணைத்து "நீ அழகன் தானடா! ஒப்புயர்வற்ற அழகன்..." என்று மெச்சி மெச்சி மகிழ்ந்தார்கள். அதன் பிறகு 'கண்ணன்' மீண்டும் கந்தன் ஆனான்!

கண்ணன் வேடம் பூண்ட கந்தனுக்கு 'அழகர்' என்ற பெயர் வழங்கலாயிற்று. தன் வேடம் தரித்த மருமகனைப் பார்க்க மாமனும் தமது இரு தேவியருடன் வந்தார். வியந்து வியந்து கொஞ்சி மகிழ்ந்தார்!

இந்த நிகழ்ச்சி ஒரு முருகனடியாரின் கற்பனைதான். ஆனால் அருணகிரிநாதர் இத்தலத்தின் வைணவத் தொடர்புகளைத் திருப்புகழில் பொதித்துப் பாடியிருக்கிறார்:

பூவுல கெலாம டங்க வோரடியினால எந்த

பூவைவடி வானு கந்த மருகோனே..

கண்ணன் கந்தனாக, கந்தன் கண்ணனாக தனித்தனி கோலங்கள் கொண்டு காட்சி தரும் தலம்தான் சோலை மலை. பழமுதிர் சோலை என்று நக்கீரர் இதனை திருமுருகாற்றுப்படையில் ஆறாவது படைவீடாக அறிமுகப்படுத்துகிறார். திருமாலிருஞ்சோலை, அழகர் மலை என்றும் பெயர்கள் உண்டு. மதுரையிலிருந்து இருபது கிலோமீட்டர் தூரம்தான்.


மிக உயர்ந்த மலை! சோலை மலை என்ற பெயரைக் காப்பாற்றும் மரங்கள் இன்னமும் இருக்கின்றன. மரங்களிலிருந்து பழங்கள் கனிந்து உதிர்வதனாலேயோ அல்லது மந்திகள் அவற்றை உலுக்கி உதிர்ப்பதனாலேயோ பழமுதிர் சோலை என்று பெயர் வந்ததாம்! சிலம்பாறு எனப்படும் நூபுர கங்கை தீர்த்தம் இருக்கிறது.

மலையடிவாரத்தில் கோயில் திருமாலுக்கு. பஞ்சாயுதங்களுடன் (சங்கு, சக்கரம்,

வில், கதை, வாள்) ஸ்ரீ தேவி - பூதேவி சமேதராக நின்ற கோலத்தில் காட்சி தருகிறார் திருமால். இவருக்கு பரம சுவாமி சுந்தரராஜர், கள்ளழகர் என்று பல பெயர்கள்.

'ஸ்ரீ சுந்தரராஜம் பஜேஹம்' என்ற கீர்த்தனையில் முத்துஸ்வாமி தீக்ஷிதர், இந்தப் பெருமாள் ஸோமாஸ்கந்த விமானத்தில்

பழமுதிர்சோலை



வீற்றிருப்பதாகப் பாடி வைத்துள்ளார். ஸோமாஸ்கந்தர் என்பது முருகனை நடுவே வைத்து இருபுறமும் சிவ-பார்வதி அமர்ந்திருக்கிற கோலம். முருகனுக்கும்-திருமாலுக்குமான தொடர்பு உறுதிசெய்யப்படுகிறது.

எப்போதும் மலை மேலேயே இருக்க ஆசை கொண்ட முருகன், உச்சியில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டான். அவனழகை எப்போதும் கண்டுகளிக்கும் விதமாக, திருமால் அதே மலையின் அடிவாரத்தில் தங்கிவிட்டான். 'அழகர்' எனற பெயரையும் பெற்றான்.


மலை மேலே, நூபுர கங்கையின் அருகே இருக்கிறது முருகன் சன்னிதி. அதைச் சென்றடையும் வழியில் நாராயண தீர்த்தம், அனுமதீர்த்தம், கருட தீர்த்தம் முதலியவையும் இருக்கின்றன. நூபுர கங்கையே திருமாலின் திருச்சிலம்பிலிருந்து உற்பத்தியாகி, அவர் அடியை வருடி வருகின்ற புண்ணிய நதி என்று சொல்லப்படுகிறது. இதன் கரையில் மாதவி மண்டபத்தில் அமர்ந்து இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் எழுதினாராம்!

பழைய காலத்தில் முருகன் திருக்கை வேலின் சிலை வடிவம் நாட்டப்பட்டு அதற்கே வழிபாடு நடந்துவந்ததாம். இப்போதைய ஆலயம் புதிய கட்டுமானம். அருணகிரிநாதர் காலத்துக் கோயில் இங்கே இல்லை.

விருஷபகிரி என்ற இன்னொரு பெயரும் கொண்டது இந்த க்ஷேத்திரம். யமன் இவ்விடத்தில் ரிஷபமாகத் தவமியற்றி தன் பெயரால் இம்மலை விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டானாம்.

மூலஸ்தானத்து முருகனைப் பார்ப்போம். ஒரு திருமுகமும் நான்கு கரங்களுமாக இருபுறமும் வள்ளி – தேவகுஞ்சரி விளங்க, நின்ற கோலத்தில் காட்சி தருகிறான். இங்கே சிலா வடிவமாகக் காணப்படும் வேலுக்குத் தனிச் சிறப்பு உண்டு.

நூபுர கங்கையில் நீராடிவிட்டு முருகனை தரிசிக்க வரலாம். வழியில் பார்க்கும் தல விருட்சம் நாவல் மரம். அதைக் கண்டதும் சுட்ட பழம் கதை நமக்கு ஞாபகம் வருகிறது.



ஔவைப்பாட்டி மரத்தி லிருந்து நாவல் பழங்களைச் சாப்பிட விரும்பியதும் மரக் கிளைகளில் ஒயிலாக அமர்ந்திருந்த கந்தனைப் பார்த்து பழங்களைப் பறித்துப் போடச் சொன்னதும், அவன் சுட்டப் பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று பாட்டியிடம் புதிர் போட்டதும்..! முருகன் கிளைகளை உலுக்கிக் கீழே உதிர்த்த பழங்களை, பாட்டி ஊதி ஊதிச் சாப்பிட்டதும்...

இந்த நிகழ்வின் விளைவாக, உலகறிய பல உண்மைகளை முருகன் ஔவை மூலமாக எடுத்துரைத்திருக்கிறான்_ வாழ்வியல் உண்மைகள்:

அவன் கேள்விகளாகக் கேட்டு வர, ஔவை பதில் சொல்லி வருகிறாள். 'உலகி லேயே கொடிய விஷயம் எது...?' என்ற கேள்வி எழுகிறது. அதற்குப் பிறக்கும் ஔவையின் பதில், தமிழில் மிகப் பிரசித்த மாகிவிட்ட கல்வெட்டுச் செதுக்கியது போன்ற பாடலாக வருகிறது:

கொடியது கேட்கின் நெடிய வேல்
வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில்
வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக்
கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப்
பெண்டிர்
அதனினும் கொடிது இன்புற
அவர்கையால்
உண்பதுதானே.

அன்பின் வித்து குடும்ப அமைப்புதான். அதனுள்ளிருந்து புறப்படும் குருத்துதான் முதிர் சோலையாக உலகம் கவிய விரி கிறது என்பதை உணர்த்தும் இப் பாடல் பிறந்தது பழமுதிர்சோலை யில்தான்!


இதை என்னும் ஞானப் பழத்தை உதிர்த்த கண்ணனும் ஔவைப் பிராட்டிக்காக நாவல் பழங்களை உதிர்த்த கந்தனும் ஒருங்கே கோவில் கொண்டுள்ள தலம்!

இது முருகன் தலமா? வைணவ தலமா? என்று கருத்து வேறுபாடுகள் எழுந்து வழக்கு மன்றம் வரை சென்றுவிட்டன! ஆனால் பெரி யோர்கள் இந்த அற்ப விவாதங்களி லெல்லாம் இறங்கவில்லை. உள்ளதை உள்ளவாறு சமபாவத்துடன் ஏற்றுப் பாடி னர்:

கடிது லாவு வாயு பெற்ற
மகனும் வாலி சேயு மிக்க
மலைகள் போட ஆழி கட்டி விகலூர்
போய்க்
களமு றானை தேர்நு றுக்கி
தலைக ளாறு நாலு பெற்ற
அவனை வாளி யால டத்தன்
மருகோனே

முடுகு வீர சூர பத்மர்
தலையின் மூளை நீறு பட்டு
முடிவ தாக ஆடு நிர்த்த மயில்வீரா
முனிவர் தேவர் ஞான முற்ற
புதித சோலை மாம லைக்குள்
முருக வேல த்யாகர் பெற்ற
பெருமாளே

— முருகனிடம் வருவதற்கு முன் ராமா யணக் கதையை விரிவாகப் பேசி முடிக் கிறார் அருணகிரியார்.



'வாயுபுத்ரனான ஹனுமானும் வாலியின் மகனான அங்கதனும் மலைகளைப் பெயர்த்துப் போட, கடலில் அணை கட்டி, பகைவனுடைய ஊராகிய இலங்கை சென்று, போரில் அவன் யானைகளையும் தேர் களையும் தூளாகச் செய்து, பத்து தலை

அருள்வாக்கு

அஸுரன் என்று வெளியில் யாருமில்லாமல் ஸர்வ ஜனங்களுக்குள்ளேயும் புகுந்து கொண்டிருக்கும் போது எப்படி ஸம்ஹரிப்பது? விச்வாமித்ரருக்கு யாகம் செய்யணுமென்று தர்மமான எண்ணம் இருந்தது. அஸுரர் என்று



வெளியிலே இருந்த சிலர் இடைஞ்சல் பண்ணினார்கள். ராமர் போய் அவர்களை வதைத்து - துஷ்க்ருத்களை விநாசம் செய்து - யஜ்ஞ ரக்ஷணமும் ஸாது பரித்ராணமும் பண்ணினார். கலியில் விச்வாமித்ரர் இருந்தால் அவருடைய மூளைக்குள்ளேயே அஸுரன் போய், முதலுக்கே அவருக்கு யாகம் செய்யத் தோன்றியிருக்காது! இப்படி தர்மகார்யங்கள் அரூபமான துஷ்ட சக்திகளால் நின்று போய் விடுகிற ஸமயத்தில் ஓர் அவதாரத்தைக் கொண்டு துஷ்ட சிக்ஷணம், சிஷ்ட ரக்ஷணம், தர்மோத் தரணம் ஆகியவற்றைச் செய்வதென்றால் எப்படி?

நம்மாலானால் இதற்கு ஸொல்யூஷன் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். பரமாத்மாவின் அவதாரமான ஆதி சங்கரரானதால் ஸுலபமாகக் கண்டு பிடித்து விட்டார்! ''கலிகால அவதாரங்களில் துஷ்ட ஜனங்களை ஸம்ஹரிப்பதில்லை. ஜனங்களுக்குள்ளே புகுந்து கொண்டிருக்கும் துஷ்டத்தனத்தையே ஸம்ஹரிக்க வேண்டும். இப்படிப் பண்ணி ஜனங்களை நல்லவர்களாக்கி விட வேண்டும். 'விநாசாய சதுஷ்க்ருதாம்'- கெட்டகார்யம் செய்பவர்களுடைய அழிவின் பொருட்டு, - என்பதற்கு ஓர் அமெண்ட்மெண்ட் போட்டு விட்டால் போதும். 'துஷ்க்ருதாம்' (கெட்ட கார்யம் செய்பவர்களுடைய) என்பதை 'துஷ்க்ருத்யானாம்' (கெட்ட கார்யங்களுடைய) என்று 'அமெண்ட்' செய்து விட்டால் போதும்'' என்று (பரமாத்மா _ ஆதிசங்கரர்) ஸொல்யூஷன் கண்டுபிடித்து விட்டார்!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

களுடைய ராவணனைத் தன் அம்பினால் கொன்ற திருமாலின் மருமகனே!..'

என்று கந்தனிடம் வருவதற்கு முன் கண்ணன் புராணம் பாடுகிறார்.

பதினாறு பாடல்களை இந்தலத்துக்கென் பாடியிருக்கிறார் அருணகிரிநாதர். அவற்றுள் ஒன்று:

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்;
இகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையு மாகிவருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடிவரவே ம்;
மகபதி ஆகி மருவும் வலாரி மகிழ்களி
கூரும் வடிவோனே
வனம்உறை வேடன் அருளிய பூஜை
மகிழ்கதிர் காமம் உடையோனே;
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர்சோலை
மலைமிசை மேவு பெருமானே

திருமலிவான பழமுதிர்சோலை என்று இத்தலத்தை திருமகள் நிறைந்துள்ள தலமாகவே பாடுகிறார். தமது இஷ்ட தெய்வமான முருகனை அவர் எத்தனை உயர்வாய்க் கருதுகிறார் என்பதையும் பாடல் காட்டுகிறது: அயன் அரி எல்லாமும் ஆகி அவற்றுக்கெல்லாம் மேலானவனாகி அகம் நிறைகிறவன் அழகர்மலை முருகன்.

'செக கண சேகு தகுதிமி...' என்று பின்னிப் பின்னி ஒலிக்கும் ஜதிக்கு ஏற்ப நடமிடும் மயிலின் மேல் வருகிறான் அவன்!

அந்தக் காட்சிதான் எத்தனை அழகான தாயிருந்திருக்கும்!

அதை அகக் கண்ணில் கண்டு அழகு தமிழில் பதித்த அருணகிரிநாதரின் இத்திருப்புகழ் ஒன்றே பழமுதிர்சோலை நோக்கி நம்மை ஈர்க்கப் போதுமானது.

(அடுத்த வாரம்...)

அகடமியில் கேட்ட அதர்மவதி!

ஆலாபனை செய்வதில் ஒவ்வொரு கலைஞருக்கும் ஓர் அணுகுமுறை இருக்கும். புடைவை கடையில் விற்பனையாளர் வீசி வீசி கடாசுவது போல் சிலர் பாடுவார்கள்; வேறு சிலர் சேலையைக் கொசுவி நீவி உடுத்திக் காட்டுவதுபோல் ராகத்தை ஷோ கேஸில் வைப்பார்கள்; அபூர்வமான அடக்கத்துடன் அதை மெள்ளப் பிரித்து அழகுகளைச் சுட்டிக் காட்டுவோரும் உண்டு. ஸ்ரீராம் கங்காதரன் புடைவையை நூல் நூலாகப் பிரித்து, பிய்த்துக் கழுத்தில் சுற்றிக் கொள்ளும் ரகம்! மியூசிக் அகடமியில் அவர் தர்மவதி பாடியபோது அப்படித்தான் தோன்றியது. ஆலாபனைக்கு இவர் போட்டுக்கொண்ட 'அவுட் லைன்' நன்றாகவே இருந்தது. ஆனால் அதற்குள் செய்த சேஷ்டைகள் ராக சாயலைக் குலைத்து இது தர்மவதியா அதர்மவதியா? என்று நம்மை நொந்து போக வைத்துவிட்டன.

வாய்ப்பாட்டில் ஆலாபனையை 'ததரினனோ' என்ற ஒலி அமைப்புக்குள் அடக்குவது சம்பிரதாயம். ஸ்ரீராம் கங்காதரனோ 'யேய்! யேய்!' என்று அழைத்து ராகத்தின் சிண்டைப் பிடித்து உலுக்கியெடுத்து விடுகிறார். கார்வைகளில் நிற்காமல் ஸ்வரத்துக்கு ஸ்வரம் மூச்சிரைக்க ஓடி அவர் முடிக்கவும் வயலின் வாசித்த பாலு ரகுராமன் தொடர்ந்தார்.

'அப்பாடி!' என்று சற்று இளைப்பாற வைத்தது அவரது அமைதியான தர்மவதி ஆலாபனை. ஆனால் தானத்துக்கு வில் போட அவஸ்தை பட்டார்!

ஸ்ரீராம் கங்காதரன் தம்பூரா இல்லாமல் - அதாவது கைதம்பூரா இல்லாமல் - வெறும் எலக்ட்ரானிக் சுருதிப் பெட்டியுடன் மேடையேறியது சோதனையாக முடிந்தது. பாடகரின் ப்ருகா மோகம் அவரது மனோ தர்ம சங்கீதத்துக்குப் பேரிடைஞ்சல் எனில் உச்சரிப்பில் காட்டும் அலட்சியம் கீர்த்தனைகளைக் குலைக்கிறது.

எடுத்தவுடனே யதுகுல காம்போதியின் மூர்ச்சனையைத் தொடுகிறவர் அதை ப்ருகாவால் ஹிம்சிப்பானேன்? திவாகரதனுஜம் (தீக்ஷிதர், யதுகுலகாம்போதி) த்ரிலோகமாதா நன்னு ப்ரோவு (ஸ்யாமா சாஸ்திரி, பரஸ்) போன்ற அழகழகான கீர்த்தனைகளை பேப்பர் வைத்துக் கொள்ளாமல் பாடுகிறவர் சாஹித்ய பாவம் என்பதை அடியோடு புறக்கணிப்பானேன்..? 'திவாகர தனுஜம்' கீர்த்தனையை விஸ்தாரமான காலப் பிரமாணத்தில் பாடுகிறவர், விச்ராந்தியைத் திட்டமிட்டுப் புறக்கணிப்பானேன்...? (இக் கிருதிக்கு கணபதிராமன் தனி கவனத்துடன் ம்ருதங்கம் வாசித்ததைக் குறிப்பிட வேண்டும்) இந்தக் கேள்விகளுக்குக் கங்காதரன் பதில் சொல்லாவிட்டாலும் பாதகமில்லை... அவர் துரத்தி துரத்திப் பாடுகிற ப்ருகாக்களையாவது வழுக்கல் சறுக்கலின்றி கச்சிதப் படுத்திக் கொள்ளட்டும்; புண்ணியமாய்ப் போகும்!



• சுபா



• ஸ்ரீராம் கங்காதரன்

தம்பூரா இல்லாமல் மேடை ஏறிய மற்றொரு கலைஞர் சுபா கணேசன். எலக்ட்ரானிக் சுருதிப் பெட்டியின் ஒலி, பிரும்மாண்டமான ராமாராவ் கலா மண்டப அரங்கில் காணாமல் போக, மேடையிலிருந்த மூன்று கலைஞர்களும் சற்று நேரம் ஆளுக்கொரு சுருதியில் இசைத்துக்கொண்டிருந்தனர்!

நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாடமிக்கான நிகழ்ச்சியை வஸந்தா வர்ணத்துடன் ஆரம்பித்தார் சுபா கணேசன். ஒன்றரை மணி நேர நிகழ்ச்சிக்குள் நிறைய அடக்க முயன்றவர் கச்சேரியை நிர்வகிக்கத் திணறிப் போனார். மத்யமாவதியில் சாஸ்திரத்துக்கு நிரவல் செய்துவிட்டு ஸ்வரத்துக்குத் தாவி தீர்மானம் வைத்து தனியாவர்த்தனம் விட்டபோது,



'நேரமில்லை வேண்டாம்' என்று ராஜசேகர் கெஞ்ச, 'பரவாயில்லை வாசியுங்கள்' என்று சுபா மிஞ்ச, கல்யாணப் பந்தியில் கடலைப் பருப்பு கோசுமல்லி போல் ஒரு கம்பல்ஸரி தனியாவர்த்தனம் அரங்கேறியது - ஸாரி சடங்கேறியது!

பாடல்களின் முடிவில் மினி ஆலாபனைகள் செய்து நிறுத்துவதை மாற்றிக் கொண்டால் சிறிய கச்சேரிகளில் நேர நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால் சுபா கணேசனுக்கு ப்ருகாக்களைப் போலவே இந்த குட்டி ஆலாபனைகளையும் பிடித்திருக்கிறது. அகாரமே கொடுக்காமல் ஓட்டு ஓட்டென்று ஓட்டி, ஷண்முகப்ரியாவை ஷண்ப்ருகாப்ரியாவாகப் பொழிந்து விட்டார். மேலக்காவேரி தியாகராஜனின் வயலின் சற்று சோகையாக எதிரொலித்தது. சுபாவின் சுருதிக்குக் கட்டுப்பாடுடன் வாசிப்பது அவஸ்தையாயிருந்தது.

ஷண்முகப்ரியாவில் கல்பனை ஸ்வரங்கள் எதிர்பார்த்த பாதையில் சென்று திரும்பின.

'ஏதய்யா கதி'யின் பாடாந்தர சுத்தம் 'அட, கேளைய்யா என்று நிமிர்ந்து உட்கார வைத்தது. மத்யமாவதி ஆலாபனையின் ஆரம்ப சஞ்சாரங்களின் இழைத்த அழகு, சீக்கிரமே சராசரி பிரயோகங்களுக்கு இடங்கொடுத்துவிட, வயலின் கலைஞர் பிருகாக்களில் தடுக்கி விழுந்தவாறே பின்தொடர... கீர்த்தனைக்கான 'பில்ட் அப்' கிடைக்காது போயிற்று.



• ஹைதராபாத் சகோதரிகள்

அவசியமான வரிகளைக்கொண்டு அழகான கடிதமெழுதுவதுபோல் அமைந்தது ஹைதராபாத் சகோதரிகள் லலிதா - ஹரிப்ரியாவின் கச்சேரி. அக்கரை சுபலக்ஷ்மி வயலின், பாம்பே பாலாஜி ம்ருதங்கம், பாபனாசம் சேதுராமன் கஞ்சிரா என்று ஆர்.ஆர்.சபாவில் நல்ல பக்கவாத்தியக்காரர்களையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அரங்கம்தான் ஹைதர் அலி காலத்துப் பழைமையைப் போர்த்திக் கொண்டு படுத்தும் மைக்குகள், முதுகொடிக்கும் இருக்கைகள் என்று இசைக்கும் ரசிகருக்கும் குறுக்கே நின்று இடைஞ்சல் செய்கிறது!

அந்த இடைஞ்சலைப் புறக்கணித்துவிட்டு இசையைக் கவனித்தால், கம்பீர நாட்டையில் கம்பீர ஆரம்பம் - மைசூர் வாசுதேவாச்சாரின் 'கிரிஜா ரமணா..' அதிகம் பாடப்படாத 'பரதேவதா' - தீக்ஷிதரின் தன்யாசி ராக கீர்த்தனை.

ஸ்ரீ ராமனின் கடைக்கண் பார்வையை தியாகராஜர் கோரும் 'கண்ட ஜூடுமி'யில் (லதாங்கி) 'கடைக்கண் பார்! பார்!' என்று நிரவல்!

நாடு முழுதும் ராம நாம யக்ஞம் நடத்தி பக்கம் பக்கமாகப் பிய்த்தெடுத்துக் கொண்டிருக்க, ஸ்ரீ ராமனுக்கு அன்று ஆர்.ஆர். சபாவை நோக்கி தாமரைக் கண்களைத் திருப்ப நேரமின்றிப் போய்விட்டதோ என்னவோ... நிரவலைத் தொடர்ந்த கற்பனை ஸ்வரங்கள் சுமார்தான்!

லலிதா ராகம் நிகழ்ச்சியின் பிரதான ஐட்டம். ஆலாபனை, நிரவல், ஸ்வரம் மூன்றுமே ஸ்யாமா சாஸ்திரியின் 'நன்னு ப்ரோவு லலிதா' கீர்த்தனைக்கு வந்தனம் செலுத்துகின்ற வினயமும் லாவண்யமும் மிக்க முயற்சிகளாக அமைந்தன. கீர்த்தனையும் அதை இயற்றியவரின் மனநிலையைப் பிரதிபலிக்கும் வலிமையான பாவத்துடன் வெளிப்பட்டது.

அக்கரை சுபலக்ஷ்மியைப் பற்றி மீண்டும் எழுதப் போவதில்லை. ஏற்கெனவே எழுதிய விமர்சனத்துக்கு 'டிட்டோ' போட்டுக் கொள்ளுங்கள்.

பாம்பே பாலாஜி, பாபனாசம் சேதுராமன் இணைந்தும் தனித்தனியேயும் வாசித்த ஆவர்த்தனம்... அதுவும் லலிதமாகவே இருந்தது!



பேதம் பார்க்காத புறாக்கள்!

பேருந்து நிலையத்திலிருந்து மணலூர்பேட்டை போகும் சாலையில் விரைகிறது நம் ஆட்டோ. சில நிமிடங்களில் எழில்மிகு நுழைவாயில் ஒன்று நம்மை வரவேற்க, அதற்கும் அப்பால், விண்ணைமுட்டும் திருவண்ணாமலையின் அடிவாரத்தில் கலைமகள் குடியிருக்கும் கோவிலாக கண்களுக்குத் தெரிவது 'சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி. வளாகத்திற்குள் நாம் நுழைந்தபோது மதிய உணவு இடைவேளை. மாணவர்கள் சிறகுகள் முளைத்துவிட்டது போல ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர். கல்லூரி வளாகத்தின் வலப்புறமிருந்து சைக்கிள் ஸ்டாண்டிலிருந்து ஒரு கானா பாணி பாடல் ஒலிக்க... அதற்கு ஒத்திசையாக இரண்டு ஜோடிக் கைகள் கரவொலி மூலம் லயம் சேர்த்துக் கொண்டிருந்தன.

"கையிலே சிலம்பிருக்கு
கண்ணிலே நெருப்பிருக்கு
கண்ணகிக்குக் கெடைக்கலீங்க நீதி
பையிலே பணமிருக்கு
அடியாளு பலமிருக்கு
பாரதியின் சிலைக்குக் கூட பீதி!"

"அட, இங்க பார்றா!" என்று வியந்தபடி பாடல் வந்த திசைக்குத் திரும்பினால் பைக்கில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்தார் மூன்றாமாண்டு உயிர்வேதியியல் துறை மாணவர் ரெங்கராஜ்.

அவரது பாடலுக்குத் தாளமிசைத்தவர்கள் முதலாண்டு மின்னணுவியல் மாணவர்களான விவேகானந்தனும், பன்னீர்செல்வமும்.

"சர்ச்சைக்குரிய நடப்பு அரசியலை கானாவாக்கிப் பாடிக் கொண்டிருக்கிறீர்களே, கல்லூரி நிர்வாகத்தில் கண்டு கொள்ளவே மாட்டார்களா" என்றதுதான் தாமதம்... "அய்யய்யோ நீங்களே போட்டுக் கொடுத்துடுவீங்க போல இருக்கு" என்று கோரஸாக அலறினார்கள் மூவரும்!

"லஞ்ச் ஹவர் மட்டும்தான் நாங்க கொஞ்சம் சுதந்திரமாகத் திரிகிற நேரம். வகுப்பு நேரங்களில் வாலைச் சுருட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அத்தனை கட்டுப்பாடு. அதனால்தான் எங்கள் கல்லூரியில் நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம்" என்று பெருமை பகிர்ந்தார்கள்.

"கல்லூரி புராணம் இருக்கட்டும். இப்போது நீங்கள் பாடினீர்களே கானா, இந்தப் பாடல் வகை எங்கே தோன்றியது தெரியுமா?" என்றதும், "இது தெரியாதுங்களா – சென்னை குப்பத்துக் குடிசை மக்களோட பாட்டு. நம்ம இசையமைப்பாளர் தேவாவுக்குச் சினிமாவில் முகவரி தேடித் தந்ததே கானா தானே" என்று தடாலடியாக பதில் தந்த ரெங்கராஜ்தான் கல்லூரியின் ஆஸ்தான பாடகர்.

கல்லூரி அளவில் தொடங்கி, பல்கலைகழகங்கள் அளவிலான பாட்டுப் போட்டிகள் வரை பரிசுகளை அள்ளி வந்திருக்கும் இவருக்கு எம்.எஸ்.சி. பயோகெமிஸ்ட்ரி படித்து ஒரு வேதியியல் விஞ்ஞானியாக வேண்டும் என்பது மட்டுமல்ல.. இன்னொரு பக்கம் ஒரு பின்னணிப் பாடகராகவேண்டும் என்ற இலட்சியமும் கைவசம் இருக்கிறது. இதற்காக பாதியில் விட்டுப்போன தனது கர்நாடக இசை வகுப்புகளுக்கு மறுபடியும் போகிறேன் என்கிறார்.

அந்தக் குழுவில் அடுத்து வாயைத் திறந்த கவிதை பாடியவர் விவேகாநந்தன்.

நிறங்களின் இசை ஓவியம்.
ஸ்வரங்களின் ஓவியம் இசை.
கேட்காத பாடலை இசைக்கிறது ஓவயிம்.
கண்காணாத ஓவியத்தை வரைகிறது இசை
இசை ஓவியம்... ஓர் கவிதை!

எப்படிப் பிறந்தது இந்தக் கவிதை என்றால், "இது எனது கவிதையல்ல இரவல் கவிதை. கவிஞர் அழகாமலைக் கறுப்பு எழுதிய கவிதை. ரெங்கராஜ் இசைக் கலைஞன் என்றால், இந்தப் பன்னீர் செல்வம் ஓர் அற்புத ஓவியன். அதைக் குறிப்பிடத்தான் இந்தக் கவிதை. கல்லூரி சார்பில் கலந்து கொண்ட பத்துக்கும் அதிக மான ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசோடு வந்தவன். சமீபத்தில் வனத்துறை நடத்திய ஓவியப் போட்டியில்

'காட்டில் யானைகள்' என்ற தலைப்பில் இவன் வரைந்த ஓவியத்திற்கு முதல் பரிசு கிடைத்தது. ஓர் ஆச்சர்யம், ஓவியங்கள் வரைய இவன் வண்ணங்கள் எதுவும் பயன்படுத்துவதில்லை, வெறும் ஸ்கெட்ச் பென்கள்தான்'' என்றதும் பன்னீர் செல்வம் தலையசைத்து ஆமோதிக்கிறார்.

''உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்றதும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி எதையும் விடுறதில்லை. என்ன ஒண்ணு எந்தப் போட்டிக்குப் போனாலும், எனது கல்லூரி சகாக்களே எனக்குப் போட்டியாக வந்துடுறாங்க... ரொம்ப ஆரோக்கியமா இருக்கு. கல்லூரி கல்வி இயக்ககம் இரத்ததானம் குறித்து சமீபத்தில் நடத்திய மாவட்ட அளவிலான போட்டிகளில் மொத்தம் எட்டு பரிசுகளோட திரும்பி வந்தோம்ன்னா பார்த்துக்கோங்களேன்'' என்ற விவேகானந்தன் அடுத்து புகழ்ந்தது சக்திதேவி என்பவரை.



கல்லூரி வைரம்

"அது யாருங்க சக்தி தேவி'' என்றோம்.

'நீங்கள் கிரீடம் சூட்டப் போகிற எங்கள் கல்லூரி வைரம். கணினியியல் இறுதியாண்டு படிக்கும் மாணவி சக்திதேவிதான் அந்தப் பெண்புலி. அவருக்குத் தெரியாத, அவர் சோபிக்காத தனித்திறன் என்று எதுவும் கிடையாது. அதோ புல்தரையில் அமர்ந்து தோழிகளோடு குவிஸ் நடத்திக் கொண்டிருக்கிறார் பாருங்கள்'' என்று கையைக் காட்டினார். அவர்களை நெருங்கியதும் 'விளம்பர இடைவேளைக்குப் பிறகு குவிஸ் தொடரும்' என்று சொல்லிவிட்டு, 'உங்களுக்கு யார் வேண்டும்' என்றார்கள் நம்மைப்பார்த்து. நீங்கள்தான் கல்லூரியின் வைரமாமே என்றதும் அவர்களுக்குப் புரிந்துபோய் கொஞ்ச நேரம் சந்தோஷக் கூச்சல் போட்டார்கள்.

கல்லூரி அளவில், கல்லூரிகளுக்கிடையே, மாவட்ட அளவில், மாநில அளவில் என்று சக்திதேவி கடந்த மூன்றாண்டுகளில் கலந்து கொண்டு அள்ளி வந்த பரிசுகள் மட்டும் இருபத்து ஒன்று. அறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு முரசொலி அறக்கட்டளை நடத்திய பாரதிதாசன் பாடலை ஒப்பிக்கும் போட்டியில் மாவட்ட அளவில் முதல் பரிசான ரூபாய் ஐயாயிரத்தை வென்று வந்ததோடு, பிறகு அண்ணா அறிவாலயத்தில் மாநில அளவில் நடத்தப்பட்ட போட்டியில் கலந்து கொண்டு ஆறுதல் பரிசோடு திரும்பி வந்திருக்கிறார். படிப்பிலும் படுவேகமானவர் சக்திதேவிதான். கல்லூரியிலேயே அதிக விழுக்காடு மதிப்பெண் பெற்று, மூன்றாண்டுகளும் தொடர்ந்து சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். உங்களுக்கு மட்டும் இது எப்படிச் சாத்தியம் என்றால், "எனது பெற்றோர்தான் முதல் காரணம்'' என்கிறார். ''எனக்கு முழுச் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சுதந்திரத்தை அவர்களின் பலவீனமாக எடுத்துக் கொள்ளாமல் எனது பலமாக மாற்றிக் கொண்



• ரெங்கராஜ்: விவேகானந்தன், பன்னீர் செல்வம்



டேன். இன்னொரு பக்கம் எங்கள் கல்லூரி முதல்வர் வே. ஆறுமுகம் அய்யாவும் எங்கள் தமிழ்த்துறைத் தலைவர் கோ. பொன்ரூபி சுமங்கலாவும் எங்களுக்குத் தரும் உற்சாகமும், ஊக்குவிப்பும் முக்கிய காரணம்" என்கிறார்.

இதை ஆமோதிக்கிறார். ஒரிஸ்ஸாவி லிருந்து இங்கே வந்து நுண்ணுயிரியல் இறுதி யாண்டு படித்து வரும் ரோசா சத்ய சுதா. "ஆறு முகம் அய்யா முதல்வராக வருவதற்கு முன்பு, மாணவிகள் மைதானத்தில் விளையாடக் கூடாது என்று கட்டுப்பாடு இருந்தது. அதை நீக்கி, மாணவ – மாணவியர் இடையே சகஜ நிலையைக் கொண்டு வந்தவர் எங்கள் புதிய முதல்வர்தான். இப்போது கல்லூரியில் எங் களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு'' என்று சொல்லும் மாணவி ரோசா, ஆங்கிலப் பேச்சுப் போட்டி என்றால் கல்லூரியின் சார்பில் அஸ்திரமாகப் புறப்பட்டு வெற்றியோடு திரும்பி வரும் வீராங்கனை.

"ஒரு வார்த்தை கூட தமிழ் தெரியாமல் இந்தக் கல்லூரிக்குள் நுழைந்தேன். இப்போது சரளமாக தமிழ் பேசுகிறேன்'' என்று சொல்லும் ரோசா, ஒரியப் பெண் எனற முறையில் ஒரிஸ்ஸா பட்டினிச் சாவுகளுக்காக வெட்கப் படுகிறேன் என்கிறார்.

சக்தி தேவி, ரோசா ஆகியோருடன் கூட் டணி அமைத்திருந்த இன்னுமிரு மாணவிகள் கணினியியல் இரண்டாமாண்டு பயின்று வரும் சுபாவும் தமிழரசியும். சுபா கல்லூரிக்குப் புகழ் சேர்த்த அத்லெட் எனறால் தமிழரசி தனது கவிதையால் கல்லூரிக்குப் புகழ் சேர்த்து வருகிறார். சமீபகாலமாய் யாருடைய கவிதை கள் உங்களை பாதித்தன என்றால், பாரதி யாம்! "இன்றைக்கு மட்டுமல்ல இன்னும் பல தலைமுறைகளுக்குப் பாரதியே பெரிய பாதிப்பை ஏற்படுத்த முடியும்'' என்று சொன்ன தமிழரசியிடம் விடைபெறுமுன் ஒரு கவிதை சொல்லுங்களேன் என்றோம்.

'ராஜகோபுரமோ
தர்க்கா கோபுரமோ
பேதம் பார்ப்பதில்லை
புறாக்கள்!'_ இன்றைய சூழ்நிலைக்குத் தேவைப்படும் கவிதைதான்! பெயரிலேயே தமிழை; தக்க வைத்திருக்கும் தமிழரசியிடம், திருமணத்திற்குப் பிறகும் கவிதை எழுதி தமிழரசியாகவே இருங்கள் என்றோம்.

"அதுக்குக் கவிதையை ரசிக்கத் தெரிந்த நல்ல கணவன் கிடைக்க வேண்டுமே" என்ற தும் அங்கே குபீர் சிரிப்பொலி எழுந்தது.

— ஜெயந்தன்

படங்கள்: ராஜன்

வற்றிக் கொண்டிருக்கும்
வாய்க்காலின்....
நாணல் புதரோரம்
ஒளிந்து கிடக்கும்
குழித் தண்ணீர்.
உச்சி வெய்யிலில்
தனிமையில்...
தப்புக் கதிர் பொறுக்கும்
சிறுமியின்...
தாகம் தீர்க்க.

குமுறி... குமுறி
எழுந்து வந்தும்
கரை தாண்டிச் செல்ல முடியா
அலைகளை,
நின்றோ... அமர்ந்தோ
பார்த்துவிட்டு
வீட்டிற்குத் திரும்பும்
மனிதர்கள்.

இளம்பிறை



இரண்டு பேர் இரண்டு பொக்கே ஒரு குறும்பு!

சென்னை இசை விழாவின் உயிர் மூச்சாகக் கருதப்படும் மியூசிக் அகடமி. காலை நேர லெக்சர் டெமான்ஸ்ட்ரேஷன் பிரிவில், கும்பகோணம் ராஜப்பா அய்யர் மிருதங்கம் பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கிறார். இவ்வாண்டு அகாடமியின் சங்கீத கலா ஆசார்யா விருது இவருக்கு. தமது உரையினூடே டாக்டர் காசி விச்வ நாதய்யர் என்பவர் மிருதங்க வாசிப்புக்கு வழங்கியுள்ள வளங்களைக் குறிப்பிடுகிறார். விச்வநாதய்யரின் மகன் அவரிடமிருந்து நிறைய கலைவளம் பெற்றிருப்பதாகச் சொல்கிறார்.

விரிவுரை முடிந்தபின் அதற்குப் பதிலுரை வழங்குகிறார் இசை விழாவின் இவ்வருடத் தலைவரும் சங்கீத கலாநிதி பட்டம் பெறுபவருமான உமையாள்புரம் சிவராமன். காசி விச்வநாதய்யர் தமது அப்பாதான் என்கிறார். ராஜப்பா அய்யர் பெயர் குறிப்பிடாது விட்ட விச்வநாதய்யரின் மகன் தாம்தான் என்கிறார்.

மறுநாள் வேறு நிகழ்ச்சியினூடே சிவராமன் பேசுகிறார். ராஜப்பா அய்யர், இவ்வாண்டு வித்வத் சபைத் தலைவராக விளங்கும் தம்மைக் குறிப்பிட்டுப் பேசாது விட்டதைச் சுட்டிக் காட்டுகிறார். ராஜப்பா அய்யர் இவ்வாறு செய்ததற்கான உள்நோக்கங்களை விவரிக்க முற்பட....

பார்வையாளர்களுள் ஒருவரான மூத்த வித்வான் எஸ்.ராஜம் எழுந்து நின்று, தனிப்பட்ட தகராறுகளை வித்வத் சபையில் விவாதித்து நேரத்தை வீணடிக்கலாகாது என்று சிவராமனை அமரச் செய்கிறார்...!

நடந்து முடிந்த (முடியாத?) இந்த சங்கீத சண்டை, புத்தாண்டு பிறப்பதற்குள்ளாகவாவது சுமுகமாய்த் தீரட்டும் என்று முடிவெடுத்து, ஒரு ஆக்கபூர்வமான குறும்பு செய்யத் துணிந்தோம்.

டிசம்பர் 27ஆம் தேதி காலை சரியாக ஏழு மணி... உமையாள்புரம் சிவராமன் அனுப்பியதாக ஒரு மலர்ச் செண்டை கல்கி பிரதிநிதி ப்ரியன், ராஜப்பா அய்யர் வீட்டுக்கு எடுத்துச் சென்றார். 'ராஜப்பா அய்யர் அனுப்பினார்' என்று ஒரு பொக்கே சுமந்து கல்கி பிரதிநிதி எஸ். சந்திரமௌலி உமையாள்புரம் சிவராமன் வீட்டுக்குப் போனார். நடந்தது என்ன..? நேரில் சென்றவர்களே விவரிக்கிறார்கள்.

மயிலை ரங்காச்சாரி சாலையில் உமையாள்புரம் வீடு. கையில் பொக்கேவுடன் ஹாலில் காத்திருந்த சில வினாடிகளுக்குள் உமையாள்புரம் வந்தார். பார்வையிலேயே ஏகப்பட்ட கேள்விகள்.

"கும்பகோணம் ராஜப்பா அய்யர் வீட்டிலிருந்து வருகிறேன். அவர் இந்த பொக்கேவை உங்களிடம் நேரில் பார்த்துத் தரச் சொன்னார்."

"நீங்கள் அவரிடம் மிருதங்கம் கற்றுக் கொள்கிறீர்களா..?"

"இல்லை. அவர் வீட்டில் இருக்கிறேன்."

"எதுக்கு இதெல்லாம்?"

"உங்களுக்கும் அவருக்கும் இந்த வருஷம் அகாடமியில் விருது கிடைத்திருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக மனஸ்தாபம்... அதைச் சரி செய்யத்தான்..."

"அபிப்ராய பேதமெல்லாம் ஒன்றுமில்லையே!"

"உங்கள் கையில் மலர்ச்செண்டைத் தரச் சொன்னார். தயவுசெய்து வாங்கிக் கொள்ளுங்கள்..."

"நான் வாங்கிக்கொள்ள மாட்டேன். இதோ இப்படி கீழே வைத்துவிட்டுப் போங்கள்!"

பொக்கேவைக் கீழே வைத்துவிட்டு அவரைப் பார்த்தால், "இதெல்லாம் வேண்டியதே இல்லை!" என்றார்.

உண்மையை விவரித்தேன்.

"நீங்களாக இது போலெல்லாம் ஏன் செய்கிறீர்கள்? இது சரியில்லை. எதற்காகப் பண்ணினீர்கள்..?" - டென்ஷனாகி விட்டார்.

"மன்னிக்கவும். வித்



* "எங்கிருந்தாலும் சிவராமன் நன் இருக்கட்டும்..." - ராஜப்பா அய்ய

வான்களிடையே சுமுக உறவு வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் செய்தோம்..."

"எனக்குப் பிடிக்கவில்லை..."

"உங்களைப் புண்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை."

கொஞ்சம் 'கூல்' ஆனார் மனிதர். காம்பவுண்டுக்கு வெளியே காத்திருந்த போட்டோகிராபரை அழைத்தேன். 'போட்டோ எடுக்க வேண்டும் பொக்கேவை வாங்கிக் கொள்ளுங்கள்' என்றபோது "அதை நான் கையில் வைத்துக் கொள்ள மாட்டேன். உங்கள் கையிலேயே இருக்கட்டும்" என்று மறுத்து போட்டோவுக்கு மட்டும் போஸ் கொடுத்தார்.



* "மலர்ச் செண்டை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்..." - சிவராமன்

பொக்கேவை மறுபடி கீழே வைத்து விட்டுப் புறப்பட்டோம்!

கோடம்பாக்கம் ராம் தியேட்டர் எதிரே கங்கையம்மன் கோயில் குடியிருப்பு. நான்காவது தெருவில் ஆறாம் எண்... ராஜப்பா அய்யர் வீடுதான் என்று உள்ளேயிருந்து வரும் பெண் உறுதி செய்கிறார்.

நான்குமுழ வேஷ்டி, அரைக்கை கதர்ச் சட்டை அணிந்து முதியவர் ஒருவர் வெளிப்படுகிறார்.

"நான்தான் ராஜப்பா.. நீங்க?" என்று இழுக்கிறார். இலேசான பதற்றம் அவர் முகத்தில். அவரை ஆசுவாசப்படுத்தும் விதமாக 'உள்ளே போய்ப் பேசலாமா?' என்று கேட்க, பக்கத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட மிருதங்க வகுப்பறைக்கு அழைத்துப் போய், தரையில் பாய் விரித்து உட்காரச் சொல்கிறார்.

"இந்த மலர்ச் செண்டை உமையாள்புரம் சிவராமன் உங்களுக்கு அனுப்பியிருக்கிறார், அன்பின் அடையாளமாக..."

"என்ன? என்ன?" ஆச்சர்யமும் பதற்றமும் குரலில் போட்டி போடுகின்றன. "எங்களுக்குள் டச்சே இல்லையே...?"

"முதலில் இதை வாங்கிக் கொள்ளுங்கள்."

மிகுந்த தயக்கத்துடன் பெற்றுக்கொண்டு... மௌனமாகிறார். கனத்த மௌனம், இரு நிமிடங்களுக்கு...

இவரைப் போய் ஏமாற்றுகிறோமே என்ற குற்ற உணர்வில் குனிந்த தலையை நிமிர்த்திப் பார்த்தால்... பெரியவரின் கண்களில் கண்ணீர்! இடுப்புத் துண்டால் இலேசாகத் துடைத்துக் கொள்கிறார்.

அந்தச் சமயம் பார்த்து, சிவராமன் வீட்டுக்குச் சென்ற சந்திரமௌலி செல்ஃபோனில் அழைக்க,

"யார்? யார்? சிவராமனா பேசுகிறார்..?" என்று ஆவல் பொங்க கேட்கிறார் ராஜப்பா அய்யர்.

இதற்கு மேலும் விளையாடுவது முறை அல்ல.. விஷயத்தை விளக்குகிறோம்.

சிவராமனிடமிருந்து பொக்கே வரவில்லை என்றதும் அவரிடம் சற்று ஏமாற்றம்.

"இந்த மலர்ச் செண்டை அவருக்கே கொண்டுபோய்க் கொடுங்களேன்..."

"அவருக்கும் இதுபோல் ஒன்று போயிருக்கிறது. இந்த சங்கீத சீசனில் இரண்டு பெரிய வித்வான்களிடையே நல்லுறவு மீண்டும் மலர நாங்கள் எடுத்த முயற்சி... போட்டோ எடுக்க வேண்டும்..."

சட்டை மாட்டிக் கொண்டு வருகிறார். "இசைக்கு கல்கி பத்திரிகை செய்துள்ளவை நிறைய்ய..." என்று பாராட்டுகிறார்.

"எங்கே பேசினாலும் 'எனக்கு ஐந்து குரு' என்று என்னையும் சேர்த்துப் பெருமையாகப் பேசிக் கொண்டிருப்பார் சிவராமன். ஆனால், சமீப காலமாக என்னை அவமானப்படுத்தும் விதமாக, என் பெயரை விட்டுவிட்டு நான்கு குரு என்று பேசி வருகிறார். அந்த மன வருத்தத்தில்தான் அகாடமியில் நான் சிவராமன் பெயரைச் சொல்லாதுவிட்டேன்."

"சரி... இப்போது அவருக்கு நீங்கள் தரும் செய்தி...?"

"அசுர சாதகம் செய்வார். அதற்கு அவருக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும் அவர்...."

படம் : **ராஜன்**

அட்டை, வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

மேஷம்

'கல...கல...கல..' இதென்ன சப்தம்? உங்க கல்லா நிரம்பும் ஓசைதான். பண நடமாட்டம் அந்தளவுக்குச் சீரோடும் சிறப்போடும் சந்தம் பாடும். உங்களுக்குப் பிடிச்ச கலர் என்னவாக இருந்தாலும், இந்த வாரம் சிவப்புமேல் ஆசை வையுங்க. அதுதான் அதிர்ஷ்டத்தை அள்ளிக் கொண்டு வரும். மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். சனி 2ல் உலவுவதால், சிறு சிறு பிரச்னைகள் ஏற்படும். முக்கியமாக தந்தை நலன் பாதிக்கப்படலாம். உஷார்! தான தருமம் செய்து வந்தால், துன்பம் துள்ளியோடிப் போகும்!

கடகம்

'துரு... துரு... துரு..' ஆஹா. ஏற்கெனவே சுறுசுறுப்பும், புத்திசாலித்தனமும் கொண்ட உங்களுக்குக் கிரக சஞ்சாரம் வேறு கை கொடுத்து, மதிப்பு, செல்வாக்கை உயர்த்தப் போகிறது. வியாபாரிகள் வளர்ச்சி காண்பார்கள். பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருந்தாலும், கஜானா காலி ஆகாது. கணவன் - மனைவி உறவு சீராக இல்லை. 8ல் செவ்வாய், 12ல் ராகு என்பதால், பயணம் தவிர்ப்பது நல்லது. விபத்து நேரிடலாம். இயந்திரப் பணியாளர்கள் எச்சரிக்கையுடன் செயல்படவும். நல்லவர்கள் சகவாசம் செய்யவும். மகான் தரிசனம் அமைதி தரும்.

ரிஷபம்

'மள... மள... மள..' இதென்ன கூத்து? உங்கள் செயல் காணும் வேகம்தான். அந்தளவுக்கு அறிவாற்றலும், நிர்வாகத்திறமையும் கூடும். மனை, நிலம், வீடு, வாகனம் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். கலைத் துறைக்காரர்கள் உச்சம் காண்பார்கள். மாணவர்களின் உழைப்புக்கேற்ற பலன் நிச்சயம். கோர்ட் விவகாரங்களில் அனுகூலமான பலன் கிடைக்கும். 8ல் சூரியன், அதுவும் கேதுவுடன் கூட்டு என்பதால், உடல் ஆரோக்கியம் ஒரு நாள் போல மறுநாள் இராது. அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரும். கிரக வழிபாடு நன்மை தரும்.

சிம்மம்

'பள... பள... பள..' உங்கள் முகவசீகரம் பெறப் போகும் அழகுதான் இப்படி வர்ணிக்கப்பட்டுள்ளது. 11ல் ராகு, 5ல் சுக்கிரன் இருப்பதால், அறிவாற்றல் அதிகரிக்கும். விஞ்ஞானம், எலக்ட்ரானிக்ஸ் துறைக்காரர்களுக்குச் சாதகமான வாரம். 10ல் சனி உலவுவதால் உழைப்பு அதிகரிக்கும். ஆனால் பயன் தரும் உழைப்பு என்பதால், கவலையில்லை. வாரப் பின்பகுதியில் நல்ல பலன்கள் கூடி வரும். ஸ்பெகுலேஷன் இனங்களில் ஈடுபட வேண்டாம். பலனிருக்காது. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். வாழ்த்துக்கள்.

மிதுனம்

'சல... சல... சல..' வேறென்ன. கணவன் - மனைவி உறவுக்குள் காணும் சின்ன சலசலப்பு ஒலிதான். வாரம் முழுக்க முக்கியமான கிரக சஞ்சாரம் அனுகூலமாக இல்லாத நிலையில் வேறென்ன எதிர்பார்க்க முடியும்? எதையும் அமைதியாகவும் பக்குவமாகவும் அணுகுவது நல்லது. கூட்டுத் தொழில் செய்பவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். பெண்களுக்கு மாமூலான பலன்கள் நடக்கும். புதிய முயற்சிகள் இப்போது வேண்டாம். கிரக சாந்தி செய்தி பயனடையுங்கள்.

கன்னி

'தட... தட... தட..' இதென்ன? உங்கள் எதிரிகள் ஓடிப் போகும் சப்தம்தான். எதிரிகள் மட்டுமல்ல, எதிர்ப்புகளும் கூடவே ஓடிப் போகும். கணிதம், எழுத்து, பத்திரிகை, சிற்பம், ஓவியம் போன்ற துறைக்காரர்கள் முன்னணிக்கு வருவீர்கள். பெண்கள் நோக்கம் நிறைவேறும். பயணம் அனுகூலம் தரும். பணநடமாட்டம் சீராக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். புனித காரியங்களில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் உருவாகும். சாதுக்கள் தரிசனம் கிடைக்கும்.

நடக்குமென்பார்; நடக்கும்!



ரிஷப ராசிக்காரரான வீணை ஜெயந்தி உடல் நலத்தில் கவனம் வைப்பது நல்லதாம்.

துலாம்

'நற... நற... நற...' அகலக் கால் வைத்து, சறுக்கி விழுந்த துலாம் ராசிக்காரர்கள் பல்லைக் கடிக்கும் சப்தம் கேட்கிறதா? செவ்வாய், ராகு 9ல் கூட்டாஞ்சோறு ஆக்குகிறார்கள். குருபலமும் குறைவு. அதனால்தான் குழப்பம், சஞ்சலம் என அதிருப்தி சிம்மாசனமிட்டு உள்ளது. ஆனால் வார இறுதியில் அனுகூலமான திருப்பங்கள் இருக்கின்றன. அரசாங்க ஆதரவு கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். தெய்வீகப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். வாழ்க்கை வசதி பெருகும்.

விருச்சிகம்

'டும்... டும்... டும்...' குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்போது, மங்கள ஒலி முழங்காமலிருக்குமா என்ன? பெண்களின் எண்ணங்கள், அபிலாஷைகள் நிறைவேறும். கணவன் - மனைவி உறவு நிலை சீராக இருக்கும். விஞ்ஞானம், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். மாணவர்கள் திறமை வெளிப்படும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது அவசியம். பேச்சில் கடுமையே கூடாது. வார இறுதியில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம். தெய்வப் பிரார்த்தனை ஜெயிக்க வழி சொல்லும்.

தனுசு

'ஜிலு... ஜிலு... ஜிலு...' எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றியே கிட்டினால், மனசோட கிளைமேட் இப்படித்தான் ஏஸி போட்டது போல ஜில்லுன்னு இருக்கும். செவ்வாய் 3ல் மற்றும் சனி 6ல் என்பதால், வெற்றி நடை போடுவீங்க. விவசாயிகளும் தொழிலாளிகளும் உயர்வு பெறுவார்கள். கூட்டுத் தொழில் புரிபவர்கள் லாபம் பெறுவார்கள். உலோகம், இராசாயனம் வகைகள் ஆதாயம் காட்டும். சுக்ரபலம் காரணமாக, கலைத் துறையினர் வளர்ச்சி காண்பார்கள். ராகு, கேதுவுக்கு ப்ரீதி செய்யுங்கள். நன்மையே நடக்கும்.

மகரம்

'பட... பட... பட...' மகர ராசிக்காரர்கள் பேச்சில் தவிர்க்க வேண்டியது இதைத் தான். எண்ணமோ, சொல்லோ, செயலோ, படபடப்பே இருக்கக் கூடாது. வீண்வாக்கு வாதம், சண்டை சச்சரவுகள், சம்மன் இல்லாமல் ஆஜராகும். உஷார். நிதானம் தவறாமல், சமூகமாகப் பழக வேண்டும். புதிய முயற்சிகள் கூடாது. வெளிநாட்டுத் தொடர்புகள் நன்மை தரும். செலவினங்கள் கட்டுக்கடங்காமல் போகலாம். சிக்கனம் தேவை இக்கணம். கிரக சாந்தி, ஹோமம், மன அமைதி தரும்.

கும்பம்

'ஹா... ஹா... ஹா...' கேளிக்கை, விருந்து, விளையாட்டு என்று வாரம் முழுக்க உல்லாசமாய்ப் பொழுது போக்கப் போகும் கும்ப ராசிக்காரர்களின் சிரிப்பொலிதான் இது. சினிமா, நாடகம், சங்கீதம் போன்ற துறைக்காரர்கள் வரவேற்பும் பாராட்டும் பெறுவீர்கள். நண்பர்கள், நெருங்கிய உறவினர்கள் உதவி கிடைக்கும். நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள், தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். கணவன் - மனைவி உறவில் பரஸ்பரம் பாசம் பொங்கும். வெளிநாட்டுத் தொடர்பு அளவோடு நலம் தரும். பயணத்தில் கவனம் தேவை.

மீனம்

'கிடு... கிடு... கிடு...' அதிகரிக்கப்போகும் உங்களுடைய பராக்கிரமத்தின் ரேட்டிங் இது. உழைப்பும் திறமையும் வீண் போகாது. அரசியல்வாதிகள் அந்தஸ்து உயரும். ஞான மார்க்கத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள். உடல்நலம் சீராக இருக்கும். 4ல் குரு அதுவும் ராகுவுடன் வக்ரம் என்பதால் சிறு சிறு சங்கடங்கள் அவ்வப்போது ஏற்படும். எரி பொருள், மின்சாரம், வெடி மருந்து, நெருப்பு, கூரிய ஆயுதம் போன்றவற்றால் ஆபத்து நேரிடலாம். உஷார். கைப்பொருள் பத்திரம். கேளிக்கை, உல்லாசங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது.

“இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் உங்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்படி முதலில் 'சோவிடம் சொன்னார்கள்; அவர் தேர்ந்தெடுத்த இருக்கை காலியாக இருந்ததால், என்னிடம் வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள். நல்ல வேளையாக, நான் தேர்ந்தெடுத்த இருக்கையில் கோபால் என்ற அன்பர் இருந்தார். இப்படித்தான் இன்று முதலமைச்சர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்” என்று கோவையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் கிருஷ்ண ராஜ் வாணவராயர் தன் பேச்சைத் துவக்கியதும் கைத்தட்டலில் அதிர்ந்தது அரங்கம்.

அடுத்துப் பேசிய சோ, தனக்கேயுரிய நகைச்சுவையுடன் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட நபர், எங்களோடு மேடையில் பக்கத்தில், நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அரசியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல்வர் இப்படி பக்கத்தில் உட்கார முடியுமா?” என்று சொன்னதும், மறுபடி 'க்ளாப்ஸ்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று ஏசு பிரானையும், உலக அமைதியையும் தவிர்த்து, ஏனைய 'பல அரிய'





• வாணவராயர்



• சவிதா

மூணுக்கு ஐம்பது; ஐந்துக்கு நூறு!

நிகழ்ச்சிகளை பல்வேறு சேனல்களும் ஒளி பரப்பிக் கொண்டிருக்க, அவற்றைப் புறக் கணித்துவிட்டு, சென்னை காமராஜர் அரங் கத்தில் கூடியிருந்தனர் மக்கள்.

கல்கி – ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து நடத்திய நில் கவனி வெற்றிகொள் வரிசையில் இறுதி நிகழ்ச்சியாக 'தர்மம்' என்ற தலைப்பில், சோ, வாணவராயர் பேச்சைக் கேட்கத்தான் இத்தனைக் கூட்டம்!

இறை வணக்கம் பாடி நிகழ்ச்சியைத் துவக்கினார் சவிதா கார்த்திக். ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி தனது வரவேற்புரையில் சொன்னதன் ஹை லைட்: தர்மத்தின் பொருட்டு எதுவும் அழியலாம்; ஆனால் எதன் பொருட்டும் தர்மம் அழிந்து விடக் கூடாது என்பதுதான்!

அடுத்து மைக்கைப் பிடித்தார் சிறப்புப் பேச்சாளரான தொழிலதிபர் கிருஷ்ணராஜ வாணவராயர்:

"பசி என்று வருகிறவனுக்கு உணவிட்டால், வயிறு நிறைந்து அவன் வாழ்த்துவான். ஆனால், அடுத்த தடவை பசிக்கிறபோது, மறுபடி வருவான். நோயுற்றவனுக்குச் சிகிச்சை அளித்தால், குணமடைந்து வாழ்த்திவிட்டுச் சென்றாலும், மறுபடி உடம்புக்கு ஏதாவது என்றால் வரக்கூடும். ஆனால், ஒரு மனிதனுக்கு, தன்னையே அறிந்து கொள்ள வாய்ப்பும், பயிற்சியும் அளித்தால், அவன் மறுபடி வர மாட்டான் என்பது மட்டுமில்லை; அவன் சமுதாயத்தில் மற்றவர்களுக்கும் பயனுள்ள விதத்தில் இருப்பான்" என்று விவேகானந்தரை மேற்கோள்காட்டிப் பேசினார் வாணவராயர்.

"இன்று சமுதாயத்தில் நிலவும் பிரச்னைகளுக்குப் படித்தவர் மத்தியில் உள்ள அலட்சியப் போக்கும், படிக்காதவர் மத்தியில் உள்ள அறியாமையும்தான் காரணம். அதனால் தான், தர்மம் என்பதெல்லாம் இன்றைய உலகிற்கு ஒத்துவராத ஒன்று என்று நினைக்கிறார்கள். அவசியமில்லாத ஒன்று என்று கருதுகிறார்கள். 'தர்மம்' என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே இன்று பலரும் 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் மறுபடியும் வெல்லும்' என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

"இன்றைய காலகட்டத்தில் மூன்று விஷயங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. எப்படிப் பணம் சம்பாதிப்பது? எப்படி அதிகாரத்தை அனுபவிப்பது? எப்படி விளம்பரம் பெறுவது? இந்த இலட்சியங்களோடுதான், இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஆதர்ச புருஷர்களாக இருக்க வேண்டியவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யார்? சந்தர்ப்பவாதத்தைத் தவிர, எதுவும் தெரியாத ஊழல் மிகுந்த அரசியல்வாதிகள், மக்களைப் பற்றிக் கவலைப்படாத, பொறுப்பற்ற அரசு அதிகாரிகள், லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, எதுவும் செய்யத் துணிந்துவிட்ட தொழிலதிபர்கள், பிசினஸ் புள்ளிகள். இவர்கள் அனைவரையுமே நான் குற்றம் சொல்லவில்லை. சில நல்லவர்களும் இருக்கிறார்கள்.

"இவர்கள் மூவரும் தனித்தனியாக இருந்தாலே நாடு தாங்காது. ஆனால், இப்போது இவர்கள் ஒரு கூட்டணியே அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விளைவு? ஜனநாயகம் என்பது மக்களால், மக்களுக்காக, நடத்தப்படும் அரசு என்கிற விளக்கத்தை மாற்றி, டி.என். சேஷன் ஒருமுறை குறிப்பிட்டதுபோல, ஒரு சில மக்களால், ஒரு சில மக்களுக்காக நடத்தப்படுவது என்று புது விளக்கம் பெற்று விட்டது.

"சரி! இன்றைய பொருளாதாரம் எப்படி இருக்கிறது. உலக சந்தை, உலக மயமாக்குதல், போட்டி வியாபாரம் என்று வந்து விட்டது. எதையும் எதிர்கொள்ளும் திறமைசாலியே தாக்குப் பிடிக்க முடியும் என்ற போட்டிகள் நிறைந்த சூழல் இன்று நிலவுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 'ஒவ்வொருவரும் எதையும் தாக்குப்பிடிக்கும் நிலையை உருவாக்குங்கள்' என்று காந்திஜி சொன்ன காந்தியப் பொருளாதாரத்தை மறந்து விட்டார்கள். எதையும் வெல்பவனே நிற்க முடியும் என்ற கொள்கை காட்டில் நடக்கும் மிருக ஆட்சியின் லட்சணம். மக்கள் வாழும் நாட்டில் கடைபிடிக்கத் தகுதியானது அல்ல.

"மூன்றாவதாக, புகழ் என்று வருகிறபோது இன்று மீடியாவின் கவனமும், அதீத விளம்பரமும் யாருக்குக் கிடைக்கிறது! அறிஞர்

களுக்கா? சிந்தனையாளர்களுக்கா? சாதனை யாளர்களுக்கா? இல்லை பின் லேடனுக்கும், வீரப்பனுக்கும் தான். உலகப் புகழ் பெற்ற டைம் பத்திரிகைக் கூட, தன் அட்டையில் பின் லேடனைப் பிரகரிக்கலாமா என்று வாசகர் களிடையே கருத்துக் கணிப்பு நடத்துகிறது.

''இந்தப் பின்னணியில், இன்றைய இளைஞர்களுக்குத் தர்மத்தைப் பற்றிச் சொன்னால் எடுபடுமா?

"சுதந்திரமடைந்த ஐம்பத்து நான்கு ஆண்டுகளில், கல்வியை நாம் பெருமளவில் பரவச் செய்திருக்கிறோம். ஆனாலும் பலன் என்ன? மனித உறுப்புகளையே திருடி விற்கத் துணியும் சில டாக்டர்கள், ராணுவ ரகசியங்களை விற்கத் துணிந்த சில விஞ்ஞானிகள், பயங்கரமான குற்றவாளிகளுக்காக, பகிரங்கமாக வாதாடக் கூடிய சில வழக்கறிஞர்கள், பொருளாதாரக் குற்றங்களைத் துணிந்து செய்கிறவர்களுக்குத் துணைபோகும் சார்ட்டர்டு அக்கவுண்டென்ட்கள், பரபரப்புக்கு மட்டுமே முக்கியத்துவம் தரும் பத்திரிகையாளர்கள்!

"இதற்கெல்லாம் மேலாக, இதுவரை கிரிக்கெட்டில் மூனுக்கு ஐம்பது, ஐந்துக்கு நூறு என்று சொன்னால், ஐம்பது ரன்களுக்கு மூனு விக்கெட், நூறு ரன்களுக்கு ஐந்து விக்கெட் என்று பொருள். ஆனால் இன்று மூன்று விக்கெட்டுகள் விழ ஐம்பது லட்சம், ஐந்து விக்கெட்கள் விழ ஒரு கோடி என்று புது அர்த்தம் சொல்லப்படுகிறது. இதுதான் நாம் இன்று காண்கிற சமுதாயம்!

"இப்படிப்பட்ட சமுதாயத்தில், பெற்றோர்கள், மற்றவர்களைப்போல, நம் குழந்தைகளும் பணம் சம்பாதிக்க வேண்டும்; பேரும் புகழும் பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதே சமயம், 'நல்லவனாக இருக்க வேண்டும்' என்றும் நினைக்கிறார்கள். இதனால், இளைஞர்கள் குழம்பிப்போய் இருக்கிறார்கள். இதனால் தான் செப்டெம்பர் பதினொன்றும் (அமெரிக்காவில் தாக்குதல்) டிசம்பர் பதிமூன்றும் (நாடாளுமன்றத்தில் தாக்குதல்) நிகழ்கின்றன. இப்படிப்பட்ட நிகழ்வுகள், தொடரக் கூடாது எனறால் நாட்டில் தர்மம் தழைக்க வேண்டும்.

"அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, டாக்டர் ராதாகிருஷ்ணன், "ஆன்மிக அறியாமை நிலவுமானால், உடல் திறமையாலும் அறிவு பலத்தாலும், ஆபத்துக்களே அதிகம் ஏற்படும்'' என்றார். இன்றைய பிரச்னைகளுக்கெல்லாம் காரணம் என்ன என்பதையும் ஒரே வரியில் அவர் சொல்லிவிட்டார். நல்ல குணநலன்களுக்கும், நல்ல தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைதான் அவர் கூறும் காரணம். இதனால் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிற விளைவுகள் என்னென்ன? மதசகிப்புத் தன்மை இன்மை, இன வேறுபாடு, (சச்சினுக்கு நிகழ்ந்ததே!) பொருளாதாரச் சுரண்டல் அரசியல் அநாகரிகம், ஜாதிவேறுபாடு, கலாசார சீரழிவு, சுற்றுச்சூழல்கேடு... பொதுவாக, நம் குழந்தைகளுக்கு, நல்லதொரு எதிர்காலம் அமையவேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புவார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமை, எதிர்காலத்துக்கு நம் குழந்தைகளை எப்படி தயார்ப்படுத்தப்போகிறோம் என்ற கவலையை ஏற்படுத்தும்படியாக இருக்கிறது. இது, ஏதோ தமிழ் நாட்டுக்கு – இந்தியாவுக்கு மட்டுமில்லை. உலகத்துக்கும்தான்!

''எது எப்படி இருந்தாலும், இன்றைய இளைஞர்கள் முன்பு இரண்டு விதமான பாதைகள் விரிந்து கிடக்கின்றன. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று சாமானியனாகவும் வாழ்ந்து, சாகலாம், தியாகம் புரிந்து லட்சியத்துடன் உழைத்து, சாதனையாளனாகவும் மரணம் அடையலாம். இதில் எதை நம் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்! தேர்வு, முடிவு உங்கள் கையில்தான் உள்ளது.

"ஐம்பது வருடங்களுக்குமுன், இந்த கேள்வி எழுந்தபோது, நாட்டுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள். ஆனால் இன்று தனக்காக நாடு உட்பட எல்லாவற்றையும் தியாகம் செய்யத் துணிந்து விட்டார்கள்.

"இன்று எதற்கெடுத்தாலும் காலம் மாறி விட்டது என்று சமாதானம் சொல்லி விடுகிறோம். ஆனால் உண்மையில் நாம்தான் மாறி விட்டோம். நம் சௌகரியப்படி மாறிக் கொண்டு, காலம் மாறிவிட்டது என்று சொல்லி விடுகிறோம். மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது. எந்த ஒரு மாற்றமும், மாற்றத்தின் பொருட்டு நிகழக் கூடாது. இந்த சமுதாயத்தின் மேம்பாட்டுக்காகவே இருக்க வேண்டும். ஆனால் காலம் காலமாக மாற்றமே ஏற்படாத ஒரு விஷயம் உண்டு என்றால், அதுதான் தர்மம்.

''காலங்களில் எவ்வளவு மாற்றங்கள் வந்தாலும், மாறாமல் இருக்கின்ற ஒன்றை, மனிதன் பற்றி நின்றால், மாற்றங்களை எல்லாம்

நிகழ்ச்சியில் வாசகர் ஒருவரை சிறப்பு விருந்தினர்களுடன் இணைத்து மேடையில் இடம் தர முடிவு செய்யப்பட்டது. அதன்படி, காமராஜ் அரங்க இருக்கை வரைபடத்திலிருந்து கிருஷ்ணராஜ வாணவராயர் தேர்ந்தெடுத்த 'கே'வரிசை இருபத்தி ஏழாவது இருக்கையில் அமர்ந்திருந்த கோபால் மேடைக்கு அழைக்கப்பட்டார்.

ஆளுயர மாலை அணிவித்து, சால்வை போர்த்தி கௌரவிக்கப்பட்ட கோபால், சென்னை ராயப்பேட்டை இந்தியன் வங்கியில் மேனேஜராகப் பணிபுரிகிறார்.

சொந்த ஊர் கோவை. குடும்பம் திருச்சியில் இருக்கிறது. மூத்த பெண் எஞ்சினீயரிங் கல்லூரி மாணவி. அடுத்த மகன் பள்ளியில் படிக்கிறான்.

"தர்மம் பற்றி பேச்சைக் கேட்க வந்த எனக்கு, பேச்சாளர்களுடன் மேடையிலேயே அமரும் கௌரவம் கிடைத்தது இனிய ஆச்சரியம்'' என்கிறார் கோபால்.



• கோபால்

அவனால் எளிதில் சமாளிக்க முடியும். கடந்த நூற்றைம்பது ஆண்டுகளில், விஞ்ஞான முன்னேற்றம் காரணமாக, மனிதன் அந்த மாறாத ஒன்றைப் பற்றி நிற்கத் தவறியதால்தான், செப்டெம்பர் பதினொன்றும், டிசம்பர் பதிமூன்றும் என்பதை நாம் இப்போதாவது புரிந்து கொள்ளுவோம்.

"நாம், நமது செயல்களுக்குச் சௌகரியமாக வியாக்கியானம் செய்து கொள்ளுகிறோமேயொழிய, மாறாத ஒன்றான தர்மத்தைப் பற்றிக் கொள்ளுவதில்லை. தர்மம் என்பது, காம்ப்ரமைஸ் செய்து கொள்ளுகிற சமாசாரமும் இல்லை. நமக்கு முன் வாழ்ந்து சென்றவர்கள், தர்மத்தைக் கடைப்பிடிக்கத் தவறவில்லை. இலக்கை அடைவதைப் போலவே, இலக்கை நோக்கிச் செல்லும் பாதையும் முக்கியம் என்றார் மகாத்மா காந்தி. இன்று எப்படியும் பணம் சம்பாதிக்கலாம்; எப்படியும் அதிகாரத்தைக் கைப்பற்றலாம்; எப்படியும் புகழும், விளம்பரமும் அடையலாம் என்று நினைப்பவர்கள் மிகுந்து விட்டார்கள்.

"எளிய வாழ்க்கை; உயர்வான சிந்தனை" என்றார் காந்திஜி. அதை காமராஜும் கடைபிடித்தாரே! ஆனால், இன்று அது சாத்தியமில்லை என்று நினைக்கிறோம். காரணம் பேராசை அதிகமாகிவிட்டது.

'விவேகானந்தரிடம், 'இந்தியாவின் கொள்கை என்ன' என்று கேட்டபோது "சேவையும், தியாகமும்" என்று கூறினார். அவர் சொன்னபடி, ஆன்மிகத்தையும், விஞ்ஞானத்தையும் இணைத்துப் பார்க்கக் கூடிய ஒரு பார்வை அவசியம். விஞ்ஞானத்தை உலகின் அனைத்து மதங்களும் எதிர்த்தபோது அதை விரும்பி, வரவேற்பதாகக் கூறிய ஒரே துறவி விவேகானந்தர்தான். கம்ப்யூட்டரை வேண்டாம் என்று சொல்லவில்லை; கலாசாரமும் வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். பழையது என்பதாலேயே அதை முழுமையாக ஒதுக்கி விடாதீர்கள். புதிது என்பதாலேயே அப்படியே ஏற்றுக் கொண்டு விடாதீர்கள், நல்லவற்றை பழையதோ, புதியதோ கை நீட்டி ஏற்றுக் கொள்ளுங்கள். நல்லன அல்லாதவற்றை உதாசீனப்படுத்துங்கள்.

"தனியொரு மனிதராக உப்புசத்தியாகிரகம் செய்வேன் என்று காந்திஜி சொன்னபோது, பிரிட்டிஷ் அரசு நகைத்தது. ஆனால் அவர் குறிப்பிட்ட நாளில் கடற்கரை நோக்கி நடந்தபோது மக்கள் வெள்ளமெனத் திரண்டனர். அவர் கடற்கரையில் குனிந்து, ஒருபிடி உப்பை அள்ளிய தருணத்தை அங்கே நேரில் கண்ட லண்டன் டைம்ஸ் நிருபர், "அந்த வயதான மனிதர் குனிந்து உப்பை அள்ளிய கணம், ஆசிய பூமியே சிலிர்த்து அதிர்வதை நான் உணர்ந்தேன்' என்று லண்டனுக்குச் செய்தி அனுப்பினார். இப்படி சத்தியத்தின், தர்மத்தின் வலிமையை உலகுக்கு உணர்த்தினார் மகாத்மா.

"இன்று, கல்விக்கும், மதத்துக்கும் பெரிய பொறுப்பு இருக்கிறது. கல்வி தன் குறிக்கோளை விடுத்து, திசைமாறிப் போய்க் கொண்டிருக்கிறது. மதங்கள் மலிவான பக்தியைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. மனித மனங்களில் தெளிவு ஏற்படுத்தத் தவறிவிட்டன. ஆனாலும் நான் பெருமையுடன் சொல்லுவேன். எல்லாவளங்களும் ஏராளமாக கொண்ட தேசம் இது. நமக்கு உள்ளது போன்ற பத்தாயிரம் ஆண்டுகால கலாசாரப் பின்னணி, வேறு எவருக்கும் கிடையாது. இந்தியாவில் தோன்றியது போல, அவதார புருஷர்கள் வேறு எங்கும் தோன்றியது கிடையாது. எனவே, ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் குறியீட்டை வைத்து, இந்தியாவை முடிவு செய்து விடாதீர்கள்.

விவேகானந்தர் கூறியது என் நினைவுக்கு வருகிறது. இந்த நாட்டின் மீது இலேசாக தூசி படிந்துள்ளது. அதைத் துடைத்து எடுத்து விட்டால் அமர பாரதம் சுடர் விட்டுப் பிரகாசிப்பதைக் காணலாம். வாருங்கள்! தூசை அகற்றுவோம். அமரபாரதத்தை ஒளிவீசச் செய்வோம்."

வாணவராயரின் பேச்சைக்கேட்டு, எல்லோரும் ரொம்பவும் எமோஷனலாகிப் போனதற்கு, இடை விடாது ஒலித்த கைத் தட்டல்களே சாட்சி.

அடுத்து மைக்கைப் பிடித்தார் சோ! அரங்கின் வெளியில் வெய்யில் அடித்தாலும் உள்ளே 'சோ'வெனப் பொழிந்தது கருத்து மழை!

அதன் விவரங்களும் அதனைத் தொடர்ந்த விறுவிறுப்பான கேள்வி பதில்களும் அடுத்த இதழில்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**



1000 ரூபாய் சந்தேகம்!

நம் வீடுகளில், ஒன்றிரண்டு குழந்தைகளைச் சமாளிப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஆனால் இசை மழலைகள் என்று ஒரு டஜன் வாண்டுகளை வைத்து, இசை நிகழ்ச்சி நடத்தி வருகிறார் அபஸ்வரம் ராம்ஜி. கடந்த ஒரு வருடத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களிலும் முக்கால் செஞ்சுரி போட்டிருக்கிறது இசை மழலை டீம். இந்த வாண்டுகள் செய்த குறும்பொன்றைச் சொன்னார் ராம்ஜி.

"கோவையில் ஒரு கல்யாண ரிசப்ஷன் கச்சேரி. கோவை போய் இறங்கி விட்டோம். அவினாசி ரோட்டில், ஒரு ஹோட்டலில் தங்கினோம். ஒரு பெரிய ஹால், வழக்கமாக அங்கே ஏதாவது எக்ஸிபிஷன் நடந்து கொண்டிருக்கும். நாங்கள் போயிருந்த சமயத்திலும் நடந்துகொண்டிருந்தது.

வாண்டுகளை எக்ஸிபிஷனைச் சுற்றிப் பார்க்கச் சொல்லிவிட்டு, அவசர வேலையாக வெளியே சென்றேன்.

திரும்பியபோது வாண்டுகள் ஒரே கும்பலாக நின்று கொண்டிருக்க, ஒருவர் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். நான் அவரிடம் "பசங்கள் எல்லாம் கொஞ்சம் துறுதுறு டைப். ஏதாவது குறும்பு பண்ணியிருந்தால், மன்னித்து விடுங்கள்' என்று முன்னெச்சரிக்கையாக மன்னிப்பு கேட்டு விட்டேன். அவரோ, "உங்கள் குழந்தைகள் நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். எக்ஸிபிஷன் பார்க்க வந்த நான் பர்ஸைத் தொலைத்து விட்டேன். இவர்கள் கையில் அது கிடைக்கவே, என்னிடம் சேர்ப்பித்து விட்டார்கள். ரொம்ப தேங்க்ஸ்'' என்றார்.

ஆனாலும் புறப்படும்போது அவர் முகத்தில் ஏதோ இலேசான சந்தேகம் தெரிவதைக் கவனித்தேன்.

"பர்ஸில் எல்லாம் சரியாக இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

"இருக்கிறது. ஆனாலும் ஒரு புதிர். எனக்கு பர்ஸில் ஆயிரம் ரூபாய் நோட்டு வைத்திருந்ததாக ஞாபகம். ஆனால், இப்போது நூறு ரூபாய் நோட்டுகள் பத்து இருக்கின்றன'' என்றார்.

அவர் சென்றதும் 'ஆயிரம் ரூபாய் நோட்டு, நூறு ரூபாய்களாக எப்படி மாறும்? நம் பசங்கள் ஏதாவது குறும்பு பண்ணி இருப்பார்கள்' என்று எனக்குள் சந்தேகம்.

வாண்டுகளைக் கூப்பிட்டுக் கேட்டபோது நமுட்டுச் சிரிப்பு சிரித்தனர். அவர்களே புதிரையும் விடுவித்தனர். இதுமாதிரி பர்ஸ் தேடிக் கொடுத்தால், நேர்மையைப் பாராட்டி, ஏதாவது பரிசு கொடுப்பார்கள் என்று படித்திருக்கிறோம். இவர் அதுபோல பரிசு கொடுக்க விரும்பினால், சௌகரியமாக இருக்கட்டுமே என்றுதான் ஆயிரம் ரூபாயை நூறு ரூபாய்களாக மாற்றி வைத்தோம்.''

"குறும்பு ஓர்க் அவுட் ஆச்சா?'' என்றேன்.

"ம். இருநூறு ரூபாய் தேறிச்சு!''

- மௌலி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. **Tel & Fax: 237 6129.**
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our Website at: www.sspeetam.org

புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற 120 மாணவர்களும் 30 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka